Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 97 | சர்வதேச மின் செய்தித்தாள் | மே 15 2025

# முள்ளிவாய்க்கால் நினைவு நாள்
# Mullivaikkal Remembrance Day

ஈழத்தமிழின அழிப்பு நாள்
Eelam Thamil GENOCIDE DAY

தமிழ்த்தேசிய துக்க நாள்
Thamil National MOURNING DAY

Only in 2009
Over 146. 679 Eelam Thamils were murdered and more then 70,000 Thamils unaccounted. Over 95,000 Thamil Women Widowed by Sri Lanka's Government Forces, More then 50,000 Thamils Children Orphaned.

1948 தொடக்கம்
ஈழத் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு தொடர்கிறது...

Since 1948
Structural Genocide Continues Against Eela Thamils by Sri Lankan Government



2009 மே May 18
2025
16 Years ஆம் ஆண்டு

The Genocide of Thamils in Sri Lanka's one of the biggest tragedies of 21st century and the World still remains Silent.

Government of Canada & United Nations Recognize Thamil Eelam Genocide and demand International Investigation on Genocide of Eelam Thamils

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The Thirst of Thamils is the Homeland of Thamileelam"

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்






































## விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203



**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# Sangathamil சங்கத்தமிழ்

சர்வதேச மின் செய்தித்தாள்

## www.sangathamil.ca

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**உலகத்தில்
எந்த ஒரு நாடும்
இரத்தம் சிந்தாமலும்,
தியாகங்கள் புரியாமலும்
சுதந்திரம்
பெற்றதில்லை.**







## சங்கத்தமிழ்

**தொடர்புகளுக்கு**

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# லெப். கேணல் சுதந்திரா [செங்கதிர்]




அது ஒரு சிறப்பு அணி. அதிசிறப்பு அணி. காட்டின் சருகுகள் காலில் மிதிபடும் ஓசையைக் கூட எழும்பாது பதுங்கி நகர்ந்து, பார்வையைக் கூர்மையாக்கி இரைதேடி, பொருத்தமான இலக்கை மட்டுமே வேகப் பாய்ச்சலில் பாய்ந்து தாக்குகின்ற சிறுத்தை போன்றது அந்தச் சிறப்பு அணி. தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட அதன் உறுப்பினர்களும் சிறுத்தைகளை ஒத்தவர்களே, அடித்தால், இலக்குத் தப்பாது, தப்பவிடக்கூடாது.

மனிதர்களைச் சிறுத்தைகளாக்குகின்ற அந்த மாபெரும் முயற்சியில் சுதந்திரா முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்த நாட்கள் அவை. சிறப்பு அணிக்குரிய படைய தொடக்கப் பயிற்சித் தளத்தின் பொறுப்பதிகாரி அவர்.

அப்போதுதான் வீட்டிலிருந்து வந்த இளம் பெண்களை, 'உன்னால் முடியாது' என்று சமூகம் சொல்வதை நம்பி கடினமானவை என்று கருதப்படுகின்ற பணிகளை அப்பாக்கள் அண்ணாக்களின் உதவியோடு செய்தார்களை, அவர்கள் கனவில் கூட கண்டிருக்கமுடியாத வாழ்க்கைக்கு அழைத்துப் போவது அவ்வளவு எளிதானதல்ல.

அந்த கடின பணியைச் சுதந்திரா செய்து முடித்தார். அவர்களுக்கு ஒவ்வொரு விடயமாகச் சொல்லிக்கொடுத்தார். எது ஏன் செய்யப்படுகின்றது என்பதைப் புரிந்துகொண்டு அவர்கள் செய்ததனால், தலைவர் அவர்களின் எதிர்பார்ப்புக்கமைய அவர்களால் செயலாற்ற முடிந்தது.

அங்கே எல்லாமே நேரக் கணக்குப்படிதான், குறிக்கப்பட்ட நேரத்தினுள் எல்லோரும் உணவறையில் ஒன்றாக இருக்கைகளில் அமர்ந்து, பரிமாறப்படுகின்ற அதிகரித்த அளவிலான உணவை, கீழே சிந்தாமல், மிச்சம் மீதிவிடாமல் சாப்பிட்டே ஆக வேண்டும். மேற்பார்வையாளரின் விழிகள் அனைவரையும், அனைத்தையும் கவனித்துக் கொண்டேயிருக்கும். நேரம் கடந்தும் சாப்பிடமுடியாமல் திணறுபவர்கள் சுதந்திராவின் குடில் வாயிலில் நின்றவாறு சாப்பிட்டு முடிக்க நேரிடும.

அவர்களின் அதிகரித்த பயிற்சியால் எப்படி சக்தி இழக்கப்படுகின்றது என்றும், அதை ஈடுசெய்ய அவர்கள் அதிகம் சாப்பிட வேண்டிய தேவைபற்றியும் உள்ளிருந்து ஒலிக்கும் சுதந்திராவின் குரல் விளக்கும். ஒருமுறை நின்றவர்கள் மறுபடி குடில் வாயிலில் நிற்க வேண்டியிராது.

காலையில் ஓடு பாதைக்குப் போகுமுன் குடிக்கவேண்டிய அரை அவியல் முட்டை, வந்த புதிதில் பலருக்குச் சிக்கலாகவே இருக்கும். ஏன் முட்டை குடிக்கவேண்டும் என்று விளக்கியவாறே சுதந்திரா தன் கையாலேயே முட்டைகளை ஒவ்வொருவருக்கும் கொடுத்துக் கொண்டிருப்பார்.

ஓட்டம் தொடங்கும் புள்ளியில் சுதந்திரா நிற்பார். இரண்டாவது, மூன்றாவது சுற்று ஓடும்போதும் அதிலேயே நிற்பார் என்ற எண்ணத்தில் இடைவழியில் எவரேனும் நடக்கமுனைந்து நாலு அடி எடுத்து வைத்துவிட்டு நிமிர்ந்தால், எதிரேயுள்ள மரத்தோடு சாய்ந்தபடி சுதந்திரா நிற்பார். எந்த இடைவழிகளால் எப்படி அவர் வருகின்றார் என்பது ஒருவருக்கும் விளங்காது. திடீர் திடிரெனக் காட்சி தருகின்ற சுதந்திராவின் வருகையே எல்லோரையும் ஓடவைக்கப் போதுமானது.

பிழைகள் நடந்த வேளைகளில், கோபத்தை ஏற்படுத்தக் கூடிய மாதிரி பேசாமல், தாம் உணர்ந்து கொள்ளக்கூடியவாறு சுதந்திரா கதைத்ததாகவே அவரைப்பற்றி சிறப்பு அணியினர் இப்போதும் கூறுகின்றார்கள்.

போராளிகள் தவறுவிட்டால், அந்த அணித்தலைவரைக் கூப்பிட்டுக் கண்டிப்பார். கடுமையானவர்களுக்குக் கடுமையாக, இலகுவானவர்களுக்கு எளிமையாக அவரவர் இயல்புக்கேற்ப ஒவ்வொருவரையும் அணுகுகின்ற சுதந்திரா, 1993ம் ஆண்டின் இறுதியில் சிறப்பு அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டதிலிருந்து 1995ம் ஆண்டின் இறுதிவரை ஏழு அணிகளுக்கு சிறப்புப் பயிற்சியின் முன்னோடி படைய தொடக்கப் பயிற்சியை வழங்கியிருந்தார்.

கல்விப் பொதுத் தராதர (உ/த) கலைப்பிரிவு மாணவியாக இருந்த சுதந்திரா 1989ம் ஆண்டில் எமது அமைப்பில் இணைந்து கொண்டார். இந்திய வல்லாதிக்க படைகள் சூழ்ந்திருக்க, மணலாற்றுக் காட்டினுள்ளே தலைவர் அவர்களின் எதிர்பார்ப்புக்கேற்ற வகையில் மேஜர் சோதியா, மேஜர் சஞ்சிகா முதலானோர் பெண் போராளிகளுக்கென உருவாக்கிய 'விடியல்' பாசறையில், விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் ஐந்தாவது அணியில் தனது படைய தொடக்கப் பயிற்சியை நிறைவு செய்த சுதந்திரா, 1990ன் ஆரம்ப நாட்களில் இந்தியப் படையினரின் வெளியேற்றத்தோடு, மகளிர் படையணி காட்டுக்குள்ளிருந்து நாட்டுக்கு வருகை தந்தபோது, வெளிவந்திருந்தார்.

தொடக்க நாட்களில் படையணியின் களஞ்சியப் பொறுப்பாளராகவும், அறிக்கையாளராகவும் பணியாற்றியவர், 1990 ஆண்டிலேயே பலாலி - கட்டுவன் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறு அணியொன்றின் வழிநடத்துனராகவும் செயற்பட்டார்.

1991ல் ஆனையிறவு மீதான ஆகாய கடல் வெளி நடவடிக்கையின் முடிவில், அதிகாரிகளுக்கான சிறப்புப் பயிற்சி கற்கை நெறிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். லெப். கேணல் ராஜன் அவர்களால் நடாத்தப்பட்ட அந்த அதிகாரிகள் கல்லூரி ராஜனைப் போலவே ஒழுக்கமும் கண்டிப்பும் நிறைந்ததுதான். கட்டாயம் சுட்டு ஆறிய நீர்தான் எல்லோரும் குடிக்கவேண்டும். குளிர்பானம் தயாரிப்பதாயினும் அதில்தான். எதைக் குடித்தாலும் நோயே வராத உயர் எதிர்ப்பு சக்திவாய்ந்த எம்மவர்களுக்கு சுடவைத்த நீர் சுவை குறைந்திருப்பதாகத் தோன்றியது. ராஜனின் ஒப்புதலைப் பெறாமலேயே, ஒருநாள் சுடவைக்கப்படாத அதாவது சுவையான நீரில் குளிர்பானத்தைத் தயாரித்து எல்லோருக்கும் கொடுக்க, வந்தது வில்லங்கம். வயிற்றோட்டத்தால் அவதியுற்ற சுதந்திராவால் எல்லோருமே அகப்படவேண்டிய ஏதுநிலை தோன்றவே, அன்றோடு பச்சைத் தண்ணீரைக் கைவிட்டார்கள் சுதந்திராவைத் திட்டியவாறே.

எவருமே எதிர்பாராதவண்ணம் பேரிடியாய் நிகழ்ந்த லெப். கேணல் ராஜனின் வீரச்சாவோடு தமது பயிற்சியை இடைநிறுத்திய அதிகாரிகளுக்கு உடனே பணி காத்திருந்தது. 1992ல் தொண்டைமானாற்றிலிருந்து ஒட்டகப்புலம் வரையான நூற்றைம்பது காவலரண் அழிப்பு நடவடிக்கையில் பங்கேற்ற விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் அணிகளின் நிர்வாகப் பொறுப்பு இவரிடம் கொடுக்கப்பட்டது. அதுதான் முதல் அனுபவம் என்றாலும், சிறப்பாகவே தன் பங்கை ஆற்றியிருந்தார் சுதந்திரா.

நடவடிக்கையின் பின்னும் தாக்குதல் அணிகளோடே பெரும் பொழுதைக் கழித்த லெப். கேணல் சுதந்திரா, 1993ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் வரலாற்றுப் பக்கங்களிலிருந்து மறைந்து போனார். முடியாதது என்று எல்லோரும் எண்ணிக்கொண்டிருக்கும்போதே அதை முடித்துக் காட்டுகின்ற எமது தலைவர் அவர்கள் மிகுந்த நம்பிக்கையோடு பெண் போராளிகளை மட்டும் கொண்டதாக சிறுத்தைகளின் வேகங்கொண்ட ஒரு சிறப்பு அணியை 1992லேயே உருவாக்கினார். அது 1993ன் கடைசிப் பகுதியில் சுதந்திராவை உள்வாங்கிக்கொண்டது.

1995 பிற்பகுதிவரை படைய தொடக்கப் பயிற்சியோட நின்ற சுதந்திராவுக்கு, மறு ஆண்டே ஒரு புதிய பணி தரப்பட்டது. படைய தொடக்கப் பயிற்சியை முடித்திருந்த குறிப்பிட்ட தொகைப் போராளிகளுக்கு மேலதிகப் பயிற்சி வழங்கி, சிறப்பு அணியினரின் இரண்டாவது தலைமுறையை உருவாக்கும் பொறுப்பு இப்போது சுதந்திராவிடம்.

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி நோக்கிய மாபெரும் இடப்பெயர்வோடு சிறப்பு அணி வன்னியின் காடுகளுள் புகுந்துகொண்டது. பொருட்களை ஏற்றிவந்த ஊர்திகள் காட்டுக்கு வெளியே நின்றுகொள்ள, அத்தனை பொருட்களையும் போராளிகள் தலையிலும் தோளிலும் காவிச் சென்றனர். அதற்கிடையிலேயே காட்டுக்குள் சுதந்திராவின் அணியினர் காட்டுத் தடிகளால் குடில்கள் அமைத்து புற்களால் கூரை வேய்ந்து களஞ்சிய அறைகளைத் தயார் செய்துவிட்டனர். பொருட்கள் வருவதும், சுமப்பதும்,

அடுக்குவதும் இரவு பகலாக நடந்துகொண்டிருந்தது. பெருந் தளங்களே இடம்மாறிய காலமல்லவா அது?

சுதந்திரா தனது அணியினரை மூன்றாகப் பிரித்தார். ஒரு அணி குடில்களை அமைத்து கிணறு வெட்ட, ஒரு அணி பொருட் களைச் சுமக்க, ஒரு அணி தனது சிறப்புப் பயிற்சியை செய்து கொண்டிருக்கும். இது மூன்று அணிகளுக்கும் சுழற்சி முறை யில் வரும, இடப்பெயர்வு நடந்ததே தவிர. பயிற்சிகள் இடை நிறுத்தப்படவில்லை.

ஒரு பிஸ்கட் பேணியுடன் ஒரு அணி ஒருநாள் முழுதும் பயிற்சி எடுத்த நாட்கள் அவை, சில நாட்களில் அதுவும் இருக்க வில்லை. அப்படியான நேரங்களில் பாகையையும் தூரத்தை யும் கொடுத்து நீண்ட காவலுலாவுக்கு அணிகளை அனுப்பி விடுவார் சுதந்திரா. பாகையும் தூரமும் தரப்பட்டால், அன்று பட் டனிதான் என்று அணிகளுக்குப் புரிந்துவிடும்.

காட்டுக்குள் அமைக்கப்பட்ட களஞ்சியம் நிறையும்வரை இந்தக் கடின நாட்கள் தொடர்ந்தன. இப்போது எல்லாம் ஓரளவு சரி. நீர் வசதிதான் ஏற்படுத்தப்படவில்லை. தூரத்தேயுள்ள குளம் ஒன் றுதான் கைகொடுத்தது. அன்றிரவு களஞ்சியத்தினுள் போத்தல் விளக்கொன்றைத் தூக்கிப் பிடித்தபடி பொருட்கள் எடுப்பதற்காக வந்த போராளி ஒருவர், திடீர் காற்றுக்கு நெருப்பு அலைபாய்ந்து சட்டென குறைந்து கூடி எரிய அவரின் கைகள் தன்னிச்சை யாகப் போத்தலை வீசிவிட்டன.

தூரத்தே நின்ற சுதந்திரா மரங்களின் உச்சியைத் தொட்டவாறு உயர்ந்த நெருப்பைக் கண்டு ஓடிவந்து, நெருப்புக்குள் நின்று பொருட்களை எடுக்க முயன்று கொண்டிருந்த எல்லோரையும் வெளியே தள்ளிவிட்டு, தனியான தன்னை மறந்த நிலையில் கையில் அகப்பட்டவற்றை எடுத்து வெளியே எறிந்தார். போத் தல்கள் வெடித்து, பேணிகள் உருகி... ஒரு சிலவற்றைத் தவிர எல்லாம் நாசம்.

அமைப்புக்கு நாம் கடன்பட்டிருக்கின்றோம் என்று அந்த நிகழ்வு பற்றி அடிக்கடி அணியினரோடு கதைப்பார் அவர்.

அந்த சுடுகலன்கள் அப்போதுதான் அமைப்புக்குப் புதிதாகக் கிடைத்திருந்தன. ஆவற்றைத் தலைவர் அவர்கள் சிறப்பு அணி யினருக்கு வழங்கியிருந்தார். வழங்கப்பட்ட தொடக்க நாட்களில் எல்லோரது சுடுகலன்களையும் துப்பரவு செய்வது சுதந்திரா தான். ஒரு வாரமளவில் அணியினர் நன்கு பார்த்துப் பழகிய பின்பே, அவர்களைத் துப்பரவு செய்யவிட்டார். தூய்மைப்படுத் தலைச் சரிபார்க்கும் போது எப்படியோ எங்கேயோ ஒரு சிறு தூசு அவரின் கண்களில் பட்டுவிடும். நான்கு கரும்புலிகள் உட்பட பதினெட்டு கடற்புலிகள் தமது உயிர்களை விலையாகக் கொடுத்து தாயகத்துக்கு அனுப்பி வைத்த சுடுகலன்கள் அவை. அவற்றின் உயிர்ப் பெறுமதியை மீளவும் மீளவும் எல்லோ ருக்கும் நினைவுபடுத்துகின்ற சுதந்திரா, சுடுகலனைத் துப் பரவாக வைத்திருக்காதவர்களை உரிய ஒறுப்புக்குள் ளாக்குவார்.

சிறப்பு அணியின் இரண்டாவது அணி பயிற்சிகளை முடிக்க முன்பே சுதந்திராவை 'வெற்றி உறுதி' எதிர் நடவடிக்கைக் களம் அழைத்தது. அதுவரை நாளும் புளியங்குளம் பகுதியில் சிறப்பு அணியின் தாக்குதலணியை வழிநடத்திக் கொண்டிருந்த லெப்.கேணல் நந்தாவின் வெற்றிடத்தை நிரப்ப, சுதந்திரா புறப்பட்டார்.

நெருக்கடிகள் மிகுந்த வன்னிச் சமர்முனையில் நின்ற சிறப்பு அணியில் ஒரு அணியினருக்குப் புதியவகை வானூர்தி எதிர்ப்புப் பீரங்கியொன்றை இயக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. களமுனையில் நிற்கும் தனது அணியினரை மாறிமாறிப் பயிற் சிக்கு அனுப்பிவைப்பார். வேலை நெருக்கடியால் அவரால் தொடர்ச்சியாக அதில் ஈடுபட முடியவில்லை. காப்பரண் களிடையே காவல் உலா போகின்ற வேளைகளில்கூட வருபவரிடம் படித்த விடயங்களைக் கேட்டறிந்தார். நிலத்தில் படங்களைக் கீறிக் காட்டி, அவர்களிடம் சரிபார்த்துக் கொண்டார். வாய்ப்புக் கிடைத்த வேளைகளில் நேரடியாக போகத் தவறவில்லை, பயிற்சி நிறைவில் நடந்த சூட்டுப் போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்று, எல்லோரையும் ஆச்சரியப்பட வைக்கவும் தவறவில்லை அவர்.

அகல விரிந்த களமுனைகளெங்கும் சுதந்திராவின் கால்களும் நடந்தன. கரிப்பட்டமுறிப்பு, மூன்றுமுறிப்பு, ஒலுமடு, கிளி நொச்சி... இந்தக் காலப்பகுதியில் சிறப்பு அணி பங்கேற்ற ஊடுருவி உள்நுழையும் தாக்குதல்கள் சிலவற்றில் இவரும் இணைந்திருந்தார்.

1999ல் "ஓயாத அலைகள் - 03" சுழன்றடிக்கத் தொடங்கிய அன்று தன் அணியினரோடு ஒட்டுசுட்டான் பகுதியூடு உள் நுழைந்த சுதந்திரா, நெடுங்கேணி, மணலாறு வரையும் போனார். ஆண்டிறுதியில் இன்னுமொரு அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி அவரை உள்வாங்கிக்கொண்டது.

2000.04.01 அன்று இயக்கச்சி, முகாவில், பகுதியூடு நடந்த



முன்னேற்ற நடவடிக்கையில் ஏனைய அதிகாரிகளோடு அவரும் பங்கேற்றார். தொடர்ந்தும் நீண்டுவிரிந்த களம் இவரைத் தன்னோடு அழைத்துக் கொண்டது.

அமைப்பு எந்த வேளையில் எமக்கு எந்தப் பணியைத் தந் தாலும் ஏற்று செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்று அடிக்கடி கூறுவார். 'என்னை உடை தோய்க்குமாறு அமைப்பு வேலை தந்தால், உடைகளை எப்படி மிகச் சுத்தமாகத் தோய்க் கலாம் என்று பார்ப்பேனே தவிர, இந்த வேலையை நான் செய்வதா என்று கவலைப்பட மாட்டேன்" என்ற கேணல் கிட்டு அவர்களின் எடுகோளைக் குறிப்பிடுவார். சொன்னது போலவே செய்தும் காட்டினார்.

தம்மால் வளர்த்தெடுக்கப்பட்ட போராளியொருவர் தனக்கு மேலான பொறுப்பாளராக வந்தபோதும் அதை இயல்பாக ஏற்றுக்கொண்டு, அவரின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டார்.

'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே - சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' ஔவை சொல்லக் கேட்டதை, சுதந்திரா விடம் நேரே பார்த்தோம். அதனால்தான் சுதந்திராவின் இழப்புக்கு எல்லோருமே வருந்தினோம்.

ஒருவரின் இயல்பை அறிந்து பழகுவது, பழக்குவது அவரின் இயல்பு. சிறப்பு அணியினருக்கு காவலரண் வாழ்வு புதிது. அவர்கள் வெட்டிய காப்பரண்கள் இருந்த விதத்தைப் பார்த்த சுதந்திரா, மேலதிக ரவைக்கூட்டு அணியை அணிந்த நிலை யில் அவர்களை அதற்குள் இறக்கி ஏற்றி, என்ன பிழை என்று அவர்களிடமே கேட்டு, திருத்துவித்து, காவலரண் வாழ்வுக்குப் பழக்கினார்.

எப்போதும் எடுகோளாக இருப்பது அதுவும் அவரின் இயல்பு, புதிதாக வானூர்தி எதிர்ப்புப் பீரங்கி ஒன்று வந்தபோது, பொதி உடைக்கப்படாமல் இவர்களின் கையில் அது கொடுக்கப்பட்டது. குழல்வாய் மூடி மிக இறுக்கமாக இருந்ததால், எல்லோரும் கை விட்டுவிட, நாற்பத்தைந்து நிமிடங்களுக்கும் மேலாக தொடர்ந்து முயன்று மூடியை கழற்றினார்.

தரப்படும் பணிக்கு மறுப்புச் சொல்வது அவரின் வரலாற் றிலேயே கிடையாது. அது இல்லை, இது இல்லை என்று தாம திக்காமல், எது இருக்கின்றதோ அதைவைத்து வேலையைத் தொடங்கிவிடுவார்.
"ஓயாத அலைகள் - 04"ல் பங்கேற்ற அவர், 'கட்டம் - 02' மிகச் சிரமமான பாதைகளோடே நகர்ந்த போதும் நம்பிக்கையோடு அணிகளை வழிநடத்தினார்.

தன்னுடைய கடைசி நாட்களை மேஜர் சோதியா படையணி யுடன் முகமாலைப் பகுதியில் கழித்தார் அவர். ஒரு பெரும் பலம் தமக்குக் கிடைத்ததற்காக அவர்கள் பெருமையுற முன்னரே, "தீச்சுவாலை - 01" எதிர் நடவடிக்கை அவரை அவர்களிட மிருந்து பறித்தது.

ஆனையிறவிலிருந்து பகைவரை நாம் துரத்தியபோது எங்க ளோடிருந்த சுதந்திரா, ஆனையிறவை மீண்டும் பிடிக்க முனைந்த படையினரைத் துரத்தியபோது பகைவர்களின் வரவுக்கு மட்டுமன்றி, தன் வரலாற்றுக்கும் முற்றுப் புள்ளியை வைத்துவிட்டார்.

ஆக்கம்: மலைமகள்
விடுதலைப்புலிகள் இதழ்

**உலகத்தில் எந்த ஒரு நாடும்**
**இரத்தம் சிந்தாமலும், தியாகங்கள் புரியாமலும்**
**சுதந்திரம் பெற்றதில்லை.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–




# நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் திருவுடல் தீயுடன் சங்கமம்

02.05.2025

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பரிபூரணமடைந்த நிலையில் இன்றைய நாள் வெள்ளிக் கிழமை திருவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.





கொழும்பில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே நல்லை ஆதீன குரு முதல்வர் வியாழக்கிழமை பரிபூரணமடைந்தார்.

சுவாமிகளின் திருவுடல் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்திற்கு கொண்டுவரப்பட்டு பூரணத்துவ சாந்தி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதனை தொடர்ந்து வணக்க உரைகள் நிகழ்த்தப்பட்டு திரு வுடல் ஊர்வலமாக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியைகள் இடம்பெற்றது.

நல்லை ஆதீனத்தின் குரு முதல்வராக செயற்பட்ட சுவாமிகள் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையிலும் மக்களுக்காக பல சேவைகளை புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் பூரணமடைந்த செய்தி சைவமக்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளதாக சைவசமய அமைப்புக்கள் தெரிவித்துள்ளது.

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் போராட்டம்

03.05.2025

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தினை முன்னிட்டு , படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி யாழ்ப்பாணத் தில் ஊடகவியாலாளர்கள் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

யாழ் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் ஊடக அமையத்திற்கு முன்பாக இன்று சனிக்கிழமை மாலை 03.00 மணியளவில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும், தாக்குதலுக்கு இலக்கான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு நீதி கோரியும் ஊடகவியலாளர்கள் கோசங்களை எழுப்பினர்.














**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

**www.sangathamil.ca**

# தென்னிலங்கைத் தரப்பை புறக்கணித்து தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்துவோம்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

04.05.2025

உலகெங்கிலும் அறியப்பட்ட இந்நூற்றாண்டில் நடாத்தப்பட்ட மிகப்பெரிய இனப்படுகொலையை நினைவுகூறும் மே மாதத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான தமிழ்ச் சமூகத்திற்கான தெளிவூட்டல். தொடர்ச்சியாக ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து தமிழ் மக்களிடையே அரசாங்கத்தின் மீது நம்பிக்கை குறைவடைந்து இருக்கும் இந்நிலையில் உள்ளூராட்சி சபை தேர்தலை எதிர்கொள்ள காத்திருக்கின்றோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரம் அடைந்து 77 ஆண்டுகளாக தொடர்ச்சியாக மாறி மாறி வரும் சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கத்தால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள். அந்த வகையில் என்.பி.பி முலாம் பூசப்பட்ட ஜே.வி.பி அரசும் அதற்கு விதிவிலக்கல்ல.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கட்சிகள் மீது கொண்ட அதிருப்தி தேசிய மக்கள் சக்திக்கு, தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கின்றது என்ற விம்பத்தினை அளித்திருக்கின்றது. இதனால் சிங்கள பௌத்த பேரினவாத கட்சி, தாம் தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் இலங்கையில் இனமுரண்பாடு இல்லை என்றும் சர்வதேச ரீதியில் கூறுகின்றது. ஆனால் இவர்கள் ஆட்சி பீடம் ஏறி 06 மாதங்கள் கடந்திருக்கின்ற நிலையிலும் தமிழ் மக்களுக்கு வழங்கிய எந்தவொரு தேர்தல் வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்றவர்கள் இன்று வரை ஒழிக்கவில்லை, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவோம் என்று கூறியவர்கள் இன்று வரை அதனை நீக்கவில்லை, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வலி வேதனைகளை அறிவோம் என்றவர்கள் காணமல் ஆக்கப்பட்டோர் உட்பட பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவித நீதியும் வழங்கவில்லை. இன்றளவும் அரசியல் கைதிகள் முழுமையாக விடுதலை செய்யப்படவில்லை, நில அபகரிப்பும், சிங்கள பௌத்தமயமாக்கலும் தமிழர் நிலங்களில் தொடர்ச்சியாக இன்றளவும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. உயர் பாதுகாப்பு வலயங்கள் முழுமையாக அகற்றப்படவில்லை. இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொண்ட சுயநிர்ணய உரிமையின் அடிப்படையான தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு அரசியல் தீர்வை அரசாங்கம் வழங்க தயாரில்லை.

இவ்வாறான காலப்பகுதியில் நாம் எதிர்கொள்ளவிருக்கும் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் தாங்கள் விட்ட தவறினை திருத்திக் கொள்வதற்கான ஒரு அரிய சந்தர்ப்பமே இது. அதிகாரத்தின் ஆரம்ப புள்ளியாகிய உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாகவும், தேசிய இனமாகவும் நிரூபிக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கின்றோம்.

தென்னிலங்கை தரப்புக்களைப் புறக்கணித்து உங்களுடைய கிராமங்களில் உள்ள உங்களுக்கு நம்பிக்கையான, நேர்மையான இறந்தகாலத்தைக் கொண்ட தமிழ்த் தேசியம் சார்ந்தவர்களை உங்களின் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. எம் மண்ணுக்காக உயிர் நீத்தவர்களினை நெஞ்சில் நிறுத்தி உங்கள் வாக்குகளை வழங்குங்கள் என்று யாழ்ப்பாணப்பல்கலைக்கழகச் சமூகமாக கேட்டுக்கொள்கின்றோம்.

2002 ரணில் கொண்டு வந்த சமாதானத்தை சிதைத்ததில் அனுர முக்கிய பங்கு வகித்தார் என்ற குற்றச்சாட்டும் பரவலாக உள்ளது.
மகிந்தவை யுத்தத்திற்குள் தள்ளியது அனுர என்றும் பரவலான குற்றச்சாட்டும் உள்ளது.

இறுதி யுத்தம் நடைபெற்ற வேளையில், இறுதி நொடியில் ஒரு நிமிடம் கூட யுத்த நிறுத்தம் செய்ய விடாது தடுத்தது ஜேவிபியின் அனுர ஆதரவாளர்கள் கூட்டம் என்று பரவலாக நம்பப்படுகிறது. மேலும் 2005 இலங்கை இராணுவத்திற்கு ஜே.வி.பி மூலமாக படைகளை திரட்டிக் கொடுத்தது என்பதை அநுர குமாரவே பகிரங்கமாக அறிவித்தார். அந்த இராணுவம் தான் தமிழர்மீது இனப்படுகொலை புரிந்தது. தமிழ சகோதரிகளை கற்பழித்து படுகொலை செய்ததும் உலகறிந்ததே.



பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
UNIVERSITY STUDENTS' UNION
UNIVERSITY OF JAFFNA

Patron:
Prof. S. Srisatkunarajah
(Vice Chancellor)

Senior Treasurer:
Dr. T. Pathmathas
(Senior lecturer Grade I)

President:
Mr. T. Lagithar

Vice President:
Mr. P. Pavatharakan

Secretary:
Mr.T.Anojan

Junior Treasurer:
Mr. S. Mithurshan

Editor:
Mr. P. Kajiyanthan

General Commitee:
Science Faculty Students' Union

Arts Faculty Students' Union

Management Studies and Commerce Faculty Students' Union

Medicine Faculty Students' Union

Agriculture Faculty Students' Union

Allied Health Sciences Faculty Students' Union

Technology Faculty Students' Union

Engineering Faculty Students' Union

Siddha Medicine Faculty Students' Union

Sir Ponnambalam Ramanathan Faculty of Performing and Visual Arts Faculty Students' Union

04.05.2025

தென்னிலங்கைத் தரப்பை புறக்கணித்து தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்துவோம்

T.Lagithar
President
University Students' Union
University of Jaffna

T.Anojan
Secretary
University Students' Union
University of Jaffna

தமிழரின் பூர்வீக தாயகத்தை பிரிப்பதில் முன்னின்றதும் ஜே.வி.பி தான். இணைந்த வடக்கு கிழக்கையும் நீதிமன்றம் சென்று பிரித்தது அனுரவின் கட்சியினர் தான் காரணம் ஆவார்கள்.

# வட மாகாணத்தில் ஆறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பைச் சுவீகரிக்க அநுரா அரசங்கம் நடவடிக்கை

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்தரகுமார் பொன்னம்பலம்

06.05.2025

வர்த்தமானியின் பிரகாரம் ஆறாயிரம் ஏக்கர் தமிழ்த்தேசத்தின் வடமாகாணக் கரையோர நிலப்பரப்பைச் சுவீகரிப்பதற்கு எடுக் கப்பட்டுள்ள நடவடிக்கை பிரதானமாக ஒரு அரசியல் பிரச்சினை யாகக் காணப்படுகின்றது. இதற்கமைய, யாழ்ப்பாணத ்தில் 3669 ஏக்கர் காணிகளும், முல்லைத்தீவில் 1703 ஏக்கர் காணி களும், கிளிநொச்சியில் 515 ஏக்கர் காணிகளும், மன் னாரில் 54 ஏக்கர் காணிகளும் என மொத்தமாக 5941 ஏக்கர் காணி களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, தமிழ்த் தேசியப் பேரவையின் பங்காளிக் கட்சிகள் இன்று (நேற்று) யாழ்ப்பாணத்தில் அவசரமாகக் கூடி இந்த விவகாரம் தொடர்பில் சர்வதேசத்தை நாடுவதற்கும், தீவிரமான போராட் டங்களை முன்னெடுக்கவும் தீர்மானித்துள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித் துள்ளார்.

யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் திங்கட்கிழமை (05.05.2025) நடாத்திய ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுதொடர்பான வர்த்தமானி அரசாங்கத்தால் உடனடியாக வாபஸ் பெறப்படாவிடில் நாங்கள் வடக்கு- கிழக்குத் தமிழ் மக்களுடன் புலம்பெயர் மக்களையும் முழுமையாக அணி திரட்டிப் போராட்டங்களைத் தீவிரமாக முன்னெடுப்போம். வட-கிழக்கில் அரசின் நடவடிக்கைகள் ஸ்தம்பிக்கும் வகையில் போராட்டங்களை மேற்கொள்ள நாங்கள் முயற்சிப்போம்.

தமிழ்- சிவில் சமூகத் தலைவர்கள், அமைப்புக்கள், செயற் பாட்டாளர்கள், தெற்கிலே வாழும் நீதியை மதிக்கின்ற அனைத்து மக்களும் குறித்த வர்த்தமானிக்கெதிராக அணி திரள வேண்டுமென நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம். இந்த வர்த்தமானி தமிழ்மக்களுக்கும், சிறீலங்கா அரசுக்குமிடையே வரக் கூடிய நல்லிணக்கத்துக்கான அனைத்துச் சந்தர்ப்பங் களையும் முற்றுமுழுதாக இல்லாமல் செய்யுமளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் எனவும் குறிப்பிட்டார்.




தமிழீழ தேசிய துக்க நாள்
தமிழ் இன அழிப்பு நாள்
Genocide Day
National Mourning Day of Thamileelam
மே May 18



Only In 2009 Over 146, 6797 Eelam Thamils Murdered, 70,000 Thamils unaccounted
Ontario Government Recognized Thamil Genocide Education Week (12May to 18 May) in Canada
www.sangathamil.ca

# வன்னியில் ஒரு சிறீலங்கா காவல் துறை குழு சிறுவனை 'தூக்கி அடிப்பதாக' அச்சுறுத்துகிறது

சந்திரமோகன் சந்தியா –முல்லைத்தீவு, சிலாவத்தை, தியோநகர்

07.05.2025

சிறீலங்கா காவல் துறை அதிகாரிகள் எனக் கூறிக்கொண்டு, சிவில் உடையில் தனது வீட்டுக்கு வந்த ஆண்கள், தமது பிள்ளைகளை அச்சுறுத்தியதால், தான் எவ்வாறு கடுமையான துன்புறுத்தலுக்கு ஆளாக நேரிடுகிறது என்பதை, வன்னியைச் சேர்ந்த தமிழ்ப் பெண்ணொருவர் ஊடகங்களிடம் வெளிப்படுத்தியுள்ளார்.




இரண்டு மாதங்களுக்கு முன்னர் தானும் ஒரு கடத்தலுக்கு ஆளானதாகவும், அது தொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்று வருகையில் பொலிசார் இவ்வாறு நடந்துகொள்வது பெரும் அச்சுறுத்தல் என, முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், முல்லைத்தீவு, சிலாவத்தை, தியோநகரைச் சேர்ந்த சந்திரமோகன் சந்தியா குற்றஞ் சாட்டியுள்ளார்.

“வெளிநாட்டில் உள்ள நபர் ஒருவரின் தூண்டுதலின் பேரில் கடந்த மார்ச் மாதம் நான் கடத்தப்பட்டேன். அது தொடர்பான வழக்கு நீதிமன்றில் நடைபெற்றுவருகிறது. ஆனால் இந்த சம்பவத்தின் பின்னர் சிஐடி பொலிஸ் பிரிவில் இருந்து வருகின்றோம். ஸ்பெசல் பிரான்ஜில் இருந்து வருகின்றோம் என கூறிக்கொண்டு எமது வீட்டுக்கு வருகை தந்து நாங்கள் இல்லாத நேரத்தில் சிறுவர்களான எமது பிள்ளைகளை அச்சுறுத்தும் தொனியில் கதைக்கின்றனர். இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பு நான்தான். ஆனால் அவர்களின் விசாரணைகள் என்னுடைய கடந்த காலத்தை பற்றியதுதானேத் தவிர எங்கள் வழக்கு தொடர்பானது அல்ல. எங்களுடைய பின்னணியையே தேடுகின்றனர். வழக்கு நடந்துகொண்டிருக்கையில் இவ்வாறு செயற்படுவது எங்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதோடு மன உளைச்சலையும் தருகிறது.”

மேலும், தான் வீட்டில் இல்லாத நேரத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் தனது வீட்டிற்குள் சிவில் உடையில் பொலிசார் அதிகாரிகள் என கூறிக்கொள்ளும் ஒரு குழு வந்து, தனது பிள்ளைகளைத் திட்டி, அச்சுறுத்தியதாக காட்டும் சிசிடிவி காட்சிகளையும் அவர் ஊடகங்களுக்கு வழங்கியிருந்தார்.

சிசிடிவி காட்சிகளுக்கு அமைய, ஏப்ரல் 24 அன்று, மூன்று அதிகாரிகளும் சந்திரமோகன் சந்தியாவின் வீட்டிற்கு வந்து அவரது மகனிடம் அவரது தாய் எங்கே என கேட்கின்றார்கள்.

“அம்மா எங்கடா? அம்மா இல்லை அண்ணா. அம்மா வவுனியாவில்… அடிச்சு மண்டைய உடைப்பேன். உங்களுடைய அம்மாவிற்கு கோல் பண்ணுடா. அம்மாவிற்கு சொல்லு பொலிஸ் வந்திருக்கு. எத்தனை மணியானாலும் நாங்கள் இருக்கின்றோம் என சொல்லு. நேற்று புல்லா வந்து பார்த்தால்… கோவம் வந்தால் தம்பி உன்னை தூக்கிப்போட்டு அடிப்பேன் விளங்குதா? செய்வது பிராடு வேலை, செய்துபோட்டு பதில் சொல்ல வேண்டும் விளங்குதா?

“உங்கள் அம்மா ஏன் பொலிஸ் சென்று முறைப்பாடு செய்தார்? என்ன முறைப்பாடு? அந்த பிரச்சினை அடித்தேன் என, கோல் பண்ணி வரச்சொல்லு, வவுனியாவில் வாராங்க, யாழ்ப்பாணம் வாராங்க… வொரன்ட் இருக்கு கைது செய்வாங்க, வந்தால் பிரச்சினையில்லை. வாராட்டி கைது செய்ய வேண்டி வரும்.”

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான சந்திரமோகன் சந்தியா, தனது கடத்தல் தொடர்பான நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருக்கும்போது, பொலிசார் இந்த கடத்தல் குறித்து விசாரணை செய்யாமல் தனது கடந்த காலம் தொடர்பிலான தகவல்களை கேட்பதாக குற்றம் சாட்டுகிறார்.

மேலும், ஏப்ரல் 24 ஆம் திகதி தனது வீட்டிற்கு வருவதாக பொலிஸ் அதிகாரிகள் தனக்கு தொலைபேசியில் தெரிவித்த போது, அன்றைய தினம் தான் வவுனியாவில் இருப்பதாகவும், வீடு திரும்பும்போது இரவு ஆகிவிடும் எனவும் தெரிவித்ததாகவும், ஆனால் அவர்கள் தனது வீட்டிற்கு வந்து தனது இரண்டு பிள்ளைகளை அச்சுறுத்தியதாகவும் சந்தியா மேலும் குறிப்பிட்டுள்ளார்.




**உலகத்தில் எந்த ஒரு நாடும் இரத்தம் சிந்தாமலும், தியாகங்கள் புரியாமலும் சுதந்திரம் பெற்றதில்லை.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

**www.sangathamil.ca**

# எங்களை நாங்களே ஆள்வதற்காக மக்கள் ஆணை தந்துள்ளார்கள்

## எம். கே. சிவாஜிலிங்கம் – தமிழ்த் தேசிய பேரவை

07.05.2025

ஜே.வி.பியினுடைய பசப்பு வார்த்தைகளை நம்பி ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர்களுக்கு வாக்களித்தமை தவறு என்பதை மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். இந்த வெற்றி எங்களை நாங்களே ஆள்வதற்காக மக்கள் எமக்கு தந்த ஆணையாக பார்க்கின்றேன் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய பேரவையின் வல்வெட்டித்துறை நகரசபை முதன்மை வேட்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை நகரசபையின் 9 வட்டாரங்களில் 7 வட்டாரங்களில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய பேரவை வெற்றிபெற்றது. இது தொடர்பில் வினாவிய போதே மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் தெளிவான செய்தியை சொல்லியிருக்கிறார்கள். ஜே.வி.பியினுடைய பசப்பு வார்த்தைகளை நம்பி ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர்களுக்கு வாக்களித்தமை தவறு என்பதை மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். இந்த தேர்தலில் பெருவாரியான வாக்குகளை தமிழ்க் கட்சிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

மக்களின் வாக்களிப்பு சதவீதம் குறைவாக காணப்படுவதால் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் விகிதாசார பிரதிநிதித்துவம் ஊடாக வருகிறார்கள். மக்கள் உறங்கியிருக்காமல் விழிப்பாக

இருந்து இனப் பிரச்சினைக்கான தீர்வுக்காக அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து போராடுவதற்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

இந்த வெற்றி எங்களை நாங்களே ஆள்வதற்காக மக்கள் எமக்கு தந்த ஆணையாகப் பார்க்கின்றேன். எங்களினுடைய பயணம் தொடரும்.



வெறுமனே சபைகளில் ஆட்சியமைபதற்காக மாத்திரமல்லாது இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் பொது உடன்பாட்டுக்கு வரும் வகையில் ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தோடும் இணைந்து செயற்படுவோம் என மேலும் தெரிவித்தார்

# 3,000 நாட்களை எட்டியது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் போராட்டம்!

07.05.2025

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் இன்றுடன் (7) மூவாயிரம் நாட்களை எட்டியுள்ள நிலையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னரும் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளின் உண்மைநிலையினை அறியத் தருமாறு வலியுறுத்தி, தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா அஞ்சல் அலுவலகத்துக்கு அருகில் சுழற்சி முறை உணவுத்தவிர்ப்பு போராட்டம் கடந்த 8 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் மூவாயிரம் நாட்களாகிவிட்ட நிலையில் அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வின்றி போராட்டம் தொடர்ந்துகொண்டிருக்கிறது.




இன்றைய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஐரோப்பிய அமெரிக்க கொடிகளை ஏந்தியிருந்ததுடன், தங்களுக்கு சர்வதேச நீதி வேண்டும் என்பதை வலியுறுத்தினர்.





# மட்டு. வாழைச்சேனையில் சட்டவிரோத மணல் கடத்தல் பாரவூர்தியை மறித்து மக்கள் போராட்டம்

08.05.2025

மட்டு, வாழைச்சேனை கிண்ணியடி பிரதேசத்தில் மீன் வளர்க்கும் திட்டம் என்ற போர்வையில் பாரிய குழிகளை தோண்டி மண் அகழ்வை எதிர்த்து பிரதேச மக்கள் மண்ணை ஏற்றிச் செல்லும் கனரக வாகனத்தை இன்று வியாழக்கிழமை வழி மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் பொலிசாருடன் பேசுவதற்கு சென்ற தமிழரசு கட்சி வேட்பாளர் உட்பட இருவரை கைது செய்ததயைடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன், பொலிசாரின் அடாவடியை எதிர்த்து சுட்டெரிக்கும் வெய்யிலில் தொடர்ந்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிண்ணியடி ஐஸ் உற்பத்தி நிலையத்துக்கு அருகாமையிலுள்ள தனியார் காணி ஒன்றில் 2021ம் ஆண்டு மீன் வளர்க்கும் திட்டத்தின் கீழ் பாரிய குழிகளை தோண்டி மண் அகழ்ந்து வெளியிடங்களுக்கு எற்றிச் சென்று விற்பனை செய்து வந்துள்ளனர்.

இதனை கண்டித்து கடந்த காலத்தில் கிராமத்து இளைஞர்களினால் முன்னெடுக்கப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டங்களையடுத்து இத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் கடந்த முதலாம் திகதி குழிகளை தோண்டி மண் அகழ்வில் ஈடுபட்டதையடுத்து அங்கு சென்ற கிராம மட்ட அமைப்புக்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் மண் அழ்வில் ஈடுபட்டவர் தற்போது எங்களிடம் அனுமதி உண்டு என தெரிவித்து பொலிசாருக்கு தெரிவித்த முறைப்பாட்டையடுத்து எதிர்பு தெரிவித்த இரண்டு பேரை பொலிசார் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்து பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

இந்த நிலையில் சம்பவ தினமான இன்று காலை 10 மணியளவில் பிரதேச மக்கள் ஒன்று திரண்டு அகழ்ந்த மண்ணை ஏற்றிக் கொண்டு வேறு இடத்துக்கு கொண்டு சென்ற கனகர வாகனத்தை வீதியில் வழிமறித்து எங்கள் கிராம மண் வளத்தை அழிக்காதே, மண் வளத்தை அழிக்கும் துரோகியே ஒழிக, சுற்றுச் சூழலுக்கு பெரும் பாதிப்பு என சுலோகங்கள் ஏந்தியவாறு குறித்த திட்டத்தினை நிறுத்த கோரி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அங்கு சென்ற பொலிசாருடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்ட தமிழரசு கட்சி வேட்பாளர் மற்றும் இளைஞன் சென்று பேசிய நிலையில் அவர்கள் இருவரையும் பொலிசார் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன் அங்கு பொலிசார் குவிக்கப்





பட்டனர்.

இதனை தொடர்ந்து ஆர்பாட்டகாரர்கள் கைது செய்த இருவரையும் விடுதலை செய்யுமாறும் கோரிய நிலையில் கைது செய்யப்பட்ட இருவருக்கும் எதிராக வழக்கு பதிவு செய்துவிட்டு அவர்களை பிணையில் விடுவித்தனர்

இது தொடர்பாக அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் பிரதேச செயலாளர் நில அளவை சுரங்க பணியகம் மற்றும் மாவட்ட நன்னீர் மீன் வளர்ப்பு அலுவலகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை போன்ற திணைக்களங்களுடன் விசேட கலந்துரையாடல் இடம் பெற்று அடுத்து வரும் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் வரை இந்த மண் அகழ்வை இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தீர்மானித்தனர்.

இருந்தபோதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அங்கு கொட்டகை அமைத்து அமர்ந்து தொடர்ந்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

# கோவணத்துடன் சென்றவர்களிடம் ஆவணம் கேட்கிறீர்களா?

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

08.05.2025

கோவணத்துடன் சென்றமக்களிடம் ஆவணம் கேட்கின்றீர்களா எனவும், கடந்தகால கொடுங்கோல் அரசுகளைப் பின்தொடர்கின்றீர்களா எனவும், சபையில் சரமாரியாகக் கேள்வி எழுப்பிய வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வடக்குமாகாணத்தில் சுமார் 5,941 ஏக்கர் காணிகளை அபகரிக்கும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி உடனடியாக மீளப்பெறுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

08ஆம் திகதி வியாழக்கிழமை பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கில் கரையோரக்தில் மக்களுடைய காணிகரை அபகரிக்கும் செயல் இடம் பெறுகின்றதா?

கடந்த 2025.03.28ஆம் திகதி வெளிடப்பட்ட 2430 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3,669 ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,703 ஏக்கரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 515 ஏக்கரும், மான்னார் மாவட்டத்தில் 54 ஏக்கருமாக மொத்தம் 5,941 ஏக்கர் காணிகள், காணி நிர்ணயக்கட்டளைச்சட்டம் 5(1)ஆம் பிரிவில் அரசகாணிகளாக அபகரிக்கதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதைப் பார்க்கமுடிகின்றது.

குறிப்பாக குறுகிய காலத்தில் உரிய பதிவுகள் செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால் அந்த மக்களிடமிருந்து அவர்களின் காணிகளைப் பறிக்கப்போகின்றீர்களா? இது வடக்கு மக்களுக்கு நீங்கள் செய்யும் மகப் பெரிய துரோகமாக தெரியவில்லையா?

அந்தமக்கள் 2009இல் இடம்பெயரும்போது. அதனையும் கொண்டு செல்லவில்லை. அப்போது இனவாதத்தின் கொடூரம் நடந்தது.



கோவணத்தோடு சென்ற மக்களிடம் ஆவணங்கள் கேட்கின்றீர்களா? ஏற்கனவே கொடுமைசெய்த இனவாத அரசுகளை நீங்களும் பின்தொடருகின்றீர்களா?

வடக்கு, கிழக்கு மக்களுக்கு துரோகம் செய்யவேண்டாம். எமது மக்களின் காணிகளை அபகரிக்கும்நோக்கில் வெளியிடப்பட்டுள்ள உடனடியாக மீளப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.

**ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவளிகளைச் சந்திக்கின்றது. பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது கொந்தளிப்பான பல சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கின்றது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# யாழ். மாநகர் முதல்வர் விடயம் சுமந்திரன் ஒதுங்கி இருக்க வேண்டும்

## பஷீர் காக்கா கோரிக்கை

08.05.2025

தமிழ்த்தேசியக் கட்சிகளாக இனங்காணப்படுபவர்களுடன் பேசும் போது யார் மேயர் என்பது போன்ற விடயங்களை முன் நிபந்தனையாக வைக்காமல் கூடிக் கலந்தாலோசிப்பதே சிறந்தது. இம்முயற்சி கைகூடும் வரை சுமந்திரனை ஒதுக்கி வைத்தாலே எல்லாம் சுபமாக முடியும் என மூத்த போராளி மனோகர் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபை மேயர் விவகாரம் தொடர்பாக யாழ் ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னரான நிலைமை தொடர்பான விடயத்தில் பதில் செயலாளர் சுமந்திரனை கையாளவிடுவது எதிர்பார்க்கும் நோக்கங்களுக்கு மாறான விளைவையே தரும் என்பதனை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்குக் குறிப்பாக மத்திய குழுவினருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக யாழ். மேயர் விடயம் கவனத்துக்குரியது. இதனை முன்நிபந்தனைபோன்று வைப்பது ஏற்புடையதல்ல.

சுமந்திரன் கட்சிக்குள் நுழைந்த காலத்தில் இருந்தே தமிழ்த் தேசிய உணர்வாளர்களை நோகடிக்கும் விதத்திலேயே செயற்பட்டு வந்துள்ளார்.

2018 நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின்போது தேர்தல் முடிந்த பின்னரே மேயர் தொடர்பாக முடிவெடுப்பது எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக முடிவெடுத்தனர். தமிழரசுக் கட்சிப் பணிமனையில் நடைபெற்ற இக்கூட்டத்தின் முடிவைத் தட்டச்சுச் செய்து கொண்டிருக்கும்போது வெளியில் வந்த சுமந்திரன் ஊடகவியலாளர்களிடம் "ஆர்னோல்ட் தான் மேயர்" என அறிவித்தார்.

சில நிமிட நேரத்தில் அங்கே வந்த கட்சித் தலைவர், செயலாளர் ஆகிய இருவரிடமும் "ஆர்னோல்ட் தான் மேயர்" எனச் சுமந்திரன் சொல்கிறாரே எனக் கேட்டனர் ஊடகவியலாளர்கள்.

அவர்கள் இருவரும் அவ்வாறான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தனர். குழம்பிப் போயிருந்த ஊடகவியலாளர்கள் மீண்டும் அங்கு வந்த சுமந்திரனிடம் கட்சித் தலைவர், செயலாளரின் கூற்றைச் சுட்டிக் காட்டினர். அதற்கு மிக அலட்சியமாக "அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். ஆனால், ஆர்னோல்ட் தான் மேயர்" என எகத்தாளமாகக் குறிப்பிட்டார்.

கட்சியில் தலைவர், செயலாளர் என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல என்பதே அவரது முடிவு.

மாகாணசபையில் இறுதிப்போரில் நடைபெற்றது இனப்படுகொலையே என்றும் இதற்குச் சர்வதேச விசாரணையே வேண்டும் என்று முதலமைச்சர் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். இது தற்போது ஜே.வி.பி.யின் சட்டத்தரணியாக விளங்கும் சுமந்திரனுக்குச் சினமூட்டியது.

முதல்வருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர ஏற்பாடு செய்தார். சுமந்திரன் சார்பில் ஆர்னோல்ட் தான் மும்முரமாக இயங்கினார். பெரும்பான்மை உறுப்பினர்களின் வாக்கினால் நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானத்தைத் தற்போதைய கட்சித் தலைவர் சி.வி.கே. சிவஞானம் அவர்களே ஆளுநரிடம் கையளித்தார். ஆனால், இந்த விடயம் தொடர்பாகப் பெருந்தலைவர் இரா. சம்பந்தனிடம் கலந்தாலோசிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்தளவுக்குத் தன்னிச்சையாகச் செயற்பட்டார் சுமந்திரன், தனது சார்பில் இத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததுக்குச் சன்மானமாகவே ஆர்னோல்ட் தான் மேயர் என்று முடிவெடுத்தார்.

பொதுவேட்பாளர் விடயத்திலும் தன்னிச்சையாகவே முடிவெடுத்தார். யார் பொதுவேட்பாளர் யார் என்று முடிவெடுக்க முன்னரே அவரைத் தோற்கடிப்பது எனச் சுமந்திரன் தீர்மானித்தார். வழக்கைத் தொடங்குவதற்கு முன்னரே தீர்ப்பை எழுதும் நீதிபதியானார் அவர். ஆயிரம் விகாரைகளை அமைக்கும் உறுதியுடன் இருக்கும் சஜித் பிறேமதாஸவே அவரது தெரிவாக இருந்தது. பொது வேட்பாளருக்கு ஆதரவாக மாவை செயற்பட்டார் என்பது வெளிப்படை. கட்சித் தலைவர் கிளிநொச்சியில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றினார். பொதுவேட்பாளரின் பணிமனைக்குச் சென்று ஆசீர்வதித்தார். அப்படியிருந்தும் அண்மையில் பொதுவேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களிடம் விளக்கம் கோரிக் கடிதம் அனுப்பியுள்ளார் இவர்.

யாழ். மேயர், பொதுவேட்பாளர் விடயங்களில் தலைமையின் முடிவுக்கு எதிரான நிலைப்பாடு எடுத்துவிட்டு மத்திய குழு என்றொரு முலாம் பூசித் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவானவர்களைக் கட்சியில் இருந்து துரத்துவதிலேயே இவர் அக்கறையாக உள்ளார். கட்சித் தேர்தலில் தனக்கு எதிராகச் செயற்பாட்வர்களை நீக்கினால்தான் தான் தலைவ ராக முடியும் என நம்புகிறார்.

கிழக்கு மாகாணசபையில் ஆட்சியமைக்கும் முயற்சி நடைபெற்றபோது தமிழரசுக் கட்சியினரைவிடக் குறைவானர்களே




முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் இருந்தனர். எனினும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினரையே முதல்வராக்க இரா. சம்பந்தன் முடிவெடுத்தார். பெரும்பான்மை தம்மிடம் உள்ளதென அவர் நினைக்கவில்லை. அவர் இன ஐக்கியத்தையே பெரிதாக நினைத்தார். அதேபோல தற்போதுத் தமிழ்த்தேசியக் கட்சிகள் இணைந்துச் செயற்பட முடிவெடுப்பதற்கு முன்நிபந்தனை விதிப்பது போன்று யாழ். மேயர் எந்தக் கட்சி என்று தானே முடிவெடுக்கிறார்.

ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்று கூறுவார்கள். அந்த நிலையை உருவாக்கிச் சந்தி சிரிக்கும் நிலைமை உருவாகும் அபாயம் உள்ளது. எனவே, இந்த அபாயத்தைத் தவிர்க்கச் சுமந்திரனைத் தவிர்த்துக் கட்சித் தலைவரே நேரடியாகக் கையாள்வதே சிறந்தது.

அத்துடன் பொதுவேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களுக்கு விளக்கம் கோரும் கடிதத்தை மீளப்பெறுவது தமிழ்த் தேசியத்தை நேசிப்பவருக்கு ஆறுதலளிக்கும் விடயமாக இருக்கும்.

எனவே, தற்போது தமிழ்த்தேசியக் கட்சிகளாக இனங்காணப்படுபவர்களுடன் பேசும்போது யார் மேயர் என்பது போன்ற விடயங்களை முன்நிபந்தனையாக வைக்காமல் கூடிக் கலந்தாலோசிப்பதே சிறந்தது. இம்முயற்சி கைகூடும் வரை சுமந்திரனை ஒதுக்கி வைத்தாலே எல்லாம் சுபமாக முடியும். மாகாணசபை போன்று குழப்பமான சூழ்நிலைகள் உள்ளூராட்சிச் சபைகளில் தோன்றுவதைத் தவிர்க்க இது ஒன்றே வழி எனக் கருதுகிறேன் – என்றார்.

# தேசிய மக்கள் சக்தியுடன் டீலுக்கு செல்வோர் துரோகிகள்

## யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர், சட்டத்தரணி வி. மணிவண்ணன்

08.05.2025

தமிழர் தாயகத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் டீல் பேசி ஆட்சி அமைப்போர் தமிழின துரோகிகள் என யாழ் . மாநகர சபை முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி, மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ் . ஊடக அமையத்தில் இன்றைய தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் பிரதேசங்களின் சில இடங்களில் தேசிய மக்கள் சக்தியும் கணிசமான ஆசனங்களையும் பெற்றுள்ளார்கள். அவர்களுடன் தமிழ் தேசிய கட்சிகள் கூட்டிணைந்து ஆட்சி அமைக்க கூடாது.

தேசிய மக்கள் சக்தியினரை புறக்கணிக்க வேண்டும் என நாம் உட்பட ஏனைய தமிழ் தேசிய கட்சிகளும் மக்களிடம் கோரி வந்தன அதனை மக்கள் ஏற்று பல இடங்களில் தேசிய மக்கள் சக்தியை புறக்கணித்துள்ளார்கள்.

தற்போது சபைகளில் ஆட்சி அமைக்கும் போது, அவர்களாக ஆதரவு வழங்குவது அவர்களின் ஜனநாயக உரிமை. ஆதரவு தருகிறோம் என்பவரை ஆதரவு தராதே என கூற முடியாது.

ஆனால் ஆதரவு தாருங்கள், துணை பதவிகளோ, இந்த சபைக்கு ஆதரவு தாருங்கள், அந்த சபைக்கு நாம் ஆதரவு தருகிறோம் என்பது போலான டீல்கள் செய்து, அந்த கட்சியுடன்




இணைந்து தமிழ் தேசிய கட்சிகள் ஆட்சி அமைந்தால், அது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம் என மேலும் தெரிவித்தார்.

**ஒரு விடுதலைப் போராளியானவன் தனது சுயத்தின் வரம்புகளுக்கு அப்பால் மேலோங்கி, தன்னை முழுமையாகப் போராட்டத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# வடக்கு மக்களின் காணிகளை அரசுடமையாக்கி சட்ட விரோத குடியேற்றங்களுக்கு அரசாங்கம் முயற்சி

## யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

08.05.2025

வடக்கு மாகாணத்தில் தமிழர்களின் காணிகளை சட்டவிரோதமாக அரசுடமையாக்கி அவற்றை குடியேற்றங்களுக்காக பயன்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது என்று பொறுப்புடன் குறிப்பிட்டுக்கொள்கிறேன். வடக்கு காணிகள் தற்போது இலக்கு வைக்கப்படுவதை போன்று கிழக்கு மாகாண காணிகளும் இலக்கு வைக்கப்படும். புலம்பெயர்ந்த தமிழர்களால் எவ்வாறு 3 மாத காலத்துக்குள் தமது பூர்வீக காணிகளை உறுதிப்படுத்த முடியும், என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வியெழுப்பினார்.

காணி விவகாரம் இனப்பிரச்சினையுடன் தொடர்புடையது. இவ்விடயத்தை அலட்சியப்படுத்த முடியாது. அரசாங்கம் தான் தோன்றித்தனமாக செயற்பட்டால் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களை பகைத்துக் கொள்ள நேரிடும். உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் வழங்கியுள்ள செய்தியை கருத்திற் கொண்டு வர்த்தமானியை அரசாங்கம் உடன் இரத்துச் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) நடைபெற்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ‘அ’ அட்டவணையின் ஒழுங்கு விதிகளின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டத்தில் 3669 ஏக்கர் காணிகள், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1703 ஏக்கர் காணிகள், கிளிநொச்சி மாவட்டத்தில் 515 ஏக்கர் காணிகள் மற்றும் மன்னார் மாவட்டத்தில் 54 ஏக்கர் காணிகள் என்ற அடிப்படையிலான 5941 ஏக்கர் தனியார் காணிகளை குறிப்பிட்ட காலப்பகுதிகளுக்குள் உறுதிப்பத்திரத்துடன் உறுதிப்படுத்தாவிடின் அவை அரசுடமையாக்கப்படும் என்று குறிப்பிட்டு அரசாங்கம் 2025.03.28 ஆம் திகதியன்று வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை பிரசுரித்துள்ளது.

வடகிழக்கில் தமிழர் தாயகத்தில் வாழும் தமிழர்களின் சனத்தொகைக்கு இணையாக இன்று தமிழர்கள் பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். உயிரச்சுறுத்தல் காரணமாகவே தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

நெருக்கடியான நிலையில் தமது சொத்துக்கள் மற்றும் காணிகளை விட்டுச்சென்றார்கள். சட்டவிரோதமாக சென்று அகதி அந்தஸ்த்து கோரினார்கள்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தங்களின் காணிகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத நிலைமை கணிசமான அளவில் காணப்படுகிறது.

கடந்த அரசாங்கம் புலம்பெயர்ந்தோர் காணிகள் குறித்து விசேட கரிசனை கொண்டு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தியிருந்தது. இனவாதிகள் என்று குறிப்பிடப்பட்ட கடந்த அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுல்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் அச்சட்டத்தை நீக்காமல் பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுல்படுத்துகிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் 3 மாத காலத்துக்குள் எவ்வாறு தமது காணிகளின் உரித்தை உறுதிப்படுத்த முடியும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள் காணிகளை உரிமை கோரவேண்டிய நிலையிலும் அவர்கள் பல தடவைகள் இடம்பெயர்ந்துள்ளார்கள்.

சொத்துக்களையும், உடமைகளையும் விட்டுச் சென்றார்கள். இவ்வாறான நிலையில் குறித்த காணிகளை 3 மாத காலத்துக்குள் எவ்வாறு உறுதிப்படுத்துவது. இது ஏற்றுக்கொள்ள கூடியதொரு விடயமா, காணி தொடர்பான விடயங்கள் தமிழர்களின் இனப்பிரச்சினையின் அடிப்படையான அங்கமாகும் என்பதை முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். இதனை இந்த அரசாங்கம் அறியவில்லையா,

இந்த காணிகளின் உறுதிகளை 3 மாத காலத்துக்குள் உறுதிப்படுத்தாவிடின் அவை அரசுடமையாக்கப்படும் என்று ஒரு வர்த்தமானி ஊடாக அறிவித்துள்ளமை நியாயமற்றதொரு விடயமாக பார்க்கப்படுவதுடன், இயற்கை நீதிக்கு முரணானதாகவும் கருதப்படும்.

தமிழர்களின் காணிகளை சட்டவிரோதமான முறையில் பலவந்தமாக அபகரித்து அவற்றை குடியேற்றங்களுக்காக பயன்படுத்த போகிறார்கள் என்பதை பொறுப்புடன் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் எதனையும் அறியாமல் தவறாக செய்யும் விடயம் என்று இதனை கருத முடியாது. பாராளுமன்றத்திற்குள்ளும், வெளியிலும் காணி விவகாரம் தொடர்பில் தொடர்ந்து பல விடயங்களை குறிப்பிட்டு வருகிறேன்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவத்தினர் மற்றும் அரச படையினர் தமிழ் மக்களை எதிரிகள் என்ற கண்ணோட்டத்தில் தான் பார்க்கிறார்கள்.

30 வருடகால யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் தமிழர் தாயகத்தில் மீண்டும் பிரச்சினை தோற்றம் பெற்றலாம், உரிமை போராட்டம் எழலாம் என்ற அச்சத்தில் அரசாங்கங்கள் தமிழர் தாயக பிரதேசத்தின் கரையோர பகுதிகளை பலவந்தமாக ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

தமிழ் மக்களின் கரையோர தொழில்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்தே தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

தமிழர்களின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கான சொந்த மண்ணை பலவந்தமாக ஆக்கிரமிக்க இந்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த அரசாங்கம் கடந்த அரசாங்கங்கள் தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டது.

இனவாதிகள், இனவாதத்தை கக்கினார்கள், நாங்கள் புனித மானவர்கள் என்று குறிப்பிட்டுக்கொண்டு ஆட்சிக்கு வந்தது. இந்த அரசாங்கம் தமிழர்களுக்கு அநியாயம் செய்யும் என்பதை



பொறுப்புடன் குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

இது வெறும் தமிழர்களை மாத்திரம் குறிவைக்கும் விடயமல்ல, தமிழ் பேசும் மக்களை குறிவைக்கும் செயற்பாடாக மாறும். வடக்கு மாகாணத்தின் இலக்கு கிழக்கு மாகாணத்துக்கும் செல்லும்.

தமிழர்களுக்கு எதிரான இராணுவத்தின் செயற்பாட்டையும், இராணுவத்தின் மனநிலையையும் மாற்றியமைக்கும் முதுகெலும்பு இந்த அரசாங்கத்துக்கு கிடையாது. அல்லது இராணுவத்தின் இனவாத செயற்பாட்டுக்கு அரசாங்கமும் துணை போகிறது என்றே குறிப்பிட வேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் அடைந்துள்ள பாரியதொரு பின்னடைவை அரசாங்கம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் வழங்கியுள்ள செய்தியை தெளிவாக விளங்கிக்கொண்டு இந்த வர்த்தமானியை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும்.

காணியுடன் தொடர்புடைய பிரச்சினைகள் இந்த நாட்டில் வாழும் தமிழர்களின் அடிப்படை பிரச்சினைகளுடன் தொடர்புப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் தரப்பினருடன் இவ்விடயம் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடாமல் இவ்விடயத்தில் அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக செயற்பட்டால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கும், தெற்குக்கும் இடையிலான நல்லிணக்க உறுதிப்பாட்டுக்கு பாதிப்பு ஏற்படும்.

தோற்றம் பெறும் நல்லிணக்கத்துக்கு அரசாங்கமே தடையாக இருக்கும் நிலை உருவாகும் என்று எச்சரிக்கிறேன். இவ்விடயத்தை அலட்சியப்படுத்த வேண்டாம். காணி விடயத்தை குறைத்து மதிப்பட வேண்டாம்.

அநீதியாக செயற்பட்டு ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பகைத்துக் கொள்ள நேரிடும் என்பதை திட்டவட்டமாக குறிப்பிட்டுக் கொள்கிறேன். ஆகவே காணி தொடர்பில் பிரசுரித்த வர்த்தமானியை உடனடியாக இரத்துச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# வட, கிழக்கில் காணி சுவீகரிப்பு வர்த்தமானி அறிவிப்பின் உள்நோக்கம்: சிறீதரன் எம்.பி. கேள்வி; பதிலளிக்க கால அவசாகம் கோரும் அநுரா அரசாங்கம்

09.05.2025

வடக்கு , கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் பூர்வீக காணிகளை சுவீகரிப்பதற்காக அரசினால் 2025 .03.28 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பின் உள் நோக்கம் என்னவென்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிப்பதற்கு அரசாங்கம் ஒருவாரம் காலவகாசம் கோரியுள்ளது.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (8) தமிழரசுக்கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற குழுத் தலைவர் எஸ்.சிறிதரன் 27/2 கீழ் இல் முன்வைத்த விசேட கூற்றுக்கு பதிலளிக்கையிலேயே சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க இந்த கால அவகாசத்தை கோரினார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தொடர்ந்து உரையாற்றியதாவது,

வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் காணிகள் பலவற்றில் இப்போதும் இராணுவ முகாம்கள் உள்ளன. இராணுவ வசமே பெரும்பாலான காணிகள் உள்ளன. வடக்கு மற்றும் கிழக்கில் பெரும்பகுதிகளில் மக்கள் இப்போதும் அகதிகளாக தனியார் வீடுகளிலும் முகாம்களிலும் வாழ்கின்றார்கள்.

அவர்களின் சொந்த நிலங்களில் குறிப்பாக பலாலியில் கூட தமது சொந்த நிலங்களில் வாழ முடியாதவாறு 3000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் இராணுவத்தினரால் பிடித்து வைக்கப்பட்டுள்ளதால் அந்த மக்கள் வெவ்வேறு இடங்களில் குடியேறி வாழ்ந்து வருகின்றார்கள்.

கிளிநொச்சி நகரப்பகுதியில் கிட்டத்தட்ட 41 சதவீதமான காணிகள் இராணுவத்திடமே உள்ளன. 1956 இலிருந்து 1970 வரை அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து 26000வரை தமிழ் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன.

அவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. இவ்வாறு தமது சொந்தக் காணிகள், நிலங்களை விட்டு அகதிகளாக முகாம்களில் மக்கள் வாழும் நிலையில் நான் கமத்தொழில், கால்நடை மற்றும் காணி அமைச்சர் லால்காந்தவிடம் சில கேள்விகளை முன்வைக்கின்றேன் .

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்களின் பூர்வீக காணிகளை சுவீகரிப்பதற்காக 2025 .03.28 ஆம் திகதிய 24/30 ஆம் இலக்க வர்த்தமானி முன்னறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதை அமைச்சர் அறிவாரா?

இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் கோரப்பட்டுள்ள காணிகள் என்ன தேவைக்காக கோரப்பட்டுள்ளன என்பதையும் 5700 ஏக்கர் வரையான காணிகளை அவசரமாக சுவீகரிக்க காரணம் என்ன என்பதையும் அமைச்சர் இந்த சபைக்கு அறிவிப்பாரா?

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீண்ட காலம் நடைபெற்ற யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாழும்



நிலையில் அவர்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்காது மக்களின் காணிகளை சுவீகரிக்கும் இந்த வர்த்தமானி அறிவிப்பின் உள்நோக்கம் என்ன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நீண்ட கால யுத்தம் காரணமாக அவர்களின் காணி ஆவணங்கள் தவறவிடப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகங்கள் தெரிவிக்கும் நிலையில் இந்த வர்த்தமானி அறிவிப்பின் மூலம் காணி உரிமையை உறுதிப்படுத்துமாறு எவ்வாறு கோரமுடியும் என்பதனை அமைச்சர் இந்த உயரிய சபைக்கு அறிவிப்பாரா? எனக் கேட்டார்.

இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஒரு வார கால அவகாசம் கோருவதாக சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க பதிலளித்தார்.

# அரசியல் கைதிகளை விடுவிக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

## யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

10.05.2025



பயங்கரவாத தடைச்சட்டத்தை மிக மோசமான சட்டமாக இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் தற்போதும் அந்த சட்டத்தை அமுல்படுத்துகிறது. இது நியாயமற்றது. பல ஆண்டு காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (9) நடைபெற்ற கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டின் பிரதான சட்டமாகவுள்ள அரசியலமைப்பின் முக்கிய அம்சங்களை அமுல்படுத்துமாறு சுமார் 38 ஆண்டுகாலமாக தேசிய மற்றும் சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் தான் இந்த நாடுள்ளது.

இவ்வாறான பிரேரணைகளை கொண்டு வந்து அரசாங்கத்தின் படுமோசமான செயற்பாடுகளை தடுப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஆய்வு அறிக்கைகளின் பரிந்துரைகளை கடந்த அரசாங்கங்கள் செயற்படுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டி, கடும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆணை வழங்கினார்கள்.

கடந்த கால ஆய்வு அறிக்கைகளை கருத்திற் கொண்டு தேசிய மக்கள் சக்தி மிக மோசமான பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதாகவும், அதற்கு மாற்றீடாக பிறிதொரு சட்டத்தை இயற்ற போவதில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார்.

பயங்கரவாத தடைச்சட்டம் இன்றும் நடைமுறையில் தான் உள்ளது. 12 அல்லது 13 தமிழ் அரசியல் கைதிகள் இன்றும் சிறையில் உள்ளார்கள். இந்த சட்டத்தின் பிரகாரம் தவறாக கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை.

எஸ்.கிருபாகரன் எனும் அரசியல் கைதி தொடர்பில் இந்த பாராளுமன்றத்தில் பலமுறை பேசியுள்ளேன். அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒரு வழக்கில் நிராகரிக்கப்பட்டு, அந்த வாக்குமூலம் பலமான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இதன் பின்னர் அந்த நிராகரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு எஸ்.கிருபாகரன் இன்றும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரது வழக்குகள் கொழும்பு நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் நியாயமற்ற வகையில் அம்பாந்தோட்டை பகுதிக்கு அவர் கொண்டுச் செல்லப்பட்டுள்ளார். சிறையில் வாடுகிறார்.

அதேபோல் ஆனந்தவர்மன் என்றழைக்கப்படும் அரவிந்தன் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். மிக மோசமான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை அரசாங்கம் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றார்.

# சட்டவிரோத குருந்தூர் மலை பௌத்தபிக்கு அடாவடி சிங்கள பொலிசார் உடந்தை: 3 தமிழ் விவசாயிகள் கைது

10.05.2025



முல்லைத்தீவு குருந்தூர்மலை அடிவாரத்தில் உள்ள தமது சொந்த வயல் நிலங்களில் விவசாயம் செய்யும் பொருட்டு அதை உழவியந்திரம் மூலம் தயார் செய்த காணி உரிமையாளர் குருந்தூர்மலையில் சட்டவிரோதமாக விகாரை அமைத்துள்ள விகாராதிபதியால் தடுக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில் ,

குருந்தூர் மலையில் கீழாக தமிழ் மக்களுக்கு சொந்தமான பல நூற்றுக்கணக்கான நிலங்களை பௌத்த பிக்கு தொல்லியல் திணைக்களத்தின் துணையோடு ஆக்கிரமித்து வைத்துள்ளார்.

இந்த காணிகளுக்கு அண்மையாக இன்று (10) காலை குமழமுனை தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான நீர்ப்பாசனத்தின் ஊடாக விவசாயம் செய்யும் நோக்கில் குறித்த காணியின் உரிமையாளர் சசிகுமார் என்பவர் தனது பணியாட்கள் மூலம் உழவு செய்துள்ளார்.

இதன்போது அவ்விடத்துக்கு வருகை தந்த குருந்தூர்மலை பௌத்த பிக்கு கல்கமுவ சாந்த போதி மற்றும் தொல்லியல் திணைக்களத்தினர், பொலிசார் இணைந்து விவசாய நடவடிக்கைகளை தடுத்ததோடு விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளையும், உழவியந்திரத்தினையும் கைது செய்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

குறித்த காணியின் உரிமையாளர் சசிகுமார் இதய நோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவரின் பணியாளர்கள் மூலமாக விவசாய நடவடிக்கைக்கு ஆயத்தங்களை மேற்கொண்ட போதே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு பணியாளர்களான விவசாயிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புகள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் கோரிக்கை

10.05.2025

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு எதிர்வரும் மே 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரையில், உயிர் நீர்த்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்த பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் தேசியத்திற்காக பயணிப்போர் உள்ளிட்ட அனைவரும் முன் வர வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டு. ஊடக அமையத்தில் இன்றையநாள் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க தலைவி அமலநாயகி இவ்வாறு தெரிவித்தார்.

16வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் எங்களுக்கு நடந்த இனஅழிப்புக்கான எந்த நீதியும் கிடைக்கவில்லை.

இலங்கை அரசின் இன அழிப்பு நாள் மே 18 அதை எம்மால் ஒரு போதும் மறந்து விட முடியாது, அதனை முன்னிட்டு எதிர்வரும் 12 திகதி தொடக்கம் 18 திகதி வரை இன அழிப்பு வாரத்தை முன்னெடுப்பதற்கு அனைத்து தரப்பினரது ஒத்துழைப்பினையும் வழங்குமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஒரு இனமே அழிக்கப்பட்ட நாள் மே 18. அதனை யாராலும் மறுக்கவும் முடியாது மன்னிக்கவும் முடியாது.

இந்த இனஅழிப்பானது சர்வதேசத்தின் உதவியுடன் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டது.

16 வருடங்கள் கடந்தும் சர்வதேசமும் எம்மை மறந்திருப்பதை நீனைத்து நாம் வேதனையடைகின்றோம்.

எதிர்வரும் மே 12ஆம் திகதியிலிருந்து வடகிழக்கில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் தேசிய பற்றாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அனைவரும் மே 18ஆம் திகதி வரையில் இந்த இனஅழிப்பு வாரத்திற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குமாறு கோரிநிற்கின்றோம்.

இறுதி யுத்ததின்போது பொருளாதார தடையினை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தது. இதன்காரணமாக அப்பாவி மக்கள் சாப்பிட உணவு இல்லாமல், குடிக்க நீர் இல்லாமல். உப்பில்லா கஞ்சி அருந்தி உயிர் வாழ்ந்தவர்களும் அதுவும் கிடைக்காமல் பட்டினிசாவினையும் இந்த மே 18பேரழிவு நாள் ஏற்படுத்தியிருந்தது.

அந்தவகையில் அந்த மக்களை ஞாபகப்படுத்தும் வகையில் மே 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையில் இன அழிப்பு வாரத்தில் இளைய சந்ததிக்கு இன அழிப்பு தொடர்பான விடயங்களை கொண்டுசெல்லும் வகையிலும் எமது உள்ளக் குமுறல்களை சர்வதேசம் வரையில் கொண்டுசெல்லும் வகையிலும் உப்பில்லா கஞ்சியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இந்த இன அழிப்பு வார காலத்தில் களியாட்ட நிகழ்வுளை நிறுத்தி பல்லாயிரம் உயிர்கள் சிதைக்கப்பட்டு விதைக்கப்பட்ட இடமே முள்ளிவாய்க்கால் மண்.

அந்த இடத்தில் மே 18ஆம் திகதி அனைத்து மக்களும் ஒன்று திரண்டு அங்கு பெரும் எழுச்சியை ஏற்படுத்தி சர்வதேசத்திற்கும் அனைவருக்கும் எடுத்துக்காட்ட அனைவரும் முன்வர வேண்டும்.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், தமது கைகளினால் உறவுகளை வழங்கிய உறவுகளுக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது மிகவும் அவசியமான விடயமாகும். உயிர் நீர்த்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்த பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் தேசியத்திற்காக பயணிப்போர் உள்ளிட்ட அனைவரும் முன் வர வேண்டும்.

16 வருடங்களாக இந்த நாட்டில் ஒவ்வொரு அரசு உருவாக்கம் நடைபெறுகின்றபோதிலும் ஒவ்வொரு ஜனாதிபதியும் எங்களை ஏமாற்றியே சென்றார்கள். எங்களுக்கு இலங்கைக்குள் எந்த நீதியும் கிடைக்கப்போவதில்லை என்பதை நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

எங்களுக்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் அலுவலகம் கூட ஒரு கண்துடைப்பு நாடகத்தையே அரங்கேற்றியிருக்கிறது. நாங்கள் காணாம் போனவர்கள் பற்றி பல்வேறு தகவல்களை வழங்கியபோதிலும் அவர்கள் அது தொடர்பில் எந்த விசாரணையும் முன்னெடுக்கவில்லை. சர்வதேசத்திற்கு போடும் நாடகமே இதுவாகும்.

அநுர குமார திசாநாயக்க தேர்தல் காலத்தில் உரையாற்றும் போது காணாமல் ஆக்கப்பட்டோரின் வலி தெரியும், தமது குடும்ப உறுப்பினர்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர், தனது தாய் பட்ட வேதனையையும் உணர்வதாகவும் காணாமல் ஆக்கப்படுதல் என்பது மிகவும் கொடூரமானது என பிரசார காலத்தில் தெரிவித்திருந்தார்.

இதற்கு தீர்வுபெற்றுத்தருவோம் என்றும் கூறியிருந்தார். ஆனால் ஆட்சிக்குவந்த பின்னர் அவரது செயற்பாடு மாறுபட்டதாகவே உள்ளது.




அவரிடமிருந்து நாங்கள் எந்த மாற்றத்தினையும் உணரவில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினையை கையிலெடுப்பதற்கு அவர் தயாரில்லை.

அனுரகுமார திசாநாயக்க இங்கு ஒரு பிரச்சாரத்தினை முன்னெடுப்பதுடன் சர்வதேசத்தில் வேறு ஒரு பிரசாரத்தினை முன்னெடுக்கின்றார். 2017ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலக சட்டம் வரும்போது சர்வதேச தலையீட்டுடன் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலகம் செயற்படமுடியும் என்று கூறியிருந்தார்கள். ஆனால் அதனை ஜேவிபி.தான் மறுத்து பிரசாரம் செய்தது.

இவ்வாறான ஒருவர் ஒருபோதும் சர்வதேச விசாரணையை விரும்பமாட்டார்.உள்ளக விசாரணை என்ற ஒன்றின் கீழ் முடக்குவதற்கே செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.

குற்றம் செய்தவர்களே இந்த நாட்டு அரசாங்கமாகும். குற்றம் செய்த அரசிடம் நாங்கள் எப்படி நீதி கோருவது? சர்வதேசத்திடமே நாங்கள் நீதியை கேட்கலாம்.

இந்த அரசாங்கமும் இராணுவ கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு எங்களை கூட சுதந்திரமாக நடமாட முடியாமல் பல புலனாய்வாளர்களை விட்டு எம்மை பின்தொடர்கின்றனர்.

முன்னைய ஆட்சிக்காலத்திலிருந்த அதே செயற்பாடுகள் இன்றும் இருந்து வருகின்றது. இந்த ஜனாதிபதி வரலாறு தெரியாத எங்கள் இளம் சமூகத்திடம் தன்னை நல்லவராக காட்டும் செயற்பாட்டினையே முன்னெடுத்து வருகின்றார்.

வெளித்தோற்றத்தில் தன்னை நல்லவராக காட்டிக்கொண்டு சிங்கள அரசியலுக்குள் முழுமையாக சிக்கியுள்ளார்.

இந்த இன அழிப்பிற்கு சர்வதேசமே தீர்வு தர வேண்டும் அதற்காகவே நாங்கள் 16 வருடங்களாக கண்ணீரோடு காத்திருக்கின்றோம் என்றார்.

# குருந்தூர்மலைப் பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழர்கள் மூவர் கைது; அடாவடித்தனங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்!

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

10.05.2025

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலை அடிவாரத்தில் காணப்படும் தமிழ் மக்களின் பூர்வீக வயல் நிலங்களில், பயிற்செய்கை நடவடிக்கைக்காக பண்படுத்தல் செயற்பாட்டில் தமிழ் மக்கள் ஈடுபட்டபோது கல்கமுவ சாந்தபோதி தேரரர், தொல்லியல் திணைக்களத்தினரின் முறைப்பாட்டிற்கமைய முல்லைத்தீவு பொலிசார் தமிழ் மக்கள் மூவரை இன்று (10.05.2025) கைது செய்துள்ளனர்.




இந்நிலையில் இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மூவரையும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பொலிஸ் நிலையம் சென்று கலந்துரையாடியுள்ளதுடன், தமிழ் மக்கள் தமது பயிற்செய்கை நிலங்களில் பயிற்செய்கை மேற்கொள்ளும் சுதந்திரம் மறுக்கப்படக்கூடாதெனவும், இத்தகைய அடாவடித்தனமான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தண்ணிமுறிப்பு குருந்தூர் மலைப்குதியில் தமது வயல் காணிகளை பண்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட சாமித்தம்பி ஏகாம்பரம், சிறீரத்தினம் கஜரூபன், வரதன் இளமாறன் ஆகிய மூவர் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொல்லியல் திணைக்களத்தின் எல்லைக்கல் இடப்பட்ட பகுதிகளுக்குள் பண்படுத்தல் செயற்பாடு மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே குறித்த மூவரும் கைதுசெய்



யப்படுள்ளனர்.

இந்தவிடயத்தினை அறிந்தவுடன் உடனடியாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு வருகைதந்து, கைதுசெய்யப்பட்ட மூன்று பேருடனும் கலந்துரையாடியிருந்தேன்.

அத்தோடு பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடியதில், தமக்கு வவுனியாவில் இருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றதாகவும், தொல்லியல் திணைக்களத்தின் பகுதிக்குள் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டபட்டதற்காகவே தம்மால் குறித்த மூவரையும் கைது செய்ததாகவும் தெரிவித்தார்.

அத்தோடு 11.05.2025 நாளை கைது செய்யப்பட்ட மூவரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி விடுவிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இருப்பினும் இந்தக் காணிகள் அனைத்தும் அந்த மக்களுக்குரிய காணிகள் என்பதை பொலிஸ் பொறுப்பதிகாரிக்குத் தெளிவுபடுத்தினேன்.

ஏற்கனவே மக்கள் பயிற்செய்கை மேற்கொண்ட காணிகளில், மக்களைத் தொடர்ந்து பயிற்செய்கை மேற்கொள்ளவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கும் சீர்கேடான செயற்பாடுகளே இங்கு இடம்பெற்று வருகின்றன என்பதையும் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்தேன்.

இந்த விடயத்திலே தொல்லியல் திணைக்களமானது தமது எண்ணத்திற்கு ஏற்றவாறு எல்லைக்கற்களையிட்டு இக்காணிகளை அபகரித்து வைத்திருந்தால் மக்கள் எங்கே விவசாயம் செய்வது. மக்கள் தமது காணிகளுக்குள் சுதந்திரமாகச் சென்று பயிற்செய்கை செய்வதற்கான அவர்களது சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. இவ்வாறான அடாவடிச் செயற்பாடுகளே இந்த நாட்டில் தற்போது இடம்பெறுகின்றது.



குறிப்பாக தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம், ஏ.சி.பாம் ஆகிய மூன்று இடங்களும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. இவ்வாறு எமது மக்களை மீள்குடியேற்றம்செய்யாமல், இந்த இடங்களில் வேறு குடியேற்றங்களை மேற்கொள்ளப்போகின்றனரோ என்ற அச்சம் இப்பகுதி மக்களுக்கு இருக்கின்றது.

இத்தகைய சூழலில் தமிழ்மக்கள் தமது பூர்வீக விவசாயக் காணிகளில் பயிற்செய்கை மேற்கொண்டு தமது வாழ்வாதரத்தை ஈட்டுவதற்கு தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான அடாவடிச் செயற்பாடுகளில் வனவளத்திணைக்களம், வனஜீவராசிதிணைக்களம், தொல்லியல்திணைக்களம், மகாவலி அதிகாரசபை உள்ளிட்ட அரச இயந்திரங்களால் தமிழ் மக்களின் காணிகளைத் தொடர்ந்து பறித்துக்கொண்டிருக்கும் செயற்பாடு நிறுத்தப்படவேண்டுமென்றுதான் நான் அரசாங்கத்தைக் கோருகின்றேன் - என்றார்

# முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை நினைவு வாரம் தொடங்க இருக்கும் நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (11.05.2025) அன்று முள்ளிவாய்க்கால் மண் ஊர்மக்களோடு இணைந்து பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி முற்றத்தில் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது













**நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு உறுதிகொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால், எந்த ஒரு சக்தியாலும்எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# முள்ளிவாய்க்காலில் நடந்த அவலம் காரணமாக தமிழினம் அழிவினைச் சந்திந்திருக்கின்றது

## அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி

11.05.2025

நாளை 12ஆம் திகதி முதல் எதிர்வரும் 18ஆம் தேதி வரை முள்ளிவாய்க்கால் இனவழிப்பு வாரமாகும். அதாவது முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரமானது எதிர்வரும் மே மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகி மே மாதம் 18ஆம் திகதி வரை வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் அனைத்து பொதுமக்களும் இந்நிகழ்வினை உணர்வு பூர்வமாக மேற்கொள்ள ஒன்றிணைய வேண்டும் என வடக்கு கிழக்கு உள்ளிட்ட 8 மாவட்டங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளரும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவியுமாகிய தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு பகுதியில் இன்று (11) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது, எதிர்வரும் மே மாதம் 12ஆம் திகதி முதல் மே மாதம் 18ஆம் தேதி வரை முள்ளிவாய்க்கால் இனவழிப்பு வாரமாகும். அதாவது முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரமானது எதிர்வரும் மே மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகி மே மாதம் 18ஆம் திகதி வரை வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் அனைத்து பொதுமக்களும் இந்நிகழ்வினை உணர்வு பூர்வமாக மேற்கொள்ள ஒன்றிணைய வேண்டும்

இந்நிகழ்வானது கடந்த 2009 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிவாய்க்கால் பகுதியில் நடைபெற்று முடிந்த போர் காரணமாக ஓர் இனம் அழிந்த ஒரு கதையாகவும் இரத்த ஆறு ஓடிய நாளாகவும் எங்களது உறவுகள் இந்த மாதம் 12ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை எங்கள் உறவுகள் குடும்பம் குடும்பமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட நாளாக அனுஸ்டிகும் ஒரு முக்கியமான நாளாகும். ஒரு இடவழிப்பு வாரமாக வடக்கு கிழக்கில் அனுஷ்டிக்கப்பட இருக்கின்ற இந்த வாரத்தில் 16 வருட காலமாக வலிகளை சுமந்து எங்களது உறவுகளுக்கான நீதி கிடைக்காமல் இன்று வரை நாங்கள் வீதிகளில் கண்ணீருடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.



எங்களுக்கான உரிய நீதி கிடைக்கும் வரை இந்த போராட்டத்தை சர்வதேசத்துக்கு எடுத்துச் சென்று நீதியை பெற முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். அது மட்டுமல்ல உண்மையில் அந்த முள்ளிவாய்க்கால் பகுதியில் இலங்கை அரசு அங்கு போர் நடந்து கொண்டிருக்கும் போது பொருளாதார தடையை விதித்து ஒரு உணவு கூட அப்பகுதிக்கு எடுத்து செல்ல முடியாத காலகட்டத்தில் அங்கு பட்டினி சாவு ஏற்பட்டது. ஆனால் எமது உறவுகள் உப்பில்லாத அரிசிகளை உபயோகித்து நீரை ஊற்றி அங்குள்ள கர்ப்பிணி தாய்மார்கள் குழந்தைகளை காப்பாற்றுவதற்காக கஞ்சி தயாரித்தது. அது தான் அந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியாகும். அன்று முள்ளிவாய்க்காலில் அக்கஞ்சிக்கு வரிசையில் நின்று கொண்டிருக்கின்ற வேளையில் எத்தனையோ செல் தாக்குதல்கள் விமானத் தாக்குதலுக்கு மத்தியிலும் கஞ்சி சிரட்டையுடன் உறவுகள் அவ்விடத்தில் மரணம் அடைந்தார்கள்.

இப்போது ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசு ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் தனக்கும் இவ்வாறான வலி தெரியும் எனவும் தனது தாயும் பிள்ளையை தொலைத்து விட்டு கண்ணீர் வடித்த காலமாகும் எனக் கூறி இன்று ஆட்சிக்கு வந்திருந்தார். ஆனால் இதுவரை காலமும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன செய்யலாம் என்ன செய்ய முடியும் என்ற தீர்மானம் எதையும் அவர் மேற்கொள்ளவில்லை. ஆனால் அன்று ஒரு நாள் பயங்கரவாத தடைச் சட்டத்தை தடை செய்வேன் அல்லது இல்லாமல் செய்வேன் என்று கூறியவர் இன்று அவர் ஆட்சியில் வந்தும் அதற்கான எந்த ஒரு ஏற்பாடுகளையும் செய்யவில்லை. இன்று அவர் நல்லாட்சி அரசாங்கம் என்று கூறிக்கொண்டு இங்கு உள்ள எமது இளைஞர்களையும் இங்குள்ள தமிழ் மக்களையும் நல்லாட்சி என்ற போர்வையில் இவ்வாறான சட்டங்களை வைத்து கைது செய்து கொண்டிருக்கிறார். ஆனால் இன்று இந்த அநுர அரசு பற்றியும் எமக்கு எவ்வாறான தீர்வுகளை தருவார்கள் என்றும் எமது இளைஞர்களுக்கு இதுவரை தெரியாது.

# வீரம் விளைந்த வல்வெட்டித்துறை மண்ணில் முதற்கட்டமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்!

12.05.2025

இன்றைய நாள் 12.05.2025 முதற்கட்டமாக வீரம் விளைந்த வல்வெட்டித்துறை மண்ணில் தமிழ் மக்களிடத்தில் அரிசி பெற்றுக்கொள்ளப்பட்டு தமிழனப்படுகொலையை நினைவு கூரும் முகமாக படுகொலை செய்யப்பட்ட எம் தமிழ்ச்சொந்தங்களை நினைவேந்தி. முள்ளிவாய்க்கால் கஞ்சி யாழ்ப் பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் உணர்வுபூர்வமாக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.












தமிழீழ தேசிய துக்க நாள்
தமிழ் இன அழிப்பு நாள்
Genocide Day
National Mourning Day of Thamileelam
மே May 18



Only In 2009 Over 146, 6797 Eelam Thamils Murdered, 70,000 Thamils unaccounted
Ontario Government Recognized Thamil Genocide Education Week (12May to 18 May) in Canada
www.sangathamil.ca

# யாழ். தையிட்டி சட்ட விரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக போராட்டம்

12.05.2025

யாழ்.தையிட்டி சட்ட விரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக இன்று 12- 05- 2025 திங்கட்கிழமை போராட்டம் இடம்பெற்றது.



அதேவேளை, சட்டவிரோத மக்களது காணிகளை சுவீகரித்து கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை கட்டுமானத்திற்கு எதிரான போராட்டமும் இடம்பெற்று வருகின்றது.

விகாரை அமைக்கப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி தொடர்ந்து வரும் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும், காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்



இணைந்து போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை முழுவதும் வெசாக் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் தமிழ் மக்களால் தையிட்டி ஆக்கிரமிப்பு விகாரை முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி இன்று வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற



இப்போராட்டத்தில் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியிருந்தனர்.

# தமிழீழ விடுதலைப் புலிகளில் முதல் மாவீரர் லெப். சங்கர் அவர்களுடைய தந்தையார் இன்று இயற்கை எய்தினார்

12.05.2025

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் மாவீரர் லெப். சங்கர் அவர்களுடைய தந்தையார் வடமராட்சி கம்பர்மலையைச் சேர்ந்த புகழ்பூத்த கல்வியாளர் , ஓய்வு பெற்ற ஆசிரியருமான சின்னத்துரை செல்வச்சந்திரன் (வயது 94) இன்று 12.05. 2025 திங்கட்கிழமை பிரித்தானியாவில் இயற்கை எய்தி உள்ளார் அவருக்கு எமது இறுதி வணக்கத்தினை செலுத்துவோம்.

விடுதலைப்போராட்டத்தின் முதல் மாவீரர் செல்வச்சந்திரன் சத்தியநாதன் இயக்கப்பெயர்: சங்கர் ஜூன் 19, 1960ம் ஆண்டில் பிறந்திருந்தார்.1982ம் ஆண்டின் நவம்பர் 27, வீரச்சாவடைந்த சங்கரின் தந்தையார் செல்வச்சந்திரன் அவர்களே இயற்கை எய்தியுள்ளார்.

ஈழப்போராட்டத்தில் முதல் வீரமரணமடைந்த சங்கர் அவர்கள் வீரமரணமடைந்த நாளையே மாவீரர் நாளாக அறிவித்து







ஒவ்வோராண்டும் வீரமரணமடைந்த அனைத்து போராளிகளும் தமிழ் மக்களால் நினைவு கூரப்படுகின்றார்கள்.

தமிழீழ விடுதலைப்போராட்டம் உலகளாவிய ரீதியில் கூர்ந்து கவனிப்பதற்கு முதலாவது அத்திபாரக் கல்லாய் அமைந்த உறுதி மிக்க போராளி மாவீரர். லெப். சங்கர் அவர்களின் தந்தையாருக்கு எமது புகழ் வணக்கம்.

# முள்ளிவாய்க்கால் மண்ணில் நினைவுத் தூபியை அமைக்க திட்டமிட்டிருக்கிறோம்!

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் வடகிழக்கு பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவருமான அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங்

12.05.2025

இறுதி யுத்தத்திலே கொல்லப்பட்ட மக்களை நினைவு கூரும் வகையில் முள்ளிவாய்க்கால் மண்ணில் நினைவுத் தூபியை அமைக்க திட்டமிட்டிருக்கிறோம். என தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத்தலைவரும், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் வடகிழக்கு பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவருமான அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இன்றைய காலத்திலே தற்போதைய அரசும் கடந்த கால சூழ் நிலைகளை அவதானிக்கின்ற போது போரிலே இறந்த அனைவருக்குமான ஒரு பொது நினைவுத் தூபி ஒன்றை அமைக்க திட்டமிடுறார்கள்.

அதுவும் முள்ளிவாய்க்காலிலே நாங்கள் நிறுவ இருக்கின்ற தூபியும் வித்தியாசமானது. அது எங்களுடைய இன அழிப்பை இல்லாமல் போக செய்கின்ற ஒரு முயற்சியாக இருக்கிறது.

இது நாங்கள் இனமாக அழிக்கப்பட்டோம் என்பதை உரத்து கூறுகின்ற ஒரு நிகழ்வாக இருக்கிறது. ஆகவே அவர்கள் தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்தி எதையும் செய்ய முனைந்தாலும் நாங்கள் எங்களுடைய உணர்வுகளின் அடிதளத்திலே இந்த இடத்திலே நிறுவுகின்ற நினைவுத்தூபி என்பது வருடாவருடம் காலாகாலமாக நாங்கள் அழிக்கப்பட்டோம் சிங்கள பௌத்த பேரினவாதத்தினால் தமிழ் மக்களாகிய நாங்கள் தொகைவகையின்றி கொல்லப்பட்டோம் உரத்து கூறுகின்ற ஒரு விடயமாகவே நாங்கள் அதனை பார்க்க வேண்டும். அதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்வோம்.

இன்றையநாளிலே கனடாவில் பிரண்டன் நகரில் பிரண்டன் மேஜருடைய ஒத்துழைப்பில் பிரமாண்டமான நினைவுத்தூபி ஒன்று கட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அதற்கான அடிக்கல் நாட்டப்பட்ட அந்த நிகழ்விலே நானும் பிரசன்னமாகி கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைத்திருந்தது.

இன்றைய நாளில் அதனை நிறைவேற்றி இருக்கிறார்கள் அந்த இடத்திலேயே அவர்களுக்கு இருக்கிற சுதந்திரம் நிறைவேற்றக் கூடியதாக அமைந்திருக்கின்றது.

எமது மண்ணிலும் அவ்வாறான ஒரு நினைவுத் தூவியை நாங்கள் அமைக்க வேண்டும். இந்த இடத்திலே அதற்குரிய பல்வேறு விடயங்களை நாங்கள் உருவாக்க வேண்டும்.

அதற்கு இந்த காணியை உரியவர்களிடமிருந்து பெற்று மிக விரைவிலே தொடர்கின்ற ஆண்டுகளிற்குள்ளே இந்த இடத்திலே அதனை நினைவு கூரக்கூடிய வகையில் இங்கே கொல்லப்பட்ட மக்கள் இந்த இடத்திலே இறுதி யுத்தத்திலே இறந்து போனவர்களை நாங்கள் நினைவு கூருகின்ற வகையில் அவர்களுடைய பெயர்களையும் தாங்கி வரக்கூடிய வகையில் சில நினைவு விடயங்களை முன்னெடுக்க திட்டமிட்டு இருக்கிறோம்.



ஆகவே அதற்கான காலம் எமக்கு நெருங்கி வருகின்றது. அதனை தொடர்கின்ற நாட்களிலேயே நாங்கள் மேற்கொள்ள இருக்கின்றோம். அதற்கு பலருடைய ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

அதற்கு நாங்கள் ஆரம்பிக்கின்ற போது அத்தனை சிவில் சமூகங்களோடும், மக்களோடும் அரசியல் சமூகங்களோடும், புலம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களுடைய ஒத்துழைப்போடும் இங்கு வாழ்கின்ற மக்களுடைய ஒத்துழைப்போடும் நினைவு முற்றத்தை நிச்சயமாக நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதை இந்த இடத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன் என்றார்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வட தமிழீழம் யாழில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது

13.05.2025

முள்ளிவாய்க்கால் வாரம் அனுஸ்டிக்கப்பட்டுவரும் நிலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வடக்கு, கிழக்கு தமிழர் தாயகமெங்கும் இடம்பெற்று வருகின்றது.





அந்தவகையில், நல்லூரடியில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்னால் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி வழங்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது அமைப்பின் ஏற்பாட்டில் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் முன்னெடுக்கப்பட்டது.

இதில் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர், பொது அமைப்புகளை சேர்ந்தவர்களும் இணைந்திருந்தனர்.

# முல்லைத்தீவு முள்ளியவளையில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கள்

13.04.2025

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முள்ளியவளை மேற்கு வட்டாரக்கிளையின் ஏற்பாட்டில், முள்ளியவளைப் பகுதியில் செவ்வாய்க்கிழமை (13) முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.







முள்ளியவளை மேற்கு வட்டாரக்கிளையின் தலைவர் குமாரையா உதயகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்

நிகழ்வில், முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்ட யுத்தத்தில் உயிர் நீத்த உறவுகளுக்கு சுடரேற்றி, அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இந் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங் கேற்றிருந்தார்.

இந்த நினைவு வணக்க நிகழ்வு மற்றும், கஞ்சி வழங்கும் செயற்பாட்டில் முள்ளியவளை மேற்கு வட்டாரத்தில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டிய இரத் தினம் ஜெகதீசன், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தொண் டர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

# வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கப்பட்டது

13.04.2025

யாழ்பல்கலைக்கழக வவுனியா கலைப்பீடமாணவர் ஒன்றியத் தினரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வவுனியா பிரதான தபால்நிலையத்திற்கு முன்பாக செவ்வாய்க்கிழமை (13) இடம்பெற்றது.





தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சி யினை பரிமாறி தமிழ்மக்கள் இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றினையும் , வலிகளையும் இளைய தலைமுறை யினருக்கு கடத்தும் செயற்பாட்டினை குறித்த பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

அந்தவகையில் 11 மணியளவில் வவுனியா தபால்நிலையத் திற்கு முன்பாக குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, வலிந்துகாணமால் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா இலுப்பையடி பகுதியில் முள்ளி வாய்க்கால் கஞ்சிவழங்கும் நிகழ்வு இன்று முன்னெடுக் கப்பட்டது.

குறித்த நிகழ்வுகளில், பொதுமக்கள் பலர் உணர்வுபூர்வமாக வருகைதந்து கஞ்சி அருந்தி சென்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேசம் பதிலளிக்குமா?

## மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம்

13.05.2025

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி கண்ணீர் சிந்திய எத்தனையோ கண்கள் இன்று மூடி விட்டன. இன்னும் எத்தனை கண்கள் மூடப் போகின்றதோ தெரியாது. இதற்கு சர்வதேசம் என்ன பதில் சொல்லப் போகின்றது? என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும்





குடும்பங்களின் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் செவ்வாய்க் கிழமை (13) மதியம் மன்னார் பள்ளிமுனை பெருக்க மரத்தடி பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி நினைவு கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கப்பட்டது.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒவ்வொரு தாய் மாரும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தமிழினமும் கொல்லப்பட்டு, அழிக்கப்பட்ட அந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் இரத்தமும், சதையும் சிந்தப்பட்டு அந்த நாளை கடந்த 16 வருடங்களாக ஒவ்வொரு தமிழ் உறவுகளும் நினைவு கூர்ந்து கஞ்சி காய்ச்சி வழங்கிக் கொண்டு இருக்கிறோம்.

இந்த கஞ்சி 16 வருடங்களுக்கு முன் ஒரு பிடி அரிசி கூட கிடைக்காமல் இருந்த அரிசியை வைத்து தண்ணீர் ஊற்றி உப்பும் இல்லாமல் அங்கிருந்த அமைப்புகள் குறித்த கஞ்சியை பொதுமக்களுக்கு வழங்கி உள்ளனர்.

அதில் சிலருக்குத்தான் இந்த கஞ்சி கிடைத்தது. வரிசையில் நின்று இந்த கஞ்சியை வாங்கி பசியை போக்குவோம் என்ற நேரத்தில் கூட கொடூர யுத்தம் முன்னெடுக்கப்பட்டது அந்த அரசாங்கத்தினால்.

கஞ்சிக்காக வரிசையில் நின்ற எத்தனையோ உறவுகள் கஞ்சி கிடைக்காமல் குண்டு வெடிப்பில் சிக்கி உயிரிழந்தனர். இன்று அதை மறக்கவும் முடியாது. மன்னிக்கவும் முடியாது.

எம் இனத்திற்கு நடந்த கொடூரத்தை உலக நாடுகள் அனைத் தையும் பார்த்துக் கொண்டு தான் இருந்தது. இன்று வரையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது.

இந்த கஞ்சியை நாம் வழங்குவதற்கு காரணம் தற்கால இளைய சமூகத்திற்கு 16 வருடங்களுக்கு முன் என்ன நடந்தது என்பது தெரியாது.

16 வருட கால இடைவெளியில் நிறைய நிறைய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவை எல்லாம் எம் சமுதாயத்தின் இளைஞர் களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் முதியவர்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் என்ற இடத்தில் இன்று வரையும் இரத்தமும் சதையும் சிந்திக் கொண்டே இருக்கிறது.

அதனை ஒவ்வொரு வருடமும் மே மாதம் 18 ஆம் திகதி ஒவ் வொரு இறந்த ஆத்மாக்காகவும் நினைவு கூற வேண்டும்.

அது தான் நாம் எம் இனத்திற்கு செய்கின்ற பரிகாரம். அதை தான் இன்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளாகிய நாமும் நினைவு கூர்ந்து 16 வருடமாக அங்கே சென்று வந்து கஞ்சி காய்ச்சி நினைவு படுத்திக் கொண்டு வேதனைகளையும், சோதனைகளையும் தாங்கிக்கொண்டு ஒவ்வொரு உள்ளங் களும் இன்று வீதியில் நின்று போராடிக் கொண்டு, எம் உறவுகள் மீண்டும் எம்மிடம் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக் கையில் நாங்கள் காவல் நிற்கின்றோம்.

எம் கண்ணீர் என்று துடைக்கப் படுமோ தெரியாது. ஆனால் கண்ணீர் சிந்திய எத்தனையோ உறவுகளின் கண்கள் மூடி விட்டன.அந்த மூடிய கண்களுக்கு இந்த சர்வதேசம் என்ன பதில் சொல்லப் போகின்றதோ தெரியாது.

இன்னும் எத்தனை கண்கள் மூடப் போகின்றதோ தெரியாது. இதற்கிடையில் வீதியில் நிற்கும் உறவுகளாகிய எமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றனர்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கள்

13.04.2025

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாள் இன்று (13) பல பகுதிகளில் உணர்வுபூர்வமாக நினைவு கூறப்பட்டு வருகிறது.





அந்த வகையில் கிளிநொச்சி பஸ் தரிப்பு நிலையத்தில் யாழ்ப் பாணம் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

**சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்குமுறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும், போராட்டத்தில் குதித்தோம்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி தென் தமிழீழம் அப்பாறையில் முன்னெடுப்பு

13.04.2025

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் இனவழிப்பு வாரம் மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வும் நினைவேந்தல் பிரார்த்தனையும் சங்கத்தின் மாவட்டத் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் செவ்வாய்க்கிழமை (13) நடைபெற்றது.






சங்கத்தின் நிருவாக உறுப்பினர்களின் பங்கேற்புடன் இந் நிகழ்வு திருக்கோவில் தம்பிலுவில் பொதுச்சந்தைக்கு முன் பாக இடம்பெற்றது.

சிறப்பாக இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் ஆலோசகரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான தாமோதரம் பிரதீவனும் கலந்து கொண்டிருந்தார். மேலும் விசேட பூசை வழிபாடு இடம் பெற்ற பின்னர் முள்ளிவாய்க்கால் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்கள் வர்த்தக நிறுவனங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் உள்ள கஞ்சி காய்ச்சப்பட்டு சிரட்டை ஊடாக மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

# மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவு பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டித்து வேலணையில் ஆர்ப்பாட்டம்: சிறீலங்கா பொலிசார் இடையூறு!

13.04.2025

புங்குடுதீவு மாணவி வித்தியா வன்புணர்வுக்கு உட்படுத் தப்பட்டு கொடூரமாக படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 10 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்த மாணவிக்கு நிகழ்ந்த கொடூரத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும், பொதுவாக பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இன்றைய தினம் (13) வேலணை சந்தியில் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.






இந்த போராட்டத்தினை சமூக மட்ட அமைப்புகள் ஒன்றி ணைந்து முன்னெடுத்தன. இதில் சமூக மட்ட அமைப்பினர், கல்விமான்கள், கட்சி சார்ந்தவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பறையொலி எழுப்பி, "பாலியல் வன்புணர்வுக்கு எதிராக ஒன்றிணைவோம், பாலியல் வன் புணர்வுக்கு எதிரான நீதிக்கு சட்டவாக்கத் துறையே கவனம் செலுத்து, பாலியல் வன்கொடுமைக்கு எதிராக மௌனத்தை கலைப்போம், பாலியல் வன்கொடுமைக்கு நீதி வேண்டும், பெண்களை இழிவுபடுத்தாத ஊடகங்கள் வேண்டும், ஊட கங்களே பாலியல் வன்கொடுமைகளை பாதுகாக்காதே, பாலியல் சுரண்டல்களின் கதவுகளை மூடுவோம், உரிமையின் எல்லைகளை திறப்போம், பொது போக்குவரத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வோம்" என கோஷமிட்டு, பதா தைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், ஜனநாயக ரீதியாக இடம்பெற்ற இந்த போராட் டத்தில் சிறீலங்கா பொலிசார் உட்புகுந்து குழப்பம் விளைவித் ததால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்களை கேட்டு பதிவுசெய்வதற்கு பொலிசார் முனைந்தனர். இருப்பினும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது படங்களை வேண்டு மானால் எடுக்குமாறும், பெயர்களை கூற முடியாது என்றும் திட்டவட்டமாக கூறியதுடன், "இது எமக்கு மாத்திரமல்ல, உங் களது வீட்டில் உள்ள பெண்களுக்கும் ஏற்படும் பிரச்சினை. எனவே, இதற்கு எதிராக நாங்கள் குரல் கொடுப்போம்" எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறியதால் பொலிஸார் ஒரு கட்டத்தில் ஒதுங்கி நின்றனர்.

பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கும் போராட்டத்தை கூற அநுர அரசு பொலிசாரை வைத்து அடக்குகிறது என்றால் ஏனைய விடயங் களுக்கான செயற்பாடுகளை இந்த அரசு எவ்வாறு முன் னெடுக்கும் என்றும் கூறி மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப் படுத்தினர்.



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழினப்படுகொலையை நினைவுகூறும் ‘நினைவாயுதம்’ கண்காட்சி – 14.05.2025















# மட்டக்களப்பில் சிவில் சமூகச் செயற்பாட்டாளர் மீது தாக்குதல்

14.04.2025

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட குடும்பிமலை பகுதியில் வைத்து மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒருவர் இனந்தெரியாதவர் களினால் தாக்கப்பட்டுள்ளார்.



மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் பகுதியைச் சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர் செல்வகுமார் என்பவரே வழி மறிக் கப்பட்டு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார்.

இன்று புதன்கிழமை (14) காலை குடும்பிமலைப் பிரதேசத்தில் வைத்து வழி மறித்த நால்வர் அருகில் இருந்த பற்றைக் காட்டிற்குள் இழுத்துச் சென்று கைகளை பின்னால் கட்டிய நிலையில் மிக மோசமான முறையில் சரமாரியாக கையாளும் தடியாலும் தாக்கியுள்ளனர்.

இன்றைய நாள் குடும்பிமலைப் பிரதேசத்தில் வைத்து முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்குவதற்கு ஏற்பாடாகி இருந்த நிலையில் ஏற்பாட்டாளர்களில் ஒருவருடைய தாயார் காலமானதன் காரணத்தினால் இன்றைய நாள் மேற்படி நிகழ்வினை நடாத்த முடியாமல் போனது.

இதன் காரணத்தை குடும்பிமலைக் கிராமத்திற்குச் சென்று உரியதரப்பினரிடம் தெரிவித்து விட்டு வருவதற்காக மோட்டார் சைக்கிளில் தனது பயணத்தினை மேற்கொண்டுள்ளார்.

செல்லும் வழியில் தரவை இராணுவமுகாமிற்கும் ஐந்தாம் கட்டை சந்தியில் அமைந்துள்ள இராணுவ முகாமிற்குமிடை யில் வழி மறிக்கப்பட்டுள்ளார். இரண்டு மோட்டார் சைக்கிள் களில் காணப்பட்ட நாள்வர் அரைகுறைத் தமிழில் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்குவது தொடர்பான கேள்விகளைக் கேட்டு சேட்டு கிழிக்கப்பட்டு உள் வெனியனால் கைகள் இரண் டும் பின்னால் கட்டப்பட்டு மிக மோசமாக தாக்கப்பட்டுள்ளார்.

இதன்போது அவரின் மோட்டார் சைக்கிளும் சேதப்படுத்தப் பட்டுள்ளதாக தாக்குதலுக்குள்ளான சிவில் சமூக செயற்பாட்




டாளர் தெரிவித்தார்.

தாக்குதல்தாரிகள் அவ்விடத்தை விட்டுச் சென்றதும் அந்த வழியால் வந்த சிலரால் காப்பாற்றப்பட்டு தற்சமயம் சந்திவெளி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



# யாழ். பல்கலைக்கழகத்தில் மே 18 நினைவாக இரத்ததான முகாம்!

14.05.2025

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகத்தின் ஒருங்கிணைப்பில் “குருதியால் தோய்ந்த நம் தேசத்திற்காய் ஒரு துளி குருதி” எனும் கருப்பொருளில் மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று இன்று புதன்கிழமை (14) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.






முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நினைவுகூர்ந்து வரும் நிலையில், அதனை நினைவுகூரும் முகமாக இந்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள் பலரும் கலந்துகொண்டு குருதிக்கொடையில் ஈடுபட்டனர். தமிழ், சிங்கள, முஸ்லீம் மாணவர்கள் என அனைவரும் இனம், மதம், மொழி பேதங்களை கடந்து இந்த இரத்ததான முகாமில் ஈடுபட்டனர்.

# தமிழினப்படுகொலைக்கு நீதி கோரி ஊர்திப் பவனி ஆரம்பம்!

14.04.2025

தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் விதமாக யாழ்ப்பாணம் நல்லூர் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தில் இருந்து இன்றைய நாள் புதன்கிழமை (14) ஊர்தி பவனி ஆரம்பமானது.






முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில் இந்த ஊர்தி பவனி ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளது.

“தமிழினப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும்”, “தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி வேண்டும்” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டு இனப்படுகொலை நினைவுத்தூபி வைக்கப்பட்டுள்ள நிலையில், வீதிகளில் பயணித்த பொது மக்கள் வணக்கம் செலுத்தினர்.






## அதிகரித்துவரும் வாகனத் திருட்டுக்கு எதிராக ஒன்ராரியோ அரசு துணிச்சலான நடவடிக்கை

01.05.2025

திறப்பு இல்லாத உள்நுழைவுத் தொழில்நுட்பத்தை பயன் படுத்தும் குற்றவாளிகளை இலக்காகக் கொண்டு அதிகரித்து வரும் வாகனத் திருட்டுகளுக்கு எதிராக போராட்டத்தை ஒன் ராரியோ ஒரு புதிய சட்டமன்றத் திட்டத்துடன் முடுக்கிவிடுகிறது. “திறப்பு இல்லாத உள்நுழைவுத் தொழில்நுட்பத்தின் சட்ட விரோத பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதன் மூலம், குற்றச் செயல்களை நாங்கள் தடுத்து, திருட்டுகள் நடப்பதற்கு முன்பே அவற்றைத் தடுக்க காவல்துறைக்கு தேவையான கருவிகளை வழங்குகிறோம்” என்று அமைச்சர் விஜய் தனிகாசலம் கூறினார்.

முன்மொழியப்பட்ட சட்டம், வாகனத் திருட்டில் பயன்படுத்தப் படும் என்று சந்தேகிக்கப்படும் “கீ ஃபோப்” நிரலாக்க சாத னங்கள் மற்றும் “ஸ்கேனர்கள்” போன்ற பொருட்களைக் கைப் பற்ற காவல்துறைக்கு அதிகாரம் அளிக்கும். சட்ட அமலாக் கத்தை ஆதரிப்பதற்கும் அதிகளவில் திருட்டு நடைபெறும் இடங்களில் கவனம் செலுத்துவதற்கும் ஒரு புதிய பெரிய வாகனத் திருட்டு வழக்கு விசாரணை குழு நிரந்தரமாக்கப் படும். இம்முயற்சி ஒன்ராரியோ எங்கும் வாழும் மக்கள் தங்கள் சமூகங்கள் தீவிரமாகப் பாதுகாக்கப்படுவதை அறிந்து பாது காப்பாக உணர்வதை உறுதி செய்கிறது.



## கனடா புதிய ஜனநாயகக் கட்சிக்கு இடைக்கால தலைவராக் டான் டேவிஸ் நியமனம்

06.05.2025

கனடாவின் புதிய ஜனநாயகக் கட்சி (NDP) இற்கான இடைக்கால தலைவராக பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண பாராளுமன்ற உறுப்பினர் டான் டேவிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தேசிய பேரவை திங்கட்கிழமையன்று கூடித் தீர் மானம் எடுத்தது.

முன்னாள் தலைவர் ஜக்மீத் சிங், ஏப்ரல் 28 அன்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் தன் சொந்த தொகுதியான மத்திய பர்னபியில் தோல்வியடைந்ததனை தொடர்ந்து தனது ராஜினாமாவை அறிவித்தார்.

பாராளுமன்றத்தின் முந்தைய அமர்வில் சுகாதாரத்துறை நிழல் அமைச்சராக இருந்த டான் டேவிஸ், நெடுஞ்சாலைகள் மற்றும் மருந்துப் பாதுகாப்புச் சட்டங்களை முன்னேற்றுவதற்காக லிபரல் அரசுடன் NDP நடத்திய பேச்சுவார்த்தைகளுக்கு வழி காட்டியாக இருந்தார்.

கட்சி தலைமை தொடர்பான நிலையைப் பற்றி ஆலோசிக்க NDP பாராளுமன்றக் குழு கடந்த வாரம் இருமுறை சந்தித்தது.

இந்த விவாதங்கள், தேசிய பேரவையின் திங்கட்கிழமை முடிவை உருவாக்க உதவியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முந்தைய வாரம் நடைபெற்ற தேர்தலின் பின்னர் NDP பாராளு மன்றத்தில் வெறும் ஏழு ஆசனங்கள் மட்டுமே பெற்றதால், அதிகாரப்பூர்வ கட்சி அந்தஸ்தை இழந்தது.

புதிய தலைமைத் தேர்தலுக்கான விதிமுறைகள் மற்றும் நேர மென்பவை பின்னர் அறிவிக்கப்படும் என கட்சி அறிவித் துள்ளது.



## கனடா விற்பனைக்கு அல்ல: அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பிடமே நேரடியாக கூறிய கனடா பிரதமர்

07.05.2025

தேர்தலில் வெற்றி பெற்று பிரதமரானதைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை அவரது அலுவலகத்தில் சந் தித்தார் கனடா பிரதமரான மார்க் கார்ணி.

அப்போதும், கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாண மாக இனைப்பது குறித்தே பேசிக்கொண்டிருந்தார் ட்ரம்ப்.

கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பதால் கனடாவுக்கு வரி விலக்கு, பாதுகாப்பு என பல நன்மைகள் கிடைக்கும் என தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருந்தார் ட்ரம்ப்.

அவர் சொல்வதை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த கனடா பிரதமரான மார்க் கார்ணி, அவர் பேசி முடித்ததும், சில இட ங்கள் விற்பனைக்கு அல்ல, எப்போதுமே அல்ல என்றார்.

உடனே, எப்போதுமே அல்ல என்று சொல்லாதீர்கள் என ட்ரம்ப் கூற, எப்போதுமே அல்ல, எப்போதுமே அல்ல, என மீண்டும் மீண்டும் மறுத்துப் பேசினார் கார்னி.

இந்த நிகழ்வைக் காட்டும் வீடியோ சமூக ஊடகமான எக்ஸில் வெளியாக, ’கார்னி பேசிக்கொண்டிருப்பது ஒரு சுவருடன், அதற்கு மூளை செல்களே கிடையாது’ என்று விமர்சித்துள்ளார் ஒருவர்.





**“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்



# அமெரிக்க பொருளாதார போரினால் கனடாவிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்

## கனடா மத்திய வங்கியின் ஆளனர் ரிப் மெக்கலம்

08.05.2025

அமெரிக்கா தொடுத்துள்ள பொருளதார போரினால் கனடாவிற்கு பெரும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

கனடிய மக்களினதும் நிறுவனங்களினதும் நிதிநிலைமைகள் 2025ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஆரோக்கியமான வளர்ச் சிக்குள் இருந்தன.

இருப்பினும், அமெரிக்கா தொடங்கிய வரித் தகராறு அந்த நிலையை அச்சுறுத்துவதாக வங்கிக் கானடா (Bank of Canada) தெரிவித்துள்ளது.

வங்கியின் “நிதி நிலைத்தன்மை அறிக்கையில்” வெளியான தகவலின்படி, கடந்த வருடத்தை விட இந்த வருடத்தின் ஆரம் பத்தில் குடும்பங்களின் வருமானத்துடன் ஒப்பிடுகையில் கடன் வீழ்ச்சி காணப்பட்டது.

மேலும், நிறுவனங்களின் நிதி நிலைமைகளும் சாதகமான நிலையில் காணப்பட்டது.

“நாட்டின் நிதி அமைப்பு கடந்த ஆண்டுகளில் பலவித அதிர்ச் சிகளை சந்தித்தாலும், அவை வெற்றிகரமாக எதிர்கொள்ளப் பட்டதாக மத்திய வங்கியின் ஆளுனர் ரிப் மெக்கலம் தெரிவித் துள்ளார்.

வட்டி விகிதங்களும் உறுதித்தன்மையை அதிகரித்திருந்ததாக வங்கியின் ஆளுநர் மேலும் தெரிவித்திருந்தார்.

இது எல்லாம் நடந்தபோது, அமெரிக்காவின் புதிய பாதுகாப்பு மனப்பாங்கில் செயல்படும் வரி கொள்கைகள், கனடாவை புதிய சிக்கல்களில் தள்ளி விட்டுள்ளதாக அவர் எச்சரித்துள்ளார்.

“பன்னாட்டு வளர்ச்சிக்கு எதிராக செல்வதுபோல், அமெரிக்க வரி கொள்கைகள் முற்றிலும் தற்காப்பு போக்குடன் மாறிவிட்டன.

இது உலகளாவிய சந்தை வளர்ச்சியை சுருக்கி வருகிறது. ஒரு




நீடிக்கும் வரி போர் கனடா பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய ஆபத்தை உருவாக்கும்,” என மத்திய வங்கி ஆளுனர் தெரி வித்துள்ளார்.

# மொன்ரியல் நகரம் மே 18-ஐ தமிழின அழிப்பு நினைவேந்தல் நாளாக அங்கீகரித்து வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது

08.05.2025

Côte-des-Neiges–Notre-Dame-de-Grâce பெருநகராட்சி மன்றம், மே 18-ஐ தமிழ் இனவழிப்பு நினைவேந்தல் நாளாக அங்கீகரிக்கும் தீர்மானத்தை அதிகாரபூர்வமாக நிறைவேற்றி யுள்ளது. இந்த தீர்மானம், தமிழின அழிப்பில் படுகொலை செய் யப்பட்டவர்களின் நினைவாக கல்வி மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. மே 18ஆம் நாள் - இழந்த அப்பாவி உயிர்களின் நினைவைப் போற்றவும், அவர்களின் கதைகள் மற்றும் மீள்தன்மைக்கு சாட் சியமளிக்கவும் உலகளவில் தமிழ் இனவழிப்பு நினைவேந்தல் நாளாக நினைவுகூரப்படவுள்ளது.







இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம், கனடா முழுவதிலும் மற் றும் உலகளாவிய தமிழ்ச் சமூகத்திற்கும் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகும். பல ஆண்டுகளாக, தமிழர் இனப் படுகொலைக்கு நீதியும் அங்கீகாரமும் வேண்டும் எனத் தமிழர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இந்த அங்கீகாரம், தமிழர்களின் துயரங்களைக் களையக்கூடிய முக்கியமான படிநிலையாகும்.

“இத்தீர்மானம் சாத்தியமாகக் காரணமாக இருந்த, சுபிதா தர்ம குலசேகரம் தலைமையில் செயலாற்றிய மொன்ரியல் தமிழ்ச் சமூகத்தின் உறுதியான தலைமையையும், இடையறாத போராட்டத்தையும் நான் மனமாரப் பாராட்டி அங்கீகரிக்க விரும் புகிறேன்” என ஒன்ராரியோ மாநில சுகாதார அமைச்சின், உளநலத் துறையின் இணை அமைச்சரும் சட்டமன்ற உறுப் பினருமான விஜய் தணிகாசலம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

2009 மே மாதம், இலங்கை அரசு முள்ளிவாய்க்காலில் தமிழர் களுக்கு எதிராக கிளஸ்டர் குண்டுவீச்சுகள், கடத்தல்கள், பாலி யல் வன்கொடுமைகள், படுகொலைகள் மற்றும் உணவு, மருந் துகள் போன்றவற்றை தடுத்து நிறுத்தி இனவழிப்பு நடவடிக் கைகளை தீவிரமாக முன்னெடுத்தது.

எதிர்வரும், மே 12 முதல் 18 வரை, ஒன்ராரியோ முழுவதும் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமை ஒன்ராரியோவிலுள்ள அனைத்துக் கல்விச்சபைகளிலும் அனுசரிக்கப்படும்.

தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமை, நடைபெற்ற தமிழின அழிப்பை அங்கீகரிக்கவும், இழந்த உயிர்களை நினைவு கூரவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையை அளிக்கவும், அவர்களின் உளநல ஆற்றுப்படுத்தலுக்கான செயல் முறை யைக் கொண்டுவரவும் உதவுகிறது. புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனவழிப்பை அங் கீகரித்த முதல் அரச கட்டமைப்பு ஒன்ராரியோ மாநிலமாக விளங்குகின்றது.



# கனடாவில் உத்தியோகபூர்வமாக பிரம்ரன் மாநகரில் தமிழர் இனவழிப்பு நினைவாலயத்தூபி திறப்பு

10.05.2025

கனடா ஒன்ராரியோ பிரம்டனில் தமிழர் இனவழிப்பு நினைவுத் தூபி உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலையை நினைவு கூரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபியை திறந்துவைக்கும் நிகழ்வு (10.05.2025 @ 7.45 pm Canadian Time) சிங்காவுசி பூங்காவில் (Chinguacousy Park, Brampton, ON L6S 6G7) எனும் இடம் பெற்றவேளை கனடா அரசியல்வாதிகள் உட்பட பெருமளவானவர் திரண்டிருந்தனர்.

இனப்படுகொலைக்குள்ளானவர்களை நினைவுகூரும் வகையில் அகவிளக்கேற்றுவதுடன் நினைவுத்தூபி திறப்பு விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதன் பின்னர் கனடாவின் அரசியல்வாதிகள் உட்பட பல நாடாவை வெட்டி நினைத்தூபியை திறந்து வைத்தனர்.




































# இலங்கையில் தமிழர்கள் இனவழிப்பு செய்யப் படவில்லையென்பவர்களுக்கு கனடாவில் இடமில்லை

## ஒன்ராரியோ பிரம்டன் முதல்வர் பட்சிக் பிரவுண்

10.05.2025

கனடாவில் தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபியை நிர்மாணிப்பதில் தான் எதிர்கொண்ட சவால்கள் குறித்து ஒன்ராரியோ பிரம்டன் முதல்வர் பட்ரிக் பிரவுண் நினைவுதூபி திறப்பு விழாவில் கருத்து வெளியிட்டுள்ளார்.

நாங்கள் தமிழர்கள் இனவழிப்பின் அளவை மறக்ககூடாது என அவர் தெரிவித்தார். இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படவில்லை என தெரிவிப்பவர்களிற்கு பிரம்ரனில் இடமில்லை, கனடாவில் இடமில்லை கொழும்பிற்கு திரும்பிசெல்லுங்கள் என அவர் தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கை அரசாங்கத்தினால் படுகொலை செயப்பட்டார்கள், இலங்கை அரசாங்கம் தவறான தகவல்களை பரப்பிவருகின்றது, என தெரிவித்த பிரம்ரன் மேயர் அவர்கள் உண்மைக்காகவும் நீதிக்காவும் குரல் கொடுத்த தமிழர்களை இழிவுபடுத்தவும் தாக்கவும் முயன்றனர், இது ஒரு உடல்ரீதியான இனப்படுகொலை மாத்திரமல்ல உலகின் அனைத்து பகுதிகளிலும் உள்ள தமிழர்கள் மீதான தாக்குதல் என தெரிவித்தார்.

தமிழர் படுகொலை நினைவுதூபி என நகரத்தில் உருவாகியுள்ளமை குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன் ஆனால் இன்னமும் செய்யவேண்டிய பணிகள் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.



# கனடாவில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி வரலாற்றில் முக்கிய தருணம்

## கனடாவின் நீதிமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி

10.05.2025

கனடா பிரம்ரனில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி திறக்கப்பட்டுள்ளமை எங்கள் கூட்டு வரலாற்றில் முக்கியமான ஒரு தருணமாகும் என கனடாவின் நீதியமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த நினைவுத்தூபி இலங்கையில் அரசாங்கத்தினால் தமிழர்களிற்கு எதிரான இனப்படுகொலையின் போது கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களின் நினைவுச்சின்னமாக விளங்குகின்றது.

உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் வலிமை மற்றும் மீள் எழுச்சி தன்மையை இது கௌரவிக்கின்றது. அவர்களின் அர்ப்பணிப்பே இந்த நினைவுத்தூபி உருவாகுவதற்கான காரணம்.

நான் கனடா பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன், கனடா தமிழர் தேசிய பேரவை, பிரம்ரன் தமிழ் சங்கம் ஆகிய தரப்பினருக்கும் எங்கள் கதைகள் ஒருபோதும் மறக்கப்படாமலிருப்பதற்காக போராடியவர்களிற்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நாங்கள் தொடர்ந்தும் நீதிக்காக குரல்கொடுக்கும் அதேவேளை ஐக்கியப்பட்டவர்களாக வலிமையானவர்களாக விளங்குவோம்.



# கனடாவில் தமிழின அழிப்பு நினைவகம் திறந்து வைக்கப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க தருணத்தில் நான் பெருமிதமடைகிறேன்

## ஒன்ராரியோவின் சுகாதார அமைச்சின் உளநலத்துறை இணை அமைச்சரும் ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதிக்கான ஒன்ராரியோ மாநில சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம்

10.05.2025

தமிழின அழிப்பில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் வகையில் கனடாவில் தமிழின அழிப்பு நினைவகம் திறந்து வைக்கப்படும் இவ்வரலாற்றுச் சிறப்பு மிக்க இத்தருணத்தில் நான் மிகுந்த பெருமிதத்துடன் நிற்கிறேன் என ஒன்ராரியோவின் சுகாதார அமைச்சின் உளநலத்துறை இணை அமைச்சரும், ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதிக்கான மாநில சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் தெரிவித்தார்.

கனடாவின் பிரம்ரன் நகரில் தமிழின அழிப்பு நினைவகம் மே 10 ஆம் திகதி சனிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடத்தப்பட்ட தமிழின அழிப்பில் உயிரிழந்தவர்களின் நினைவாக இந்நினைவகம் கட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் வரலாற்றினையும், அவர்களின் துயர்சுமந்த நினைவின் கதைகளையும் எதிர்காலத் தலைமுறையினரால் நினைவுகூரப்படுவதை உறுதிசெய்யும் ஒரு சக்கிவாய்ந்த அடையாளச் சின்னமாக இந்நினைவகம் எழுந்து நிற்கிறது.

2021ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் தமிழின அழிப்பின் நினைவாக எழுப்பப்பட்ட நினைவிடத்தினை இலங்கை அரசு இடித்தழித்ததற்குப் பதிலளிக்கும் விதத்தில், பிரம்ரன் மாநாகர சபையில் முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஓர் இன அழிப்பு நினைவகம் கட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஒன்ராரியோவின் சுகாதார அமைச்சின் உளநலத்துறை இணை அமைச்சரும், ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதிக்கான மாநில சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் மேலும் கூறுகையில்,

“ இன அழிப்பின் இறுதிக் கட்டம், நடைபெற்ற இன அழிப்பினை மறுத்து அவற்றுக்கான ஆதாரங்களை அழிப்பதுமாகும். அவ்வகையில், தமிழின அழிப்பின் நினைவுச் சின்னமான முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை 2021 இல் இலங்கை அரசு அழித்ததென்பது, தான் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட இனவழிப்பின் தடயங்களை இல்லாதொழிப்பதின் ஓர் அங்கமாகவே காணப்படுகிறது”

“இன்று, தமிழின அழிப்பில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் வகையில் கனடாவில் தமிழின அழிப்பு நினைவகம் திறந்து வைக்கப்படும் இவ்வரலாற்றுச் சிறப்பு மிக்க இத்தருணத்தில் நான் மிகுந்த பெருமிதத்துடன் நிற்கிறேன்.”

கனடியத் தமிழர் தேசிய அவைக்கும், மேயர் பற்றிக் பிரவுன் மற்றும் கனடா முழுவதும் உள்ள அனைத்து தமிழ் அமைப்புகளுக்கும் அவர்களின் அசைக்க முடியாத தலைமைக்கும் அயராத பொறுப்புக்கூறல் பணிகளுக்கும் விஜய் தணிகாசலம் நன்றியைத் தெரிவித்தார். அவர்களின் அர்ப்பணிப்பு தமிழ் மக்களின் குரல்களும், நாம் இழந்தவர்களின் நினைவுகளும் என்றென்றும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.




## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# தமிழின அழிப்பு நினைவுத்தூபி உண்மையான ஒரு நினைவூட்டல்!

## கனடா நாடாளுமன்ற உறுப்பினர் யுவனிட்டா நாதன்

10.05.2025

கனடாவின் பிரம்ரனில் திறந்து வைக்கப்பட்ட  தமிழின அழிப்பு நினைவுச்சின்னம் எதிர்கால சந்ததியினர் கற்றுக்கொள்வதற்கான சிந்திப்பதற்கான இடமாக மாறும் என்பது எனது நம்பிக்கை, என தெரிவித்துள்ளகனடா நாடாளுமன்ற உறுப்பினர் யுவனிட்டா நாதன்  நாம் அநீதியை எதிர்கொள்ளும் ஒருபோதும் மௌனமாக இருக்ககூடாது என்பதற்கான உண்மையான நினைவூட்டல் என தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நேற்றைய நாள் அர்த்தபூர்வமானதாகஅமைந்தது, தமிழின அழிப்பு நினைவுத்தூபியை திறக்கும் நிகழ்வில் நான் எனது சமூகத்தவருடன் இணைந்துகொண்டேன். கனடிய தமிழர் தேசிய அவைக்கும், பிரம்ரன் தமிழ் சங்கத்திற்கும், மேயர் பட்ரிக் பிரவுனிற்கும் நகரத்தின் கவுன்சிலர்களிற்கும் இந்த நினைவுத்துாபியை சாத்தியமாக்கிய சமூக அமைப்புகள் தலைவர்களிற்கும் நான் நன்றியுடையவளாக உள்ளேன்.

இந்த சக்திவாய்ந்த இடம் தமிழர் இனப்படுகொலையின் நீடித்த அடையாளமாக திகழ்கின்றது, இழக்கப்பட்ட உயிர்கள், துண்டாடப்பட்ட சமூகங்கள் பலர் அனுபவித்த வேதனைகளிற்கான அடையாளமாக திகழ்கின்றது. மேலும் இது தமிழ் சமூகத்தினர் மத்தியில் காணப்படும், வலிமை மீள் எழுச்சி தன்மை நீதிக்கான தொடர்ச்சியான போராட்டத்தையும் பிரதிபலிக்கின்றது.

மே மாதம் கனடா தமிழர்களிற்கு ஒரு வேதனையான குறிப்பிடத்தக்க மாதமாகும், உயிரிழந்தவர்களையும் தப்பியவர்களையும், அவர்கள் அனுபவித்தவற்றின் அதிர்ச்சிகளை தொடர்ந்து சுமந்துகொண்டிருப்பவர்களையும் நாம் நினைவு கூரும்போது, இந்த நினைவுச்சின்னம் அவர்களின் நினைவை போற்றுவதற்கும், வெறுப்பிற்கு எதிராக எழுந்து நின்று மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான கூட்டு பொறுப்பு குறித்து சிந்திப்பதற்குமான ஒரு இடத்தை வழங்குகின்றது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் பெருமளவில் வாழும் நாடு கனடா, அவர்களின் பங்களிப்பு கனடாவை எண்ணற்ற வழிகளில் வளப்படுத்தியுள்ளது.



இந்த நினைவுச்சின்னம் எதிர்கால சந்ததியினர் கற்றுக்கொள்வதற்கான சிந்திப்பதற்கான இடமாக மாறும் என்பது எனது நம்பிக்கை, நாம் அநீதியை எதிர்கொள்ளும் ஒருபோதும் மௌனமாக இருக்ககூடாது என்பதற்கான உண்மையான நினைவூட்டல் எனஅவர் தெரிவித்துள்ளார்.

# கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி பதவிப் பிரமாணம்

113.05.2025

கனடாவின் புதிய அமைச்சரவையின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி (Gary Anandasangaree) பதவி பிரமாணம் செய்துக்கொண்டுள்ளார்.

அண்மையில் கனடாவில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மார்க் கார்ணி தலைமையிலான தரப்பு வெற்றிபெற்ற நிலையில் புதிய அமைச்சரவை நியமனங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கார்ணி 28 அமைச்சர்களை அமைச்சரவை பதவிகளுக்கும், மேலும் 10 பேரை வெளியுறவுச் செயலாளர்களாகவும் நியமித்துள்ளார்.

பொதுபாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட ஹரி ஆனந்தசங்கரி முன்னதாக பல அமைச்சரவை அமைச்சுபதவிகளை வகுத்துள்ளார்.

இலங்கைத் தமிழரான ஹரி ஆனந்தசங்கரி கடந்த 2015 ஒக்டோபர் 19 இல் நடைபெற்ற கனேடிய பொதுத் தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதற்தடவையாக பாராளுமன்றம் சென்றார்.

முன்னதாக சுதேச உறவுகளுக்கான அமைச்சராகவும் 2025 மார்ச் 14 முதல் நீதி அமைச்சராகவும், கனடிய சட்டமா அதிபராகவும் பணியாற்றி வருகிறார்.

கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டபின்னர் ஊடகங்களுக்கு ஹறி ஆனந்தசங்கரி தெரிவிக்கையில்,

கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டதை நான் பெருமையுடனும் பணிவுடனும் ஏற்றுக்கொள்கின்றேன்.

டேவிட் மப்பின்டியின் சிறந்த பணியை அடித்தளமாகக் கொண்டு மேலும் கட்டியெழுப்ப ஆர்வமாகவுள்ள அதேவேளை, எமது சமூகங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும், வெறுப்புணர்வுக் குற்றங்களுக்கு எதிராகப் போராடுவதற்கும், கனேடியர்களை நாளாந்தம் பாதுகாப்பும் முகாமை அமைப்புக்களை பலப்படுத்தவும் நான் உறுதிபூண்டுள்ளேன்.

முடியரசு - பழங்குடிகள் உறவு மற்றும் நீதி அமைச்சுக்களில் ஏற்பட்ட அர்த்தமுள்ள முன்னேற்றம் குறித்து நான் உண்மையான பெருமிதங்கொண்டுள்ளேன்.

பழங்குடிப் பங்காளிகளுடன் இணைந்து செயற்பட்டு, பலமானதும் மதிக்கப்படுவதுமான உறவுகளைக் கட்டியெழுப்பி, மீளிணக்கத்தை முன்னகர்த்தி, மேம்பட்ட எதிர்காலத்திற்கான அடித்தளத்தை நாம் கட்டியெழுப்பியுள்ளோம்.



இந்தப் புதிய பணியை நான் பொறுப்பேற்கும் இந்த வேளையில், பிரதம மந்திரி மார்க் கார்ணி என்னில் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நான் நன்றியுடையவனாக இருக்கின்றேன்.

கனடாவை ஒன்றுபடுத்துவதற்கும், பாதுகாப்பைக் கட்டுறுதிப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும், கட்டியெழுப்பவும் எனது அமைச்சரவைச் சகாக்களுடனும் அனைத்து மட்ட அரசுகளுடனும் இணைந்து பணியாற்ற நான் தயாராகவிருக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழ் இனப்படுகொலை கல்விவாரம்

## ஒன்ராரியோவின் சுகாதார அமைச்சின் உளநலத்துறை இணை அமைச்சரும் ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதிக்கான ஒன்ராரியோ மாநில சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம்

13.05.2025

தமிழ் இனப்படுகொலை கல்விவாரம் தொடரும் தமிழ் இனப்படுகொலை குறித்து சிந்திப்பதற்கும், அது பற்றி பொதுமக்களிற்கு போதிப்பதற்குமான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது என ஒன்ராரியோவின் சுகாதார அமைச்சின் உளநலத்துறை இணை அமைச்சரும், ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதிக்கான மாநில சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

தமிழ் இனப்படுகொலை வாரம் குறித்த தனது சமூக ஊடகபதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இந்த  வாரம் தமிழ் இனப்படுகொலை கல்வி வாரம் , நான்கு வருடங்களிற்கு முன்னர் ஒன்டாரியோவில் தமிழ் இனப்படுகொலை கல்வி வார சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த வாரம் முழுவதும் தமிழ்சமூகத்தினரும் இளைஞர்களும் தமிழ் இனப்படுகொலையில் உயிர்பிழைத்தவர்களின் கதைகளை பகிர்ந்துகொள்வார்கள். மேலும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் அனுபவிக்கும் தலைமுறைகளிற்கு இடையிலான மன உளைச்சல் குறித்து அறிந்துகொள்வார்கள்.

இனப்படுகொலை என்பது ஒரு நிகழ்வால் குறிக்கப்படவில்லை. அது ஒரு செயல்முறை, ஒரு குழுவினரான மக்களை, ஒழித்து அழிக்க அரசு தொடர்ந்து செய்யும், தொடர்ச்சியான நடவடிக்கைகளின் வடிவம். மே2009ம் ஆண்டு தமிழர் இனப்படுகொலையின் உச்சமாக குறிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களிற்கு உணவும் மருந்தும் மறுக்கப்பட்டமை, பாலியல் வன்முறைகள் கொலைகள், கடத்தல்கள் கொத்துக்குண்டுகள் குறித்த தெளிவான நினைவுகளுடன் நாங்கள் விடப்பட்டுள்ளோம். தமிழ் மக்களிற்கு எதிரான இனப்படுகொலை இன்னமும் தொடர்க்கின்றது...., 167,796 பேருக்கு என்ன நடந்தது  என்பது தெரியாத நிலை தொடர்கின்றது.



தமிழ் இனப்படுகொலை கல்விவாரத்தை அங்கீகரிப்பது, நீடிக்கும் தமிழ் இனப்படுகொலை குறித்து சிந்திப்பதற்கும், அது பற்றி பொதுமக்களிற்கு போதிப்பதற்குமான சந்தர்ப்பத்தை வழங்கும்.

www.sangathamil.ca

# தமிழக செய்திகள்



# தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்திற்கும் வட தமிழீழம் காங்கேசன்துறைக்கும் கப்பல் போக்குவரத்துக்கான கட்டணம் குறைப்பு

01.05.2025

தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்திற்கும் வட தமிழீழம் காங்கேசன் துறைக்கும் இடையே இடம்பெறும் பயணிகள் கப்பல் போக்கு வரத்துக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

குறித்த பயணிகள் கப்பல் சேவையானது நாகப்பட்டினம் துறை முகத்திலிருந்து காங்கேசன்துறைக்கு வாராந்தம் 6 நாட்கள் முன்னெடுக்கப்படுகிறது.

இந்தநிலையில், கோடைகால விடுமுறையை முன்னிட்டு பயணக்கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி, இதுவரையில் இருவழி பயணக் கட்டணமாக 8,500 இந்திய ரூபாய் அறவிடப்பட்ட நிலையில், குறித்த கட்டணம் தற்போது 8,000 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.



# பொது மக்களுக்கு இலவச தற்காப்பு பயிற்சி

## சர்வதேச கராத்தே பயிற்றுநர்கள் சங்கம் தலைவர் எஸ். பாலமுருகன்

02.05.2025

“பொதுமக்களுக்கு சுயபாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, இலவச தற்காப்பு பயிற்சி அளிக்கப்படும்” என்று, சர்வதேச கராத்தே பயிற்றுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.




இதுகுறித்து, அச்சங்கத்தின் தலைவர் எஸ்.பாலமுருகன் இன்று (மே 2) சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: “எங்களது கராத்தே சங்கம் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு உலகளவில் 55 நாடுகளில் உறுப்பினர்களைக் கொண்டது. நமது முன்னோர்கள் நமக்கு தந்து சென்ற பாதுகாப்பான சமுதாயத்தை நமது வருங்கால சந்ததியினருக்கு கொடுப்பது நமது ஒவ்வொருவரின் கடமையாகும்.

தொழில்நுட்பத்தில் மிகவும் நவீனமயமான இந்த உலகில் தனிமனிதனின் பாதுகாப்பு என்பது மிகவும் கேள்விக்குறியாக உள்ளது. பொதுமக்களின் சுயபாதுகாப்பு அரசாங்கத்தின் பொறுப்பு மட்டுமல்ல, பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள நம் ஒவ்வொருவரின் கடமை என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். எனவே, பொதுமக்களுக்கு இலவச தற்காப்பு பயிற்சி அளிக்க திட்டமிட்டுள்ளோம். அடுத்த 5 ஆண்டுகளில் நாடு முழுவதும் 5 ஆயிரம் கராத்தே மாஸ்டர்கள் 8 கோடி பேருக்கு இலவச தற்காப்பு பயிற்சி அளிக்க உள்ளனர்.

முதல்கட்டமாக தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா, மகாராஷ்டிரா, குஜராத், கோவா மற்றும் புதச்சேரி ஆகிய மாநிலங்களில் பொதுமக்களுக்கு இந்த இலவச தற்காப்பு கலை பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 5 வயது முதல் 70 வயது வரை உள்ளவர்கள் இப்பயிற்சியில் சேரலாம். இப்பயிற்சி வரும் ஜூலை மாதம் தொடங்கும்.



தமிழகத்தில் உள்ள 138 நகராட்சிகளில் இப்பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள் http://bit.ly/safersociety என்ற இணையதளத்திலும், 97909 94917 என்ற வாட்ஸ்-அப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். முற்றிலும் இலவசமாக நடத்தப்படும் இப்பயிற்சியில் சுயபாது காப்பை விரும்புவர்கள் தாமாக முன்வந்து சேர வேண்டும்,” என்று அவர் கூறினார்.

# கடைகளுக்கு தமிழில் பெயர் சூட்டுங்கள்: வணிகர்களுக்கு தமிழ் நாடு முதல்வர் வேண்டுகோள்

06.05.2025

மதுராந்தகம் அருகே நடைபெற்ற வணிகர் தின மாநாட்டில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழகத்தில் 24 மணி நேரமும் கடைகள் செயல்படுவதற்கான ஆணையை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்வதாக அறிவித்தார். செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தில் வணிகர் தினத்தை முன்னிட்டு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் வணிகர் தின மாநாடு நேற்று நடைபெற்றது.



இதில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றார். அவர், நிகழ்ச்சியில் பேசியதாவது: வணிகர் தினமான மே 5-ம் தேதியை வணிகர் தின நாளாக அறிவிப்பதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும். தமிழகத்தில் 24 மணி நேரமும் கடைகள் செயல்படும் வகையிலான அறிவிப்பு, மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகிறது. அதேபோல், தமிழகத்தில் கடைகளுக்கு தமிழில் பெயர் வைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

வணிகர் சங்கத்தில் நிரந்தர உறுப்பினராக உள்ளவர்களுக்கு உதவித் தொகையாக தற்போது ரூ.3 இலட்சம் வழங்கப்பட்ட வருகிறது. இதை ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். அமைதியான மாநிலத்தில்தான் தொழிலும், வணிகமும் வளரும். தொழிலாளர்கள் மற்றும் வணிகர்கள் நிம்மதியாக இருக்கும் வகையில் அமைதி மிக்க மாநிலமாக தமிழகத்தை உருவாக்கி இருக்கிறோம். வணிகர் சங்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து கோரிக்கைகளும் படிப்படியாக நிறைவேற்றப்படும்.



தேர்தல் நேரத்தில் அறிவிக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும். நான் முதல்வன் திட்டத்தின் மூலம் குடிமைப் பணி தேர்வுகளில் பலர் தேர்ச்சி பெற்றுள்ளனர். பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில், காலை உணவு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறோம். மிகவும் கவனமாக திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். தொழில் துறையில், இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் எந்த மாநிலமும் எட்டாத சாதனையை நாம் செய்துள்ளோம்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று 4 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு தொடர்ந்து நான் சேவை யாற்றுவேன். இது உங் களுடைய அரசு. தொடர்ந்து எங்களுக்கு ஆதரவு அளியுங்கள். வணிகர்கள் அனைவரும் கடைகளுக்கு தமிழில் பெயர் சூட்டுங்கள். இதுவே என் பெரிய கோரிக்கை. இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்ச்சியில், வணிகர் சங்க பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜா உட்பட வணிகர் சங்கத்தின் பல்வேறு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

www.sangathamil.ca

# தமிழகத்தில் பள்ளி மாணவர்களுக்கு வழங்க 4.19 கோடி பாடப் புத்தகங்கள் தயார்

## தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை

10.05.2025

தமிழகத்தில் அனைத்து வகை அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் தமிழ் வழியில் இயங்கும் வகுப்புகள் ஆகியவற்றில் 1 முதல் பிளஸ்-2 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பாடநூல்கள், நோட்டுப் புத்தகங்கள், காலணிகள், காலேந்திகள் மற்றும் காலுறைகள், கம்பளிச்சட்டை, மழைக்கோட்டு, சீருடைகள், வண்ண பென்சில்கள், வண்ண கிரையான்கள், மிதிவண்டிகள், கணித உபகரணப் பெட்டிகள் மற்றும் புவியியல் வரைபடம் உள்ளிட்ட நலத்திட்டப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.இந்நிலையில், நடப்பு கல்வியாண்டில் கோடை விடுமுறை நிறைவடைந்து அனைத்துப் பள்ளிகளும் ஜூன் முதல் வாரத்தில் திறக்கப்படவுள்ளன.

அவர்களுக்கு வழங்குவதற்காக தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் 4.19 கோடி பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு அந்தந்த மாவட்ட கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சென்னை மாவட்ட பள்ளிகளுக்கு வழங்குவதற்காக சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள கல்யாணம் மேல்நிலைப் பள்ளியில் வைக்கப்பட்டுள்ள பாடப் புத்தகங்களை பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் எஸ்.கண்ணப்பன், சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் புகழேந்தி ஆகியோர் நேற்று நேரில் ஆய்வு செய்தனர்.

இது குறித்து பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் கூறியதாவது:- இந்த ஆண்டு ஒன்று முதல் பிளஸ் 2 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குவதற்காக 495 தலைப்புகளில் மொத்தம் 4.19 கோடி பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

அவற்றில் 2.72 கோடி பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்கு விலையில்லாமல் வழங்கப்படும். எஞ்சியுள்ள 1.47 கோடி பாடநூல்கள் விற்பனைக்காக அச்சிடப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக 64 இலட்சம் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்படும். அனைத்து மாவட்ட கிடங்குகளிலும் உள்ள பாடப் புத்தகங்கள் ஒரு வாரத்துக்குள் அனைத்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.



இதையடுத்து கோடை விடுமுறைக்குப் பிறகு வரும் ஜூன் மாதம் பள்ளிகள் திறக்கப்படும் போது முதல் நாளே மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்

# மாமல்லபுரத்தில் சித்திரை முழுநிலவு மாநாடு: பா.ம.க

12.05.2025

பா.ம.க. சார்பில் நேற்று மாமல்லபுரத்தில் சித்திரை முழுநிலவு மாநாடு பிரம்மாண்டமாக நடைபெற்றது.இதுகுறித்து பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழ்நாட்டின் சமூகநீதி மற்றும் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான மைல்கல் உருவாக்கப்பட்டுள்ளது. மாமல்லபுரத்தில் சித்திரை முழுநிலவு வன்னிய இளைஞர் பெருவிழா மாநாடு வெற்றிகரமாகவும், உணர்வுப் பூர்வமாகவும் நடத்தி முடிக்கப்பட்டிருப்பது தான் புதிய மைல்கல் ஆகும்.

இதை சாத்தியமாக்கிய அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வானிலிருந்து பார்த்தால் கிழக்குக் கடற்கரைச் சாலையின் ஒரு புறத்தில் ததும்பி வழிந்து கொண்டிருந்த மனிதக்கடலுடன் ஒப்பிட்டால் வங்கக் கடலே சிறுத்துப் போனதைப் போன்று மாநாட்டுத் திடலில் பாட்டாளி சொந்தங்கள் குவிந்திருந்தனர்.

15 இலட்சத்துக்கும் கூடுதலான பாட்டாளி சொந்தங்கள் மாநாட்டுத் திடலில் திரண்டிருந்த நிலையில், நெரிசல் காரணமாக மாமல்லபுரத்தை நெருங்க முடியாமல் செங்கல்பட்டுக்கு அப்பாலும் பல்லாயிரக்கணக்கான ஊர்திகள் அணிவகுத்துக் காத்திருந்தன. இலட்சக் கணக்கில் தொண்டர்கள் திரண்டிருந்தாலும் கூட எந்தவொரு இடத்திலும் சிறு ஒழுங்குமீறல்கள் கூட நடைபெறவில்லை.

இராணுவத்தையே விஞ்சும் அளவுக்கு பாட்டாளி சொந்தங்கள் அமைதியாகவும், கட்டுப்பாட்டுடனும் மாநாட்டிற்கு வந்து, பத்திரமாக சொந்த ஊர்களுக்கு திரும்பிச் சென்றிருப்பது மாநாட்டுக் குழுத் தலைவர் என்ற முறையில் எனக்கு மிகுந்த பெருமையும், நிம்மதியும் அளிக்கிறது.மாமல்லபுரம் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கு எனக்கு வாய்ப்பளித்ததற்காகவும், மாநாட்டுக் குழுத் தலைவராக என்னை நியமித்ததற்காகவும், மாநாட்டில் பங்கேற்று சிறப்பித்ததற்காகவும் மருத்துவர் அய்யா அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாட்டாளி சொந்தங்கள் இல்லாமல் இந்த வெற்றி சாத்தியமாகியிருக்காது. மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்காக மிகக் கடுமையாக உழைத்த பாட்டாளி மக்கள் கட்சி, வன்னியர் சங்கம், சமூக முன்னேற்ற சங்கம் உள்ளிட்ட அனைத்து அமைப்புகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிராமம் என அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும், குறிப்பாக மாவட்ட செயலாளர்களுக்கு நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



களத்தில் மாநாட்டுப் பணிகளை சிறப்பாக ஒருங்கிணைத்து, கடந்த 20 நாள்களாக இரவு, பகல் பாராமல் உழைத்த முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.கே.மூர்த்தி அவர்களுக்கு பாராட்டுகளையும், நன்றிகளையும் உரித்தாக்கிக் கொள்கிறேன். அவருக்குத் துணையாக களத்தில் நின்று பணியாற்றிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திருக்கச்சூர் ஆறுமுகம், சேலம் கார்த்தி மற்றும் வைத்தி, செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் காயார் ஏழுமலை உள்ளிட்ட அந்த மாவட்டத்தைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சி, வன்னியர் சங்கம் ஆகியவற்றின் அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆந்திர மாநிலத்திலிருந்து இந்த மாநாட்டில் பங்கேற்ற அமைச்சர் கொல்லு ரவீந்திரா, வன்னியகுல ஷத்திரிய கார்ப்பரேசனின் தலைவர் சி.ஆர்.இராஜன், கர்நாடகத்தி லிருந்து பங்கேற்ற முன்னாள், இந்நாள் சட்டப்பேரவை உறுப் பினர்கள், மராட்டியம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருந்தும், மலேஷியாவில் இருந்தும் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து பங்கேற்ற அனைத்து சொந்தங்களுக்கும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் அலை அலையாய் திரண்டு வந்து மாநாட்டைச் சிறப்பித்த பாட்டாளி சொந்தங்களுக்கும் எனது கோடானுகோடி நன்றிகள். மாமல்லபுரம் சித்திரை முழுநிலவு மாநாட்டின் முதன்மை நோக்கம் சமூகநீதி தான். அதை வலியுறுத்தி தான் 69% இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்க தமிழக அரசின் சார்பில் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்

அதனடிப்படையில் வன்னியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் அதேபோன்று அனைத்து சமூகங்களுக்கும் அவர்களின் மக்கள்தொகைக்கு இணையாக இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் பட்டியலின மக்களுக்கான இட ஒதுக்கீட்டை 2% உயர்த்த வேண்டும் இந்தியாவில் இட ஒதுக்கீட்டுக்கான 50% உச்சவரம்பை நீக்க வேண்டும் கிரீமிலேயர் முறையை அகற்ற வேண்டும்மேலும் தனியார் துறை மற்றும் உயர்நீதித் துறையில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்

அனைத்து சமூகங்களுக்கும் நிதி அதிகாரம் கொண்ட வாரியங்கள் அமைக்கப்பட வேண்டும் மது, கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்களை ஒழிக்க வேண்டும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் வளர்ச்சிக் குறியீடுகளில் மிகவும் பின்தங்கியிருக்கும் வடமாவட்டங்களின் முன்னேற்றத்திற்காக சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் அரசியல் களத்தில் இந்த மாநாடு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் சமூக, கல்வி, வேலைவாய்ப்பு முன்னேற்றத்திற்கான முழக்கங்கள் இந்த மாநாட்டில் எழுப்பப்பட்டுள்ளன.

ஏழரை கோடி மக்களின் இந்த உணர்வுகளை தமிழக அரசு புரிந்து கொண்டு அதனடிப்படையில் உடனடியாக சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த ஆணையிட வேண்டும். அதனடிப்படையில் தமிழ்நாட்டில் 69% இட ஒதுக்கீட்டைப் பாதுகாப்பதுடன், வன்னியர்களுக்கும், மற்ற அனைத்து சமுதாயங்களுக்கும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அவர்களின் மக்கள்தொகைக்கு இணையான இட ஒதுக்கீட்டை வழங்க வேண்டும். பட்டியலின மக்களுக்கு இப்போது வழங்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டின் அளவை மேலும் 2% உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.அதேபோல், கல்வி, வேலைவாய்ப்பில் 50% இட ஒதுக்கீட்டு உச்சவரம்பு மற்றும் கிரீமிலேயரை அகற்றுதல், தனியார்துறை மற்றும் உயர் நீதித்துறையில் இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்ட சமூகநீதி நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போராரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# பொள்ளாச்சி பாலியல் வழக்கில் தீர்ப்பு ஒன்பது குற்றவாளிகளுக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை!

### தமிழ்நாடு கோவை மகளிர் நீதிமன்றம்

14.05.2025



தமிழகத்தை உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில், கைதான ஒன்பது பேரும் குற்றவாளிகள் என அறிவித்து, அவர்களுக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கோவையை அடுத்த பொள்ளாச்சியில் இளம் பெண்களை வீடியோ எடுத்து, பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளம்பெண் ஒருவர் 2019 பிப்ரவரி மாதம் பொள்ளாச்சி கிழக்கு பொலீசாரிடம் புகாரளித்தார். அதன் பேரில், பொலீசார் வழக்குப்பதிந்து விசாரித்தனர். பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், அவர்கள் தொடர்பான வீடியோக்கள் வெளியானதாலும் அப்போது பரபரப்பு ஏற்பட்டது. தொடர்ந்து இந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டு, அடுத்த சில நாட்களில் சிபிஐ-க்கு மாற்றப்பட்டது.

சிபிஐ அதிகாரிகள் இவ்வழக்கு தொடர்பாக புது எஃப்.ஐ.ஆர் பதிந்து, பொள்ளாச்சியைச் சேர்ந்த சபரிராஜன்(34), திருநாவுக்கரசு(36), சதீஷ்(35), வசந்தகுமார்(32), மணிவண்ணன்(34), ஹேரன்பால்(34), பாபு(35), அருளானந்தம்(41) மற்றும் அருண்குமார்(35) ஆகிய 9 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தொடர்ந்து இந்த வழக்கின் முதல் குற்றப்பத்திரிகை 2019 மே 24-ல் தாக்கல் செய்யப்பட்டது. முதல் கூடுதல் குற்றப்பத்திரிகை 2021 பிப்ரவரியிலும், 2-வது கூடுதல் குற்றப்பத்திரிகை ஆகஸ்ட் மாதத்திலும் தாக்கல் செய்யப்பட்டன. விசாரணையில் தாமதம் ஏற்பட்டதாக எழுந்த புகாரைத் தொடர்ந்து, சிறப்பு ஏற்பாடாக கோவை மகளிர் நீதிமன்றத்தில் தனி அறையில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு வந்தது.

வழக்கில் பாதிக்கப்பட்ட 8 பெண்களில் ஒருவர் தவிர மீதமுள்ள 7 பேர் நேரடியாக வாக்குமூலம் அளித்தனர். 2023 பிப். 24 முதல் நீதிபதி நந்தினிதேவி முன்னிலையில் விசாரணை முழுவதும் வீடியோ கான்பரன்சிங் முறையில் மூடப்பட்ட தனி அறையில் நடந்து வந்தது. விசாரணையில் ஆஜராகும் சாட்சிகள், நீதிமன்ற ஊழியர்கள், வழக்கறிஞர்கள் தவிர வேறு யாரும் அனுமதிக்கப்படவில்லை. அரசு மற்றும் எதிர் தரப்பு விசாரணை முடிவடைந்த நிலையில், வழக்கின் தீர்ப்பு மே 13-ம் தேதி வழங்கப்படும் என மகளிர் நீதிமன்றம் அறிவித்தது.

இந்நிலையில், இந்த வழக்கில் நேற்று நீதிபதி நந்தினிதேவி தீர்ப்பு வழங்கினார். இதற்காக, சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த 9 பேரும் பலத்த பொலீஸ் பாதுகாப்புடன் கோவைக்கு அழைத்து வரப்பட்டு மகளிர் நீதி மன்றத்தில் நேற்று காலை ஆஜர்படுத்தப்பட்டனர். காலை 10.30 மணி அளவில் நீதிபதி நந்தினி தேவி இந்த வழக்கில் கைதான 9 பேரும் குற்றவாளிகள் என அறிவித்தார். பின்னர், மதியம் 12 மணிக்கு தண்டனை விவரத்தை நீதிபதி நந்தினிதேவி வாசித்தார். அதில், 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை



வழங்கி தீர்ப்பளித்தார்.

மேலும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நஷ்டஈடாக ரூ.85 இலட்சம் வழங்க வேண்டும் என கோவை மாவட்ட சட்ட பணிகள் ஆணைக் குழுவுக்கு பரிந்துரைத்தார். இத்துடன் தண்டனை விதிக்கப் பட்ட குற்றவாளிகள் 9 பேருக்கு மொத்தம் ரூ.1.50 இலட்சம் அபராதமாக விதித்தார். தீர்ப்பு அறிவிக்கப்பட்டவுடன் நீதிமன்றத்தில் திரண்டிருந்த மாதர் சங்கத்தினர் தீர்ப்பை வரவேற்று அங்கிருந்தவர்களுக்கு இனிப்பு வழங்கினர். இதைத் தொடர்ந்து, 9 குற்றவாளிகளும் பலத்த பொலீஸ் பாதுகாப்புடன் சேலம் மத்திய சிறைக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

யாருக்கு எத்தனை வருடம் தண்டனை: பாலியல் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்களில் முதல் குற்றவாளியான (ஏ1) சபரிராஜனுக்கு 4 ஆயுள், திருநாவுக்கரசுக்கு 5 ஆயுள், சதீஷ்க்கு 3 ஆயுள், வசந்தகுமாருக்கு 2 ஆயுள், மணிவண்ணனுக்கு 5 ஆயுள், பாபுக்கு 1 ஆயுள், ஹேரேன்பாலுக்கு 3 ஆயுள், அருளானந்தம் மற்றும் ஏ9 அருண்குமார் ஆகியோருக்கு தலா 1 ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

**தமிழீழத் தனியரசு என்ற இலட்சியத்தை அடைவதிலுள்ள இமாலய இடையூறுகளை நாம் அறியாமல் இல்லை. அன்றியும் இந்த இலட்சியத்திற்கு எதிராக, எந்தெந்தச் சக்திகள் எப்படியெல்லாம் செயற்படும் என்பதும் எமக்கு தெரியாதது அல்ல. பிராந்திய வல்லரசின் ஆதிக்க அபிலாசைகளும், உலக வல்லரசுகளின் கேந்திர இலக்குகளும் எத்தகைய தலையீடுகளை ஏற்படுத்தும் என்பதையும், நாம் எதிர்பாராமல் இருக்கவில்லை. இந்தச் சவால்கள் எழுந்த போதெல்லாம் நாம் அதைத் துணிந்து எதிர்கொள்ளத் தவறவில்லை. அழிவின் விழிம்பிற்குத் தள்ளப்பட்ட பொழுதும், நாம் கொண்ட கொள்கையைக் கைவிடவில்லை. ஆதிக்க சக்திகளின் ஆவெசகப் புயல்களும் எம்மை ஆட்டங்காணச் செய்யவில்லை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# உலக செய்திகள்

# ஏமன் துறைமுகம் மீது இசுரவேல் வான்வழித் தாக்குதல்

06.05.2025



ஏமனின் ஹொடைடா (Hodeidah) துறைமுகத்தின் மீது திங்கட் கிழமை (05) வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாக இசுரவேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இசுரவேலின் பிரதான விமான நிலையத்திற்கு அருகே ஈரானுடன் இணைந்த ஹவுத்திகள் ஏவுகணையை ஏவிய ஒரு நாளுக்குப் பின்னர் இந்த தாக்குதல் வந்துள்ளது.

ஹொடைடா மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள ஹவுதி பயங்கரவாத இலக்குகள் என்று அழைக்கப்பட்ட இடங்களைத் தாக்கியதாக இராணுவம் ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த தாக்குதல்களில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டதாகவும், குறைந்தது 35 பேர் காயமடைந்ததாகவும் ஹவுத்திகளால் நடத்தப்படும் சபா செய்தி நிறுவனம் சுகாதார அமைச்சகத்தை மேற்கோள் காட்டி தெரிவித்துள்ளது.

# "ஒபரேஷன் சிந்தூர்" பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல்!

07.05.2025




பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள பயங்கரவாத அமைப்புகளின் 9 முகாம்களை குறிவைத்து ஒபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் இந்தியா வான்வழி தாக்குதல் நடத்தியது. நள்ளிரவுக்குப் பின் 1.30 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் குறித்து வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி இன்று செய்தியாளர்கள் சந்திப்பில் விளக்கமளித்தார்.

ஒபரேஷன் சிந்தூர்' மூலம் பயங்கரவாதத்தின் மீது பதிலடி கொடுக்கும் நமது உரிமையை நிலைநாட்டியுள்ளோம் என்று அவர் எடுத்துரைத்தார்.

கடந்த ஏப்ரல் 22-ம் தேதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். இதன் காரணமாக இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் மேகம் சூழ்ந்தது. அந்தத் தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் வான்வழி தாக்குதலை மேற்கொண்டது இந்திய இராணுவம். பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாத முகாம்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நள்ளிரவுக்குப் பின் 1.30 மணியளவில் நடத்தப்பட்ட 'ஆபரேஷன் சிந்தூர்' குறித்து வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி இன்று செய்தியாளர்கள் சந்திப்பில் விளக்கமளித்தார். அப்போது அவர் "கடந்த ஏப்ரல் 22-ம் தேதி காஷ்மீரின் பஹல்காமில் சுற்றுலாப் பயணிகள் நேபாளத்தைச் சேர்ந்த ஒருவர் என 26 பேர் கொல்லப்பட்டனர். அந்தத் தாக்குதல் மிகவும் கொடூரமானது. பயங்கரவாதிகள் சுற்றுலா வந்தவர்களின் குடும்பத்தினரின் கண் முன்னாலேயே மிகக் கொடூரமான கொலைச் சம்பவத்தை நடத்தினர். இது சுற்றுலாப் பயணிகளின் குடும்பத்தினருக்கு மிகப் பெரிய மன அழுத்தத்தை ஏற்படுத்தியது.

இந்தத் தாக்குதலில் பாகிஸ்தானில் பயிற்சி மேற்கொண்ட பயங்கரவாதிகள் ஈடுபட்டதை இந்தியா உறுதி செய்தது. உளவுத் துறை அவர்களின் துல்லியமான புகைப்படங்களையும் வெளியிட்டது. கடந்த 2008 நவம்பரில் மும்பையில் நடந்த தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர் உள்நாட்டில் பொதுமக்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதல் பஹல்காம் தாக்குதல். இந்தத் தாக்குதலுக்கு லஷ்கர் தொய்பா ஆதரவு பெற்ற 'ரெசிஸ்டன்ஸ் ஃபோர்ஸ்' என்ற அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் திரும்பிவரும் இயல்பு நிலையை சிதைக்கவும் வளர்ந்துவரும் சுற்றுலாத் துறையை முடக்கவும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து அங்கு நிலவும் அமைதியைக் குலைக்கவும் மதக் கலவரங்களைத் தூண்டவும் திட்டமிட்டு இந்த பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பல்வேறு பயங்கரவாதக் குழுக்களின் புகலிடமாக இருக்கிறது என்பது உலகம் அறிந்ததே. இந்நிலையில் பல்வேறு தருணங்களில் இந்தியாவும் ஐ.நா. சபையிலேயே பாகிஸ்தான் பயங்கரவாதத்தை தனது நாட்டு எல்லைக்குள்ளேயே ஊக்குவிப்பதை எடுத்துக் கூறி கண்டித்துள்ளது.

இந்தச் சூழலில்தான் பஹல்காம் தாக்குதலும் நடந்துள்ளது. இந்தத் தாக்குதலுக்கு அடுத்த நாளே பாகிஸ்தான் மீது இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. பாகிஸ்தான் மீதான நடவடிக்கைகளை அனைவரும் அறிவர். ஆனால்இ அந்த நடவடிக்கைகளுக்கு எதிர்வினை ஆற்றுவதும் குற்றச்சாட்டுகளை மறுப்பதும் பொறுப்பற்ற அறிக்கைகளை விடுவதுமாகவே பாகிஸ்தான் இருந்தது.

இந்தநிலையில்தான் பஹல்காம் தாக்குதல் நடந்த 15 நாட்களுக்குப் பின்னர் திட்டமிட்டு பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்களை மட்டுமே வெகு நேர்த்தியாகக் குறிவைத்து பொறுப்புடன் தாக்குதல் நடத்தியுள்ளோம். அங்குள்ள 9 முகாம்கள் அழிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையின் மூலம் பயங்கரவாதத்தின் மீது பதிலடி கொடுக்கும் நமது உரிமையை நாம் நிலைநாட்டியுள்ளோம். இன்று என்னுடன் இந்தத் தாக்குதல் குறித்து விவரிக்க கர்னல் சோஃபியா குரேஷிஇ விங் கமாண்டர் வியாமிகா சிங் ஆகியோரும் இணைந்துள்ளனர்" என்றார்.

6 பேர் உயிரிழப்பு: முன்னதாக இந்தியா – பாகிஸ்தானின் சர்வதேச எல்லைப் பகுதியான எல்லை கட்டுப்பாட்டு கோட்டுக்கு (எல்ஓசி) அருகே பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் இந்தியக் குடிமக்கள் 6 பேர் உயிரிழந்தனர். மேலும் 7 பேர் இந்த தாக்குதலில் படுகாயம் அடைந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.







# கத்தோலிக்க திருச்சபையின் புதிய தலைவராக போப் லியோ XIV தேர்ந்தெடுக்கப்பட்டார்!

08.05.2025



கத்தோலிக்க திருச்சபையின் புதிய தலைவராக அமெரிக்காவைச் சேர்ந்த ரொபேர்ட் பிரீவோல்ட் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் போப் லியோ XIV என்று அழைப்படுவார்.

இவர் திருச்சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அமெரிக்க போப்பாண்டவர்.

69 வயதான ரொபேர்ட் பிரீவோல்ட் , செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கானோரின் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டார்.

உங்கள் அனைவருக்கும் அமைதி உண்டாகட்டும் என்று அவர் வத்திக்கான் பால்கனியில் இருந்து கூறினார்.

சிகாகோவில் பிறந்த பிரீவோஸ்ட் ஒரு சீர்திருத்தவாதியாகக் காணப்படுகிறார், மேலும் பெருவில் ஒரு மிஷனரியாக பல ஆண்டுகள் பணியாற்றினார், பின்னர் அங்கு பேராயராக (கார்டினல்) நியமிக்கப்பட்டார்.

உலகத் தலைவர்கள் போப் லியோ XIV-ஐ வாழ்த்தி வருகின்றனர். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஒரு அமெரிக்க போப்பைப் பெற்றிருப்பது பெரிய மரியாதை என்று கூறினார்.

# நாஜிப் படைகளுடனான மோதலில் ரஷ்யாவின் வெற்றி நாள் கொண்டாட்டம்: உலகத் தலைவர்கள் பங்கேற்பு

09.05.2025





ரஷ்யாவில் நேற்று நடைபெற்ற வெற்றி நாள் பேரணியில் சீன அதிபர் ஜி ஜின்பிங் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட உலக தலைவர்கள் கலந்து கொண்டனர். நாஜி ஜெர்மனி படைகளை வெற்றி கொண்டதை குறிக்கும் 80 ஆண்டு தினத்தையொட்டி ரஷ்யாவில் மாபெரும் வெற்றி நாள் பேரணிக்கு நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், உக்ரைனில் போரிடும் ரஷ்ய படைகளுடன், சீன படைகளும் இணைந்து அணிவகுப்பு மேற்கொண்டன.

இந்த ஆண்டு ரஷ்ய வெற்றி நாள் அணிவகுப்பில் 2015-ம் ஆண்டுக்குப் பிறகு அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டுத் தலைவர்கள் கலந்து கொண்டனர். சீனா, பிரேசில், ஸ்லோவேக்கியா, செர்பியா உட்பட 27 உலக நாடுகளின் தலைவர்கள் இந்த வெற்றி நாள் விழாவில் பங்கேற்றனர்.

உக்ரைனில் நான்கு ஆண்டுகள் போர் நீடித்து வந்தாலும் ரஷ்யா உலக அரங்கிலிருந்து தனிமைப்படுத்தப்படவில்லை என்பதற்கு சான்றாக வெளிநாட்டு தலைவர்களின் வருகை அமைந்திருந்தது. 2022-ம் ஆண்டு உக்ரைன் மீதான தாக்குதல் முழு அளவிலான போராக மாறியதற்குப் பிறகு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் மிக நீண்ட உரையை ஆற்றினார்.

அப்போது அவர் கூறுகையில், “நாஜி படையினரின் மிக கொடூரமான, இரக்கமற்ற தாக்குதல்களை சோவியத் யூனியன் எதிர்கொண்டது. உக்ரைன் மீதான படையெடுப்பில் உண்மையும், நீதியும் நம் பக்கம் உள்ளன” என்றார். மியான்மர், பர்கினா பாசோவின்ராணுவ ஆட்சிக்குழுக்களின் தலைவர்களும் இந்த வெற்றி நாள் விழாவில் பங்கேற்றனர்.

# Mh17 விமானம் சுட்டு வீழத்தப்பட்டதற்கு ரஷ்யாவே காரணம் ஐ.நா தீர்ப்பு: தீர்ப்பை நிராகரித்தது ரஷ்யா!

13.05.2025

2014 ஆம் ஆண்டு உக்ரைன் வான்பரப்பில் மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு ரஷ்யாவே காரணம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் விமானப் போக்குவரத்து கவுன்சில் திங்கள்கிழமை தீர்ப்பளித்தது. இந்த விமானத்தில் இருந்த கிட்டத்தட்ட 300 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த எண்ணிக்கையில் 196 டச்சு குடிமக்களும் 28 ஆஸ்திரேலிய குடிமக்களும் அடங்குவர் என்று அவர்களின் அரசாங்கங்கள் தனித்தனி அறிக்கைகளில் தெரிவித்தன.

இந்த வழக்கு 2022 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்தால் தொடங்கப்பட்டது.

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) கவுன்சில், கொண்டுவரப்பட்ட கூற்றுக்கள் உண்மையிலும் சட்டத்திலும் நன்கு நிறுவப்பட்டவை என்று கூறியது.

2014 ஆம் ஆண்டு மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் MH17 சுட்டுவீழ்த்தப்பட்டதில், சர்வதேச விமானச் சட்டத்தின் கீழ் ரஷ்ய கூட்டமைப்பு தனது கடமைகளை நிலைநிறுத்தத் தவறிவிட்டது என்று அந்த நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த கவுன்சில் எந்த ஒழுங்குமுறை அதிகாரங்களையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் அதன் உறுப்பு நாடுகளால் பரவலாகப் பின்பற்றப்படும் உலகளாவிய விமானப் போக்குவரத்துத் தரங்களை இன்னும் நிர்ணயிக்கிறது. திங்கட்கிழமை தீர்ப்பு அதன் வரலாற்றில் முதல் முறையாக இரண்டு உறுப்பு நாடுகளுக்கு இடையிலான ஒரு சர்ச்சையில் தலையிட்டதாகக் கூறியது.

MH17 விமானத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும், அன்புக்குரியவர்களுக்கும் உண்மையை நிலைநாட்டுவதற்கும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை அடைவதற்கும் இந்த முடிவு ஒரு முக்கியமான படியாகும் என்று டச்சு வெளியுறவு அமைச்சர் காஸ்பர் வெல்ட்காம்ப் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

இந்த முடிவு சர்வதேச சமூகத்திற்கு ஒரு தெளிவான செய்தியையும் அனுப்புகிறது. நாடுகள் சர்வதேச சட்டத்தை தண்டனையின்றி மீற முடியாது.

ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பென்னி வோங்கும் இந்த முடிவை வரவேற்றார். இந்த கொடூரமான வன்முறைச் செயலுக்கான பொறுப்பை இறுதியாக எதிர்கொள்ளவும், சர்வதேச சட்டத்தின் கீழ் தேவைப்படும் அதன் மோசமான நடத்தைக்கு இழப்பீடு வழங்கவும் ரஷ்யாவை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என்று அவர் கூறினார்.

சாத்தியமான இழப்பீடுகள் குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட ரஷ்யாவை ஐசிஏஓ கவுன்சில் உத்தரவிட வேண்டும் என்று நெதர்லாந்தும் ஆஸ்திரேலியாவும் விரும்புகின்றன என்று வெல்ட்காம்ப் கூறினார்.

ICEOவின் முடிவுகளை மாஸ்கோ நிராகரித்து, அவற்றை சார்புடையது என்று அழைத்தது.

இந்த சம்பவத்தின் விசாரணையில் ரஷ்யா பங்கேற்ற நாடு அல்ல என்று கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறினார்.

எனவே, இந்த சார்புடைய முடிவுகள் அனைத்தையும் நாங்கள் ஏற்கவில்லை. MH17 விமான விபத்துக்கான பொறுப்பை ரஷ்யா பலமுறை மறுத்துள்ளது.

ஜூலை 17, 2014 அன்று ஆம்ஸ்டர்டாமில் இருந்து கோலாலம்பூருக்குப் புறப்பட்ட மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் MH17 ,



கிழக்கு உக்ரைனில் சுட்டு வீழ்த்தப்பட்டது. ரஷ்ய ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகளுக்கும் உக்ரேனியப் படைகளுக்கும் இடையே சண்டை நடந்து கொண்டிருந்த நேரத்தில் அது நடந்தது.

அந்த விமானம் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட டீருமு தரையிலிருந்து வான் இலக்கைத் தாக்கும் ஏவுகணையால் தாக்கப்பட்டது.

விமானத்தில் இருந்த 298 பயணிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். மூன்றில் இரண்டு பங்கு டச்சுக்காரர்கள், மேலும் 38 ஆஸ்திரேலியர்கள் மற்றும் 30 மலேசியர்கள்.

சம்பவம் நடந்து எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, தாக்குதலில் ஈடுபட்டதற்காக இரண்டு ரஷ்யர்களையும் ஒரு உக்ரேனியரையும் கொலைக் குற்றவாளிகளாக டச்சு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை மோசமானது என்று கூறி, மாஸ்கோ தனது குடிமக்களை நாடு கடத்த மறுத்துவிட்டது.







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# எமது விடுதலைப் போராட்டம் நிச்சயம் வெற்றியடைந்தே தீரும்

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



உலகில் எங்குமே நடைபெறாத கொடுமைகள் தமிழீழ மண்ணில் நாளாந்தம் நடைபெறுகின்றன. எமது எதிரியோ ஈவிரக்கம் இல்லாதவன். மனித உயிருக்கு மதிப்பளிக்காதவன். மனித தர்மங்களைப் பேணாதவன். மிகவும் பயங்கரமான இனவெறி கொண்டவன். இனரீதியாக எம்மை ஒழித்துக் கட்டுவதைவிட அவனுக்கு வேறு இலட்சியம் எதுவும் இல்லை. எம்மை இந்நாட்டுப் பிரஜைகளாகவே அல்லது சாதாரண மனிதப் பிறவிகளாகவோ சிங்கள அரசு கருதவில்லை. எம்மை ஏதொ அன்னியர்களாக, அடிமைகளாக, வாழத்தகுதியற்ற பிராணிகளாகவே இந்த அரசு கருதுகின்றது. எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் காட்டுமிராண்டித்தனமான அடக்குமறை இதைத்தான் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

பொருளாதாரத்தடை, மீன்பிடித்தடை, எண்ணெய்த்தடை இப்படியாக அத்தியாவசியமான எல்லாவற்றுக்கும் தடைகளை விதித்து எமது சமூக பொருளாதார வாழ்வை, எமது நாளாந்த ஜீவாதார வாழ்வைச் சிதைக்க முயல்கின்றது இந்த அரசு. அத்துடன் மட்டுமே நின்றுவிடாது, ஆயதப் படைகளை ஏவிவிட்டு அப்பாவி மக்களை அழித்தொழிக்கும் ஓர் அதர்மமான யுத்தத்தையும் எம்மீது தொடுத்திருக்கின்றது. இந்த யுத்தமானது, அப்பாவித் தமிழர் மீது தொடுக்கப்பட்ட யுத்தம், நிராயுதபாணிகளாக நிற்கும் மக்களைச் சுட்டுக்கொல்வதும், வெட்டிக்கொல்வதும் போன்ற இராணுவ வெறியாட்டங்கள் ஒரு புறமிருக்க விமானக் குண்டுவீச்சு, பீரங்கிக் குண்டு வீச்சு மூலம் தமிழீழத்தை ரணகளமாக்கி வருகின்றது சிங்கள அரச பயங்கரவாத ஓநாய்.

நாம் போராடி, இரத்தம் சிந்தி, எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும். எமக்கு வேறு வழியே இல்லை. ஒன்று அடிமைகளாக அழிந்தொழிய வேண்டும். இல்லது போராடிச் சுதந்திரமாக வாழ வேண்டும். இதுதான் எமது அரசியல் தலைவிதி. அதாவது, சுதந்திர தமிழீழத் தனியரசு தான் எமது பிரச்சினைக்கு ஒரே தீர்வு. இந்தத் தனியரைச அமைக்க நாம் எமது உயிர், உடல், ஆன்மாவை அர்ப்பணித்துப் போராடுவோம்.

எமது போராளிகளின் அற்புதமான தியாகங்களும், எமது மக்களாகிய உங்களின் அசைக்க முடியாத உறுதிப்பாடுமே எமது போராட்டத்தை உலக அரங்கில் பிரசித்தப் படுத்தியுள்ளது.

நீதியையும், தர்மத்தையும், சுதந்திரத்தையும் இலட்சியமாகக் கருதிய எமது விடுதலைப் போராட்டம் நிச்சயம் வெற்றியடைந்தே தீரும்.

(1987ஆம் ஆண்டு மே நாளை முன்னிட்டு விடுத்த செய்தியிலிருந்து )


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும்
பொன் நகை
மிந்தும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24 EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu



# பூமிப்பம்பரம் சுழல்வது உன் காலின் கீழே...

என் இளைய தலைமுறையே! எழுக,
உறங்கும் நேரம் இதுவல்ல... உணர்க.
புலர்ந்தது பொழுது.
பள்ளியெழுந்தருளாய்.
எழுவான் திசையின் அடிவானம்
கழுவி முகம் திருத்தி குங்குமம் பூசிக் கிடக்கிறது.
முற்றத்து மல்லிகைக் கன்னி
பனிநீராடி நிற்கின்றாள்.
குமரியழகோடு தலைவாசலில் காலைப்பொழுது.
குளு, குளுவென்று குளித்து வருகிறாள் காற்றுப்பெண்.
இன்னுமா உறக்கம் இளைய தலைமுறையே! எழுக.
கோயில்மணி வா, வாவென்றழைக்கிறது.
போர்வைவிட்டெழுவாய்.
பச்சைநிறப் பாவடை கட்டி
வயலெங்கும் பயிர்களின் நடனம்.
சிறகடித்துப் பறவைகள் குரலெடுத்துப் பாடுகின்றன.
கழுத்தில் வெண்டயம் சப்திக்க
உழவுக்குப் போகின்றன இளநாம்பன்கள்.
இன்னுமா உறக்கமென்று
“சென்றி” முடித்த சேவல்கள் கூவுகின்றன.
என் இளைய தலைமுறையே! எழுக.
உன் வேர்களிலும் வீரியம் சுவறட்டும்.
சூரியக்கதிர்களுன் மேனியிற்பட்டுத் தெறிக்கட்டும்.
பாரம் அழுத்தாத பலத்தோடு
வலியன உன் தோள்கள்.
ஆற்று நீரையே தடுத்து நிறுத்த வல்லன
உன் கைகள்.
விழி திறந்து நோக்கின்
எதிரேயுள்ளன எரிந்து கோகவல்ல
கனலின் தணல்பூத்த கண்களுனக்கு.
உன் காலின் கீழேதான்
பூமிப்பம்பரம் சுழல்வதறிவாய்.
தாயாள் முலையில் தமிழ்ப்பாலருந்திய
வாயே, உனக்கென் வந்தனங்கள்.
“பாட்டாலிவ் வையத்தைப் பாலித்த” பாரதியின்
கூட்டில் உயிரெடுத்த சிறுகுஞ்சு உன்னருகில்
நீட்டோலையோடு நிற்கின்றேன்.
இளைய தலைமுறையே!
நெருப்பெரியும் நேரம் நித்திரையா கொள்கின்றாய்?
எழுவாயென் இனத்தின் சிறுபொறியே!
போராடும் நாளொன்று புலர்ந்துளது புதிதாய்
ஒரு காலையொழி பரவுகின்றது.
இரு இந்நாளில் நெருப்பாய்.
இதுவன் நாடிலையாம்.
தனக்குக் கீழேதானம் நீயென்று
சங்கூதுகின்றான் ஒருவன்.
குதிரையேறிய இன்னொருவன்
உன் தெருவில்...
அதிகாரமமதையுடன் உலாவருகின்றான்
விடாதே என்றுன்ன எழுப்புகின்றது
வீரமாகாளியின் கோயில் மணி.
காதில் விழவிலையோ அக்காண்டாமணிச் சத்தம்?
இன்னும் உறங்குதியோ
என் இளைய தலைமுறையே!
வையப் பரப்பெங்கும் ஓடி இளைத்தும்
உய்யிவில்லை நீ.
உன் பரம்பரையின் மூத்தோன் கைகட்டி நின்றான்.
குற்றேவல் செய்து குளிர்ந்தான்.
கற்பனைத் தேரில் பவனிவந்து களித்தான்
நிமிரவழி தெரியாது குறுகிக்கிடந்து போனான்.
அனற்குஞ்சே!
அவன் போலவே நீயுமா கிடப்பாய்?
என் கவிதைக்கு நீ பொருளாவதெப்போ?
பாட்டுக்குள் உனைவைத்து நான்பாடவேண்டாமோ?
பூட்டு கவசம் உன் நெஞ்சுச் சுவரில்
சாட்டையெடுத்து விளாசு.
என் சந்ததி நிமிர்ந்ததென்று சந்தோஷப்படுவேன்.
தீயிலெரியுதுன் சேதம்.
வீடிழந்த உறவெல்லாம் வீதியில்.
ஒரு நாயைத் துரத்துவதுபோல
எம்மைத் துரத்துகின்றான் ஒருவன்.
உன் ஊரைப் பார், உறவைப் பார்.
வேரிழந்துபோன வீதிகளைப்பார்.
எல்லாமே கண்ணீரோடு நாளைக் கழிக்கின்றன. கொடுமை
என்ன நடந்தது இந்த மண்ணுக்கு?
அரக்குமாளிகைபோல எல்லாமே எரிகின்றன.
எம்மினமென்ன காலிற்செருப்பா
அறுந்ததும் தூக்கி வீசுவதற்கு?
வழிமறித்தெம்மை வாவென்றிழுத்துச் செல்ல
களவெடுத்துத் திரிகின்றனரா எம் பிள்ளைகள்?
வாணவிளையாட்டு எம் தலைக்கு மேலே...
கொட்டுகிறான் பார் குண்டுகள்.
எழுக என் இளைய தலைமுறையே!
நீயுன் வீட்டுக்கு மட்டுமா விரிந்தாய்?
வானவில்லாக ஜாலம் காட்டிப் போகவா மானுட ஜென்மம்
எடுத்தாய்?
வண்டூதும் மலர்களுன் வாசலில் மலர்ந்துளது.
வா வெளியே.
புண்ணாக்குத் தின்னப் பிறப்பெடுத்தவைகூட
புறப்பட்டு மேச்சலுக்குப் போய்விட்டன.
நீ என்ன செய்கின்றாய்?
எழுக என் இளைய தலைமுறையே!
-புதுவை இரத்தினதுரை




# 'அக்னி கீல' முறியடிப்புச் சமர் 25.04.2001




## "தீச்சுவாலை"

*படை நடவடிக்கை குறித்து பிரிகேடியர் தீபன் விளக்கம்*

நான்கு மாத கால திறமையான பயிற்சிகளும் சிங்களத்தில் அதி உயர் வலுக்கொண்ட 15 ஆயிரம் இராணுவத்தினர் கடல் வான் படைகளின் தக்க பலத்துடன் டாங்கிகள், ஆட்லறிகள், பல குழல் எறிகணைச் செலுத்திகளின் கூட்டாதரவோடு மேற்கொண்ட சிறீலங்காவின் தீச்சுவாலை படை நடவடிக்கையை தேசியத் தலைவர் அவர்களின் சிறப்பான திட்ட மிடலில் செயற்பட்டு வெற்றிகரமாக முறியடித்தோம் என தீச்சுவாலை முறியடிப்பு மற்றும் தற்காப்பு சமரை ஒருங்கிணைத்து நெறிப்படுத்திய தளபதி பிரிகேடியர் தீபன் தெரிவித்துள்ளார்.

கண்டிவீதியின் கிழக்குப் புறமாக கடலேரி கண்டல் வரையான பகுதிகளில் 55 ஆம் டிவிசனின் இராணுவ அணிகள் முன் னேறின. பின்னணியில் ஆட்லறிகள், மோட்டார்கள், பல குழல் எறிகணைச் செலுத்திகள் குண்டுகளை ஆயிரக்கணக்கில் மழை போல் பொழிந்து கொண்டிருந்தன. 10 நிமிடங்களுக்கு ஒரு தடவை வான் படையின் மிகையொலி வேக விமானங்கள் புதிது புதிதாக வந்து பாரிய குண்டுகளை வீசின.

பன்னீராயிரம் படையினர் 8 கிலோமீற்றர் அகலமான கண்டல் முதல் கிளாலி கடல்நீரேரி வரையான பகுதிகளில் நகர்ந்தன. 3000 படைகள் பின்னணிச் செயற்பாடுகளை மேற் கொண்டன.

நான்கு மாத கால சிறப்பு பயிற்சிகளுடன் டாங்கிகள் சகிதம் இராணுவம் விடுதலைப்புலிகளின் நிலைகளைக் கடந்து ஒன்றரைக் கிலோமீற்றர் தூரம் நகர்ந்திருந்தது. கிளாலிக் கரையோரமாக சிறீலங்கா கடற்படை கலங்கள் எஸ்.எவ் பிரிகேட் படையினருக்கு ஆதரவாக தாக்குதலை நடத்தின.

இத்தகைய எதிரியின் பலமான நகர்வுக்கு எதிரான தற்காப்பு சமரையும் முறியடிப்புச் சமரையும் இந்த கள முனையில் இருந்த விடுதலைப்புலிகளின் அணிகள் வலுவுடன் மேற் கொண்டு எதிரிக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தி வெற்றிகரமாக முறியடித்தன. இந்த முறியடிப்புச் சமரில் கிளாலியில் இருந்து நகர்ந்த கொமாண்டோ படைகளையும் கண்டல் கடலேரிப்பகுதி ஊடாக நகர்ந்த 55 ஆம் டிவிசனின் ஒரு பகுதி படைகளையும் சோதியா படையணி எதிர்கொண்டு பலத்த தாக்குதல்களை நடத்தியது.

இப்படையணியினர் எதிரிக்கு பலத்த இழப்புக்களை ஏற் படுத்தினர். கண்டல் கடலேரி ஊடாக நகர்ந்த படைகளை எதிர் கொண்ட தாக்குதலில் படை தரப்புக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்திய சோதியாப்படையணியின் லெப்ரினன் கேணல் சுதந்திரா உட்பட பலர் உயிரிழந்துள்ளனர்.

கண்டிவீதியுடன் மேற்கு பகுதியில் நகர்ந்த 55 ஆம் டிவிசன் இராணுவத்தின் மீது தற்காப்பு மற்றும் முறியடிப்பு சமரை சார்ள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி நடத்தியது. கண்டிவீதி அருகுப் பகுதியில் நகர்ந்த படைகளுக்கு எதிராக மாலதி படை யினர் தீரமிகு தாக்குதலை நடத்தினர்.

கிளாலியை அடுத்த கரையோரமாக நகர்ந்து முன்னேறிய 53 ஆம் டிவிசன் படைகளுக்கு எதிராக எல்லைப்படை, சிறப்பு எல்லைப்படை வீரர்கள் உறுதியுடன் எதிர்கொண்டு எதிரிக்கு பலத்த இழப்புகளை ஏற்படுத்தினர். 8 கிலோமீற்றர் முன்னணி சமர்க்களப்பகுதி லெப்ரினன் கேணல் கோகுலன், லெப்ரினன் கேணல் துர்கா, லெப்ரினன் கேணல் வீரமதி, லெப்ரினன் கேணல் லோறன்ஸ், லெப்ரினன் கேணல் சுதந்திரா ஆகி யோராலும் வழிநடத்தப்பட்டது. மாலதி படையணியை அதன் சிறப்புத் தளபதி விதுசா நெறிப்படுத்தினார்.

எல்லைப்படை சிறப்பு எல்லைப்படை என்பவற்றை சுட்டா வழிப் படுத்தினார் என சமர் முறியை ஒருங்கிணைப்புச் செய்த பிரிகேடியர் தீபன் தெரிவித்தார்.

முன்னணி முனைகளுக்கு அடுத்த கட்ட முனையை தளபதி பிரிகேடியர் பால்ராஜ் நெறிப்படுத்தினார். எதிரிக்கு எதிரான துல்லியமான பீரங்கித் தாக்குதல்களைக் கேணல் கிட்டு பீரங்கிப் படையணி சிறப்பு தளபதி பிரிகேடியர் பானு நெறிப்படுத்தினார்.

கடற்படையினருக்கு எதிரான தாக்குதல்களை தளபதி அறிவு தலைமையிலான கடற்புலிகள் அணி நடத்தியது. களமுனை யில் இருக்கின்ற பலத்தைக் கொண்டு எதிரியை ஆனையிறவு பெருங்கனவுப் படை நடவடிக்கையான தீச்சுவாலையை உடைத்து அழித்தோம் என தளபதி பிரிகேடியர் பால்ராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிக்கு முக்கியமான காரணம் எமது தலைவர் அவர்களின் சிறந்த திட்டமிடலும் அந்த திட்டத்திற்கு அமைய இந்த சமரில் போராளிகள் பொறுப்பாளர்கள் தளபதிகள் ஆகி யோரின் செயற்பாடுகள் சரியாக அமைந்திருந்ததே ஆகுமென தீச்சுவாலை முறியடிப்பை எதிரிக்கு எதிரான துல்லியமான சூடுகளை வழங்கிய பீரங்கிப்படைப் பிரிவுகளை நெறிப்படுத்திய கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் சிறப்புத் தளபதி பிரி கேடியர் பானு தெரிவித்தார்.



பதினையாயிரம் படையினரையும் கடல் வான் படைகளையும் சிறீலங்கா இராணுவத்தின் பெரும் பலமும் கொண்ட தீச் சுவாலையை எமது தலைவர் அவர்களின் திட்டத்திற்கு அமைய செயற்பட்டு வெற்றி கொண்டோம் எனவும் முறியடிப்பு சமரை ஒருங்கிணைப்பு செய்த தளபதி பிரிகேடியர் தெரிவித்தார்.

இந்த சமரில் 400க்கும் அதிகமான படையினர் கொல்லப் பட்டனர் 2000க்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர். இரண்டு டாங்கிகள் ஒரு எம்.ஐ-24 உலங்கு வானூர்தி என்பன சேதமாக்கப்பட்டன.

படையினரால் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எறிகணைகள் பீரங்கி குண்டுகள் பல குழல் எறிகணைகள் விமானக் குண்டுகள் என்பன 60 மணி நேர தீச்சுவாலை மற்றும் முறியடிப்பு சமர்க்காலத்தில் வீசப்பட்டன எனவும் பிரிகேடியர் தீபன் தெரிவித்தார்.

## பளைப்பிரதேசத்தில் கட்டிடங்கள் முற்றாக அழிந்துள்ளன

*(தமிழ்நெட் - மே 2001 20:47:07 GMT)*

தீச்சுவாலை படை நடவடிக்கையின் போது சிறீலங்கா படையினரின் மிகையொலி வேக விமானங்களினதும் ஆட்லறி பலகுழல் எறிகணைகளினதும் சரமாரியான தாக்குதல்களால் பளைப்பிரதேசக் கட்டிடங்கள் யாவும் சேதமாகியும் முற்றாக அழிந்தும் உள்ளன.

விமான குண்டுத் தாக்குதல்களால் பளை மருத்துவமனை, பளை உதவி அரச அதிபர் அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகம் மற்றும் பளை தபாலகம் என்பன முற்றாக சேதமாகிக் காணப்படுகின்றன.

அத்துடன் அங்குள்ள வீடுகள் யாவும் அழிந்தும் சேதமாகியும் உள்ளன. பெரும்பாலான தென்னந்தோப்புக்கள் விமானங்களின் குண்டுகளால் அழிந்துள்ளன. விமானங்களின் குண்டுகள் ஒவ்வொன்றும் 100 சதுர மீற்றர் அளவு பரப்புடைய நிலத்தை தோண்டி 30 அடிக்கும் மேலான ஆழத்தில் குழிகளை ஏற்படுத்தியுள்ளன.

ஒவ்வொரு குழியிலும் நீர் சுரந்து காணப்படுகிறது. வீதிகள் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் சேதமாகியுள்ளன. வீதியின் நடுவி லும் விமானக் குண்டுகள் வீழ்ந்து வெடித்து பாரிய குழிகளை தோண்டியுள்ளன.

படையினரின் எறிகணை வீச்சில் பளை நகரத்தின் சந்தைக்கட்டிடம் கடுமையான சேதங்களைச் சந்தித்துள்ளது. தீச்சுவாலை படை நடவடிக்கையில் சிறீலங்காப் படைகளின் தாக்குதல்களால் பளை பிரதேசமே சுடுகாடாக காட்சியளிக்கின்றது.

## ஏன் "அக்னி கீல" பிழைத்துப் போனது?

*(கொழும்பு சண்டே டைம்ஸ் இராணுவ செய்தியாளர் எழுதிய கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது)*

பலாலி விமானப்படைத் தளத்தில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான சீ 130 ரக விமானம் தாளப் பறக்கத் தொடங்கிய போது சூரியன் மறையத் தொடங்கி இருந்தது. ஓய்வை முடித்துக் கொண்டு சீருடை தரித்த படையினர் மீள போர்முனைக்குச் செல்வதற்காய் விமானத்தில் பயணிக்கின்றனர். நான் மட்டுமே ஒரு விதிவிலக்கு. விமானத்தில் இருந்த ஒரே பத்திரிகையாளன்...

- கடந்த வருடம் ஆனையிறவு தோல்வி மற்றும் யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற பின்னடைவுகளின் பின்னர் அரசு பல பில்லியன் ரூபாய்களை கொட்டி பாதுகாப்புப் படைகளை நவீனமயப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டது. எல்லா தேவைப்பட்ட ஆயதங்களும் வந்தடைந்தன. படையினர் 4 மாதங்கள் மீளபயிற்றுவிக்கப்பட்டனர்....

- படையினர் தமது தெற்கு பாதுகாப்புநிலைகளை முறித்துக் கொண்டு காலை 1:48 மணியளவில் முன்னேறத் தொடங்கினர்...

- பளையைக் கைப்பற்றுவதே இலக்காக இருந்தது. நடவடிக்கைத் திட்டம் இரு நாட்களுக்கு வகுக்கப்பட்டிருந்தது. ஏப்பிரல் 26ல் இலக்கை அடைய திட்டமிடப் பட்டிருந்தன. பளையைக் கைப்பற்றிய பின்னர் பளையின் இரு புறமும் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்படவிருந்தன. இந்த வலிந்து தாக்குதல் இவ்வருடத்தின் முதலாவது பெரும் நடவடிக்கையாகும். மேலும், ஆனையிறவைக் கைப்பற்று வதற்கான எதிர்கால நடவடிக்கைகளுக்கு இது ஒரு முன்னுதாரணமாகவும் அமையும். வெற்றி அரசாங்கத்தின் தோற்றத்தை பிரகாசிக்க வைத்து, அரசுக்கு ஒரு பலமான பேரம்பேசும் வாய்ப்பை பேச்சுக்களின் போது தரும்....

- வலிந்து தாக்குதல் நடவடிக்கையானது இராணுவத்தின் 55வது படைப்பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தலைமையில் ஏ9 நெடுஞ் சாலைக்கு கிழக்குப் புறமாக நகர்த்தப்பட்டது. மேற்கு பக்கம், இராணுவத்தின் சிறப்பு தேர்ச்சி பெற்ற 53வது படைப்பிரிவினரால் நடத்தப்பட்டது...

- கெரில்லாக்கள் இரு நகரும் படைகளையும் மோட்டார்கள், பீரங்கிகள், பல்குழல் றொக்கட்கள் மூலம் தாக்கினர். இருளடையத் தொடங்கும் போது 53வது படைப்பிரிவினர் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டனர். இராணுவமும், அவர்களது வழங்கல்களும் நகரமுடியவில்லை. எதிரிகளின் சூடு தீவிரம் பெற்றது. யாழ். பாதுகாப்பு படைகளின் நடவடிக்கைத் தலைமையகத்தில் தீவிர கவலை உருவாகியது. பலாலியில் தங்கியிருந்த இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் பலகெலவுடன் கலந்து பேசிய பின்னர் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா படைகளை மீள தமது இடங்களுக்குப் பின்வாங்குமாறு மேஜர் ஜெனரல் சிவிலி வனிகசேகராவிற்கு உத்தரவிட்டார். இந்நடவடிக்கையானது பல சிறிய சிறிய தாக்குதல்களால் தனிமைப்படுத்தப்பட்ட படைகள் மீது நடாத்தப்பட்ட பின்னரே இடம் பெற்றது. சில கொல்லப்பட்ட படையினரின் உடல்கள் வியூகங்களுக்குள் மாட்டிக் கொண்டது.

- கிழக்குப் பக்கமாக 4 கிமீ கைப்பற்றி நிலைகொண்ட படையினர் கடும் தாக்குதலுக்கு இலக்காகினர். இது செவ்வாயன்று தீவிரம் பெற்று மற்றைய இரு நாட்களும் தொடர்ந்தது. வெள்ளியன்று கெரில்லாக்கள் இப்பகுதிகளுக்குள் ஊடுருவினர். அது தீவிர மோதலை ஏற்படுத்தியது. மீள் நடவடிக்கை தலைமையகத்தில் தீவிர கவலை பரவியது. மேஜர்.ஜெனரல் விஜேந்திரா மீண்டும் கொழும்பிற்கு திரும்பியிருந்த லெப். ஜெனரல் பலகெலவுடன் தொடர்பு கொண்டார். அவர் கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் றொகான் தளுவத்தவுக்கு நிலைமைகளை விளக்கினார். தேவைப்பட்டால் படைகளை பின்வாங்குமாறு அவர் உத்தரவிட்டார்...

- எதிரிகளின் நடவடிக்கை அடக்குவதற்கு அப்பாற்பட்டதாக விளங்கியது...

- எனக்கு முன்னே, மர நிழல்களில் அரை இருளில் பெரியளவிலான வெள்ளை திட்டிகள் நிறைந்து கிடந்தது. அண்மையில் சென்று பார்க்கும் போது அவை கொல்லப்பட்ட படையினரின் உடல்கள் வெள்ளை துணியால் சுற்றிக்கட்டப்பட்டு அடுக்கிவைக்கப்பட்டுள்ளமையை அங்கு காணலாம்...

- ... சிறுது துரத்தில், தூரநோக்கியூடாகப் பார்த்த போது பூநகரியில் உள்ள புலிகளின் நிலைகளை காணமுடிந்தது. அவற்றில் அங்கு காணப்பட்ட கோபுரமே மிக கவனத்திற்குரியதாய் அமைந்தது. அது தொலைத்தொடர்பு கோபுரம் என ஊகிக்கப்படுகின்றது. அவை நாட்டுபுறங்களில் செல்லுலர் தொலை பேசிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களை நினைவுக்குக் கொண்டு வந்தது. புலிகளின் இக் கோபுரங்கள் அவை போன்று உயரமானவை. மணல் திட்டிகளால் அடையாளம் காணப்படும் கரையோரத்தில் அமைந்துள்ளது. நாங்கள் இனம்காணப்பட்ட பீரங்கி தாக்குதலுக்குள்ளாகலாம் என்கின்ற பயத்தில் நாங்கள் அங்கிருந்து நகர்ந்தோம்....

(தி சண்டே டைம்ஸ் 29.04.01)



## அக்னி கீல தோல்வி இராணுவத்தினை குறைந்தது 4 மாதகாலம் பின் தள்ளியுள்ளது!

*(தி ஐலண்ட் எனும் கொழும்பு இனவாத ஆங்கில ஏட்டில் வெளிவந்த இராணுவ ஆய்வுக் கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது)*

கடந்த வாரம் யாழ்.குடாநாட்டில் இரு பிரதான படைப் பிரிவுகளை சிதைவுக்குள்ளாக்கி, அடுத்த 4 மாதகாலத்திற்காவது அனைத்துப் பிரதான இராணுவ நடவடிக்கைகளையும் இடைநிறுத்தியுள்ள அக்னி கீல இராணுவ நடவடிக்கையின் தோல்வி பற்றி ஆராய உத்தியோகபூர்வ விசாரணைகளை சிறீலங்கா இராணுவம் ஆரம்பித்துள்ளது...

- சுமார் 12000 இராணுவத்தில் சுமார் 10 வீதமானவர்கள் காயங்களுக்குள்ளாகினர். இது நவீன போர் முறையில் மிகமிக அதிகமான சேதார வீதமாகும். 53ம், 55ம் படைப் பிரிவுகளில் ஏற்பட்ட பாரிய ஆள்இழப்பு இராணுவத்திற்கு தனது பிரதான வலிந்து தாக்கும் திறனை பறித்துவிட்டது. இவ்விரு படைப் பிரிவுகளும் 1995ல் யாழ் நகரை கைப்பற்றியதிலிருந்து இராணுவத்தின் வலிந்து தாக்கும் சக்தியாக திகழ்ந்த 4 படைப் பிரிவுகளைச் சேர்ந்தன. 52ம், 54ம் படைப் பிரிவுகளே மற்றைய இரண்டுமாகும். 54வது படைப்பிரிவு கடந்த வருடம் யாழ். போரில் மோசமாக சிதைக்கப்பட்டது....






• புலிகள் அறிவித்த 4 மாத போர்நிறுத்தக் காலத்தில் இந்த போரிற்கான ஆயுத்தங்களை இராணுவம் மேற்கொண்டதால் இப்படுதோல்விக்கு வேறுவிளக்கங்கள் கொடுக்க முடியாது. இந்த நடவடிக்கையில் இராணுவத்தின் மிகச்சிறந்த இராணுவ பிரிவுகள் பங்கேற்றன. அவை பீரங்கிகளாலும், பல்குழல் ராக்கட்செலுத்திகளாலும் விமானத் தாக்குதல்களாலும், கடற்படை குண்டுவீச்சுக்களாலும் உதவியளிக்கப்பட்டன. கடந்த 4 மாத காலம் இராணுவம் தனது பலத்தை அதிகப்படுத்தியது. ஆயுதங்களும், வாகனங்களும் வாங்கப்பெற்றன. விமானப் படை கிபிர் மற்றும் மிக் யுத்த விமானங்களையும், உலங்கு வானூர்திகளையும் வாங்கின.

இத் தோல்விக்கான பொறுப்பு வெறுமனே குறித்த கட்டளை தளபதிகளான 55வது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் தென்னக்கோன், 52வது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் சிவலி வனிதசேகரா மற்றும் வடக்கில் இத்திட்டத்தை தீட்டி வழிகாட்டிய யாழ். தளபதி மேஜர் ஜெனரல் விஜேந்திரா போன்றோரிடம் தங்கியிருக்கவில்லை. முப்படைகளின் தளபதிகள் (லெப். ஜெனரல் பலகெல, வைஸ் அட்மிரல் தயா சன்டகிரி, ஏர் மார்சல் ஜெயலத் வீரக்கொடி) தனிப்பட்ட முறையில் பலாலியில் தங்கியிருந்து போரில் ஈடுபட்டனர். கூட்டுப் படை தளபதி லெப்.ஜெனரல் றொகான் தளுவத்தையும் கூட இதற்குப் பொறுப் பேற்க வேண்டும்.
(தி ஜலண்ட் 06.05.2001)

## அக்னி கீல மீதான பதிலடி

***உலகை மரபுவழி போரியலில் புலிகள் படைத்த புதிய தந்திரோபாயம்***

யாழ்ப்பாணப் படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருப்பவர்களும், அவர்களுடைய அமெரிக்க மற்றும் பிரித்தானிய படைத்துறை ஆலோசகர்களும், கடந்த ஐந்தாறு மாதங்களாக ஒன்றைத் திடமாகக் கூறிவந்தார்கள். அதாவது, களமுனையில் புலிப்படைகளுடன் நேருக்கு நேர் மோதுவதென்பது. சிறீலங்கா படைகளுக்கு சிக்கலாக இருந்தாலும், வான் படை பலமும், பல்குழல் எறிகணைவீசி, பீரங்கி என்பவற்றின் வலுவை மட்டும் கொண்டு, ஆனையிறவு வரை செல்லலாம் என்பதே அவர்களின் கூற்று.

ஏற்கனவே பல சண்டைகளில், பெரும் வான்படை குண்டுவீச்சு வலுவையும், பீரங்கி சூட்டாதரவையும் நம்பி, முன்னேறிச் சென்ற சிறீலங்காவின் காலாட்படைகளும், அதிரடிப்படைகளும், புலிகளின் வழிமறிப்புத் தாக்குதல்களுக்கு உள்ளாகி, சின்னாபின்னாமாகிய பல சம்பவங்களை நீங்கள் அறிந்துள்ளீர்கள். கடந்த நவம்பர் மாதம் சிறீலங்கா படைத்துறை ஆனையிறவை நோக்கிய படையெடுப்புக்குத் தயார் செய்து கொண்டிருந்த வேளையில் இரண்டு கேள்விகள் எழுந்தன.

1. எறிகணைகள், பீரங்கிக் குண்டுகள், வான்படை தாக்குதல்கள் என்பவற்றை ஒரு குறிப்பிட்ட புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது பொழிந்த பின்னர், முன்னேறிச் செல்லும் படையினருடன், புலிகள் நேருக்குநேர் வழிமறிப்பு தாக்குதல்களில் ஈடுபட்டால், அதனால் முன்னேறும் முனை அணிகள் சிதைய நேரிட்டால் என்ன செய்வது?

2. பெருந்தொகையான படைகள் முன்னேறிச் சென்றால் அவை நிலைகொள்ளும்பொழுது, புலிகளின் வழிமறிப்புத் தாக்குதல்கள், எறிகணை வீச்சுகள் என்பவற்றுக்கு மத்திலும் அவற்றிற்கு எவ்வாறு வழங்கலை தடையின்றி மேற்கொள்வது?

வழக்கமாக ஒரிரு கமாண்டோ பட்டாலியன்களை புலிகளின் அரண் நிலைகளை அடித்து முன்னேறுவதற்காக அனுப்பி, அதன் பின்னர் சாதாரண காலாட்படைகளை களத்தில் இறக்குவதே இரண்டாம் ஈழப்போரின் ஆரம்ப காலத்திலிருந்து சிறீலங்கா படையினர் மேற் கொண்டு வந்த வழிமுறையாகும். புலிகளின் நிலைகளை உடைப்பதற்கும், உட்புகுவதற்கும் பயன்படுத்தப்பட்ட விசேட அணிகளின் அளவும் அவர்களுக்கு வழங்கப்பட்ட சூட்டாதரவின் செறிவும் ஆண்டுக்கு ஆண்டு கூடிச் சென்றனவே ஒழிய, அடிப்படை தந்திரோபாயத்தில் எந்த மாற்றமும் இருக்கவில்லை. சிறீலங்கா படைத்துறை அதிரடிப்படை அணிகளை முன் அனுப்பி, காலாட்படை அணிகளைப் பின் அனுப்பும் தந்திரோபாயத்தில் காலத்திற்குக் காலம் சில அமைப்பு மாற்றங்களையும் (Tactical infantry formations) முன்னேறும் அணிகளுக்கான சூட்டாதரவு வழங்கும் முறைகளில் சில மாற்றங்களையும் மேலைத்தேய காலாட்படை போரியல் நெறிகளுக்கு அமைய செய்து பார்த்தது. எனினும், புலிகள் இவற்றிற்கு மாற்று வழிகளை உடனுக்குடன் ஆராய்ந்து செய்தே வந்துள்ளனர்.

ஆகவே, ஈழத்தின் களமுனைகளைப் பொறுத்தவரையில் மரபுவழி படை நகர்வுகளின் முப்பரிமாணத்தின் அடிப்படையிலேயே அனைத்து படை நகர்த்தல்களையும் செய்ய வேண்டிய நிலைக்கு சிறீலங்கா படைத்துறை 1996க்குப் பின் நிர்ப்பந்திக்கப் பட்டுவிட்டது. அதாவது, இலக்கை நோக்கிய சூட்டுச் செறிவு, அதைத் தொடர்ந்து முனை அணிகளின் (Spearheads) முன் நகர்வு அதன்பின் காலாட்படைகள் பின்சென்று நிலைகளைப் பலப்படுத்தல் என்ற அடிப்படையில் அமைந்த மரபுவழி போர்க்களங்களின் முப்பரிமாணத்தை அடிப்படையாகக் கொண்டே, தனது தாக்குதல் திட்டங்களை வகுக்க வேண்டிய கட்டாயம் இன்று சிறீலங்கா படைத்துறைக்கு.

முதலாம், இரண்டாம் உலகப் போரின் பல களமுனைகளில் சூட்டுச் செறிவென்பதே மேற்படி மூன்று அம்சங்களில் பிரதானமாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி மிகச் செறிவாக எறிகணைகளையும், குண்டுகளையும் இடைவிடாது வீசி அங்கு ஒரு புல்பூண்டுகூட இல்லாமல் அழிப்பதை Stonking என்று அழைத்தார்கள். மூன்றாம் ஈழப்போரில் தனது முனை அணிகளாக இயங்கிய 53வது டிவிசன் தொடர்ச்சியாக ஏகப்பட்ட இழப்புகளைச் சந்தித்து வந்த காரணத்தாலும், அந்த அணிக்கு ஆள் திரட்டுவதில் உள்ள சிக்கல்கள் காரணமாகவும் தற்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை கைப்பற்றும் படை நடவடிக்கைகளைத் திட்டமிடுகையில் மேற்படி மூன்று அம்சங்களில் சூட்டுச் செறிவையே பிரதானமாக நம்பவேண்டிய நிலைக்கு சிறீலங்கா படைத்துறை தள்ளப்பட்டுள்ளது.

சூட்டுச்செறிவை இரண்டாம் உலகப் போர்முனைகள், வட கொரியாவில் நடை பெற்ற அமெரிக்க சீன யுத்தம் போன்றவற்றில் காணப்பட்டதைப் போன்று மிகை அதிகரிப்பு செய்தால் மேற்படி சிக்கலுக்கு தீர்வு கண்டுவிடலாம் என்று ஆனையிறவை நோக்கிய அக்னி கீல (தீச்சுவாலை) படை நகர்வுகளை திட்டமிட்டவர்களும் அவர்களுக்குப் பின்னணி ஆலோசனை வழங்கிய அமெரிக்க, பிரித்தானிய படைத்துறையினரும், நம்பினார்கள்.

இதனடிப்படையிலேயே, சூட்டுச்செறிவை மிகை அதிகரிப்புச் செய்யக்கூடிய அனைத்துக் கொள்வனவுகளுக்கும், தயாரிப்புகளுக்கும் சிறீலங்கா அரசுக்கு பல மேற்கு நாடுகளும் இந்தியாவும் பின்னணி உதவிகளை வழங்கின. உண்மையிலேயே அக்னி கீல களமுனையில் சிறீலங்கா படைத்துறையால் செறிக்கப்பட்ட சூட்டு வலுவானது, எந்தப் பலமான அரணையும் தகர்த்தழிக்கக்கூடிய ஒன்று. ஆகவே கொள்கையளவில் இந்த சூட்டு வலுவின் ஊடான அழித்தொழிப்பின் பின், ஆனையிறவை நோக்கி கட்டம் கட்டமாக நகர்வதற்கு எந்தத் தடையும் இருக்காது என்பது அனைவரின் எண்ணம்.

எதிரியின் முன்னணி அரண்களையும் பின்புல காவல் நிலைகளையும், மிகைச் சூட்டு வலுவைக் கொண்டு அழித்தால், எதிர்ப்பு குறையும் என்ற எண்ணமே அக்னி கீல நடவடிக்கையில் முதன்மை பெற்றிருந்தது. இது உலகின் நவீன மரபுவழிப் போர்முனைகள் அனைத்திலும் (நெப்போலியன் காலத்திலிருந்து இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கார்கில் மலைப்பகுதியில் நடைபெற்ற சண்டை வரையில்) இது ஒரு மாறிலியாகவே மரபுவழிப் போரியலிலும் திட்டமிடலிலும் இருந்து வருகின்றது.

மேலும் பலமான அரண்களை அமைத்தலும் அரண் வியூகங்களையும் மாற்றலும் பின்வாங்கிச் சண்டையிடலும் எதிர்ச்சூட்டு வலுவை அதிகரித்துச் செல்வதும் இதற்கு பதில் தந்திரோபாயங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஆனால், அக்னி கீலவிற்கு எதிராக புலிகள் மேற்கொண்ட அடிப்படைத் தந்திரோபாயம் ஒரு புதிய அத்தியாயத்தை மரபுவழி போரியலில் திறந்து வைத்துள்ளது.

மேற்படி முப்பரிமாண மரபுவழி படை நகர்த்தற் தந்திரோபாயத்தை வெற்றிகரமாக எதிர் கொள்ளக் கூடிய, ஒரு புதிய பரிமாணம் கொண்ட பதில் நடவடிக்கையை புலிகள் அறிமுகப் படுத்தியுள்ளனர். அதாவது, எதிரியை வரவிடுதல், அவர்கள் வரும் வழியைச் சரியாகக் குறிவைத்து, பின்புலத்திலிருந்து எறிகணை, பீரங்கித் தாக்குதல்களை மேற்கொள்ளுதல், அதன் மூலம் அந்தப் பாதைகளை அண்டிய கண்ணிவெடி வயல்களுக்குள் அவர்களைச் சிதற வைத்தல். பின்னர் அக்கண்ணிவெடி வயல்களினூடான முன்னொழுங்கு செய்யப்பட்ட பாதைகள் வழியாக வழிமறிப்புத் தாக்குதல்களை மேற்கொள்ளுதல் என்ற அடிப்படையில் அமைந்த புலிகளின் எதிர் தந்திரோபாயத்தை யாராவது இதற்கு முன்னர் கையாண்டிருக்கின்றார்களா என நான் கடந்த ஒருவாரகாலமாக போரியல் வரலாற்று நூல்களை தட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். இன்னும் மறுமொழி கிடைக்கவில்லை.
(பிரபல இராணுவ ஆய்வாளர் டி.சிவராம்)

**பெரும் உயிர்ச் சேதத்தாலும் தோல்வியாலும் அவமானப்பட்டு நிற்கும் எதிரியானவன் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மீண்டும் மீண்டும் மிகவும் மூர்க்கத்தனமாக முன்னெடுக்க முயற்சிப்பான். எனவே நாம் விழிப்புடனிருந்து, எதிரியின் ஆக்கிரமிப்பை முறியடிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து, எம்மைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும். எமது மண்ணையும் எமது மக்களையும் பாதுகாத்து தேச விடுதலை என்ற இலட்சியம் நோக்கி நாம் உறுதி தளராது செயற்படுவோம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-


முள்ளிவாய்க்கால் நினைவு நாள்
Mullivaikkal Remembrance Day
2025
ஈழத்தமிழின அழிப்பு நாள்
Eelam Thamil GENOCIDE DAY
தமிழ்த்தேசிய துக்க நாள்
Thamil National MOURNING DAY
Only in 2009 Over 146, 679 Eelam Thamils were murdered and more then 70,000 Thamils unaccounted. Over 95,000 Thamil Women Widowed by Sri Lanka's Government Forces. More then 50,000 Thamils Children Orphaned.
1948 தொடக்கம்
ஈழத் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு தொடர்கிறது...
Since 1948
Structural Genocide Continues Against Eela Thamils by Sri Lankan Government
2009 மே May 18
16 Years ஆம் ஆண்டு
இடம்: உ ஊரகம், தங்கவயல் கர்நாடகா
சிறப்பு விருந்தினர்: திரு. வேல்முருகன்
The Genocide of Thamils in Sri Lanka's one of the biggest tragedies of 21st century and the World still remains Silent.
Government of India & United Nations Recognize Thamil Eelam Genocide and demand International Investigation on Genocide of Eelam Thamils
"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The Thirst of Thamils is the Homeland of Thamileelam"


நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
Transnational Government of Tamil Eelam
நான்காவது அரசவையின் மூன்றாவது நேரடி அமர்வு
அரசவை அமர்வு
2025 மே 16 - 17 - 18
"ஈழத்தமிழர்களது ஜனநாயகத்தின் வீச்சம்"
கருப்பொருள் :
- அனைத்துலக சட்டப்பின்புலத்தில் ஈழத்தமிழர் தேசத்தின் நாடாளும் உரிமை !
- இனவாத அரசைத் தலைமைதாங்கும் NPPம் இனவாதிகளே !
சிறப்பு பேச்சாளர்
Dr Alex Green
Author of Statehood as Political Community
M Hotel Buffalo
2040 Walden Ave
Buffalo,NY 14225, USA
மேலதிக விபரங்களுக்கு :
Dr.தவேந்திரராஜா (614) 202 3377
pmo@tgte.org
Live on www.tgte.tv
TGTE TV
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்


முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை நினைவுப்பேருரை
Mullivaaikaal Genocide Memorial Lecture
Date: Sunday, May 18, 2025 at 5:00pm
Venue: Ukranian Cultural Center,
562 Genesee St., Buffalo, NY 14204
Live on : www.tgte.tv
இனியொரு முள்ளிவாய்க்காலை விடமாட்டோம்!
நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்
TRANSITIONAL GOVERNMENT OF TAMILEELAM
மேலதிக விபரங்களுக்கு:
Dr. தவேந்திரராஜா 614 202 3377 pmo@tgte.org




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# 1981ம் ஆண்டு மே, யூன் இனப்படுகொலை

1981 ஆம் ஆண்டு மே மாதமும் யூன் மாதமும் வடகிழக்கில் தேர்தல் பரப்புரை பின்னணியில் கொந்தளிப்பான அரசியற் சூழ்நிலைகள் காணப்பட்டன. இந்நிலையில் ஐ.தே.கட்சியின் தலைமைப்பீடம் ஓர் உயர்மட்ட அமைச்சர் குழுவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தது. ஜே.ஆர் அரசாங்கத்தால் நயவஞ்சக நோக்கத்தோடு அனுப்பிவைக்கப்பட்ட இந்தக் குழுவில் மகாவலி அபிவிருத்தித்திட்ட அமைச்சர் காமினி திஸாநாயக்கா, விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் சிறில் மத்தியூ போன்ற அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணம் சுபாஸ் விடுதியில் தங்கியிருந்தார்கள். இவர்களோடு யாழ்ப்பாண நகர் எங்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற காவற்றுறையினரும் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டனர். முப்படைகளும் யாழ்ப்பாண நகர் எங்கும் பரவலாக நிறுத்தப்பட்டிருந்தனர். இவர்களைவிடப் பெருந்தொகையான சிங்களக் குண்டர்கள், காடையர்கள் தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் யாழ்ப்பாண நகரை எரியூட்டுவதற்கு ஏற்ற வகையில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறாக யாழ்ப்பாண நகரம் ஒரு கொதி நிலையில் இருந்தபோது 1981ஆம் ஆண்டு மே மாதம் முப்பத்தோராம் திகதி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலுக்கு முன்னால் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது திடீரென வெடிச்சத்தம் கேட்டது. அடையாளம் தெரியாதோர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு சிங்களக் காவற்றுறையினன் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு வந்த யாழ்ப்பாணக் காவற்றுறை நிலையத்தைச் சேர்ந்த சிங்களக் காவற்றுறையினர் நாச்சிமார் கோயிலுக்குத் தீ மூட்டினார்கள். ஆலய சுற்றாடலில் நின்ற மக்கள் தாக்கப் பட்டார்கள். ஆலயத்திற்கு உள்ளே நின்ற பக்தர்கள் காவற்றுறையினரின் துப்பாக்கிப் பிடிகளாற் தாக்கப்பட்டார்கள். பலர் படுகாய முற்றார்கள். ஆலயத்திற்குள்ளே இருந்த விக்கிரகங்கள், சுவாமிகாவும் வாகனங்கள் தாக்கப்பட்டன. ஆலயத்திற்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த தேர் முட்டியும், தேரும் தீ மூட்டி எரிக்கப்பட்டன. நாச்சிமார் கோயில் சுற்றாடலிலிருந்த வீடுகள், கடைகள், வீட்டு வேலிகள் என்பன எரிக்கப்பட்டன. இதன் பின்னர் யாழ்ப்பாண நகருக்குள் நுழைந்த சிறீலங்காக் காவற்றுறையினர் யாழ்ப்பாண நகருக்குத் தீ மூட்டினார்கள். யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு முன்னாலிருந்த மகாத்மா காந்தி சிலை, யாழ்ப்பாணம் நவீன சந்தைக்கு முன்னாலிருந்த சோமசுந்தரப் புலவர் சிலை, யாழ்ப்பாணம் ஹட்டன் நெசனல் வங்கிக்கு முன்னாலிருந்த திருவள்ளுவர் சிலை, யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியிலிருந்த ஔவையார் சிலை என்பன அடித்து நொருக்கப்பட்டன. யாழ்ப்பாணம் முற்ற வெளியிலிருந்த தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகளின் நினைவுத் தூபிகள் சிதைக்கப்பட்டன.



House and car of Mr. V. Yogeswaran, Jaffna MP, razed as fires burned citywide.

இதன் பின்னர் பருத்தித்துறை வீதி வழியாக அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிவேல் யோகேஸ்வரனின் வீட்டுக்குச் சென்று அவரிடமே அவரைப் பற்றி விசாரித்திருக்கிறார்கள். நிலைமையைப் புரிந்து கொண்ட யோகேஸ்வரன் தன் வீட்டுப் பின் மதிலால் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு ஓடி மயிரிழையில் உயிர்தப்பினார். நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடும் வீட்டினுள்ளேயிருந்த அவரது காரியாலயமும் சிங்களக் குண்டர்களால் தீயிட்டுப் பொசுக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு தரைமட்டமாக்கப்பட்டது. யோகேஸ்வரன் அவர்கள் 1981ஆம் ஆண்டு யூன், யூலை மாதம் வெளியான இந்தியா டுடே சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில் தனது வீட்டைக் கொளுத்தியவர்கள், கட்டைக் காற்சட்டையும் அரைக்கை பெனியனும் அணிந்து மதுபோதையிற் காணப்பட்டார்கள் என்றும், அவர்கள் சிங்களத்தில் கதைத்தார்கள் என்றும் குறிப்பிட் டிருந்தார்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# 15.05.1985 குமுதினிப் படுகொலை






யாழ் தீபகற்பத்தின் தனித்துவமானதும், நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டதுமாக, 47.4 சதுர கி.மீ நிலப்பரப்பில் நெடுந்தீவுப் பிரதேசம் அமைந்துள்ளது. தீவுகளில் பெரும் விசாலமான நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வந்தார்கள். நெடுந்தீவில் வாழும் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கடல் கடந்து படகுகளில் பிரயாணம் செய்வது தவிர்க்க முடியாததாக இருந்தது. நெடுந்தீவு மக்களின் கடல் போக்குவரத்திற்கு குமுதினிப் படகுச் சேவையே பெரிதும் உதவியது. இப்படகுச் சேவை நாளாந்தம் காலை 7.00 மணிக்கு நெடுந்தீவு துறை முகத்திலிருந்து குறிகட்டுவானுக்கும் பின்னர் மாலை 5.00 மணிக்கு குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவுத் துறை முகத்துக்கும் பயணிக்கும்.

1985ஆம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் திகதி குமுதினிப் படகு வழமை போல தனது சேவையை ஆரம்பித்தது. அன்று ஏறக்குறைய இப்படகில் அறுபதிற்கும் மேற்பட்ட பயணிகள் பிரயாணம் செய்தார்கள். நெடுந்தீவுத் துறைமுகத்திலிருந்து குறிகட்டுவான் நோக்கி வந்து கொண்டிருந்த சமயம், நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் அமைந்துள்ள நயினாதீவில் முகாமிட்டிருந்த கடற்படையினரின் பீரங்கிகள் பொருத்தப்பட்ட இரண்டு விசைப்படகுகள் குமுதினிப் படகினை அண்மித்த போது அதில் பயணித்த மக்கள் அச்சம் கொள்ளத் தொடங்கினர். அவ்விரண்டு விசைப்படகுகளில் கடற்படையினர் தங்களுடன் கோடரி, கத்தி, அரிவாள் போன்ற கூரிய ஆயுதங்களையும் எடுத்து வந்திருந்தனர். இதைப் பார்த்த மக்கள் செய்வதறியாது கதறி அழுதார்கள். வந்த கடற்படையினர் குமுதினிப் படகினுள் இருந்த மூன்ற மாதக் குழந்தை உட்பட அனைத்துப் பயணிகளையும் ஒவ்வொருவராகக் கீழ்தளத்திற்கு அழைத்து மற்றவர்கள் அறியாமல் தாங்கள் எடுத்து வந்த கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொன்றனர். இத்தாக்குதலில் நாற்பத்திரண்டிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமது அங்கங்களை இழந்தார்கள். அவர்கள் அனைவரும் மாலை கரையொதுங்கிய குமுதினிப் படகிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்






செல்லப்பட்டார்கள் சம்பவம் தொடர்பாக நெடுந்தீவைச் சேர்ந்த எஸ். புஸ்பராணி தெரிவிக்கையில்,

“அநுரதபுரத்தில் நடைபெற்ற கொடூரச் சம்பவத்திற்குப் பதிலடியாகவே இக் குமுதினிப் படுகொலை நடைபெற்றது. இதில் பலர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். இதில் எனது உறவினர் பலர் இறந்துள்ளனர். இச் சம்பவத்தில் நான் வெட்டிக் காயப் படுத்தப்பட்டேன். கர்பிணித் தாய்மாரைத் தாக்கும் போது வயிற்றிலுள்ள குழந்தை “கொட்டியா”என்ற கூறித் தாக்கினார்கள். பெண்கள், குழந்தைகள் என்ற பாகுபாடின்றி பலர் தாக்கப் பட்டனர்”.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

1. பசுபதி நிர்மலாதேவி, 20, -
2. கந்தையா சதாசிவம், 26, ஆசிரியர்
3. ஜேசுதாசன், 46, கடற்தொழில்
4. மாரியம்மா, - , -
5. ஆ.கனகலிங்கம், 34, கடற்தொழில்
6. தில்லைநாதன், 32, கடற்தொழில்
7. ஞானப்பிரகாசம் மரியமாணிக்கம், 45, கடற்தொழில்
8. சடையர் கோவிந்தன், 46, கடற்தொழில்
9. செபமாலை அந்தோனிப்பிள்ளை, 45, கடற்தொழில்
10. செபமாலை கிருக்ஷ்டி, 24, -
11. நிமிலி, 18, -
12. அனுக்ஷியா, 23, -
13. பேர்ணாட் கிறார் பூரணம், -
14. வெ.கந்தையா, 44, கடற்தொழில்
15. செ.சந்திரகுமார், 30, கடற்தொழில்
16. தருமலிங்கம் பாபு, 13, -
17. குமாரசாமி விநாயகம், 38, கடற்தொழில்
18. சபாபதி தெய்வானை, 68, கடற்தொழில்
19. ஞானப்பிரகாசம் தேவசகாயம், 42, கடற்தொழில்
20. வைத்திலிங்கம் சதாசிவம், 45, கடற்தொழில்
21. இராமன் முருகன், 52, கடற்தொழில்
22. கரையூர் சின்னையா, 35, அரச ஊழியர்
23. முத்தன் மணிவண்ணன் , 13, -
24. றொகேசியன் சந்திரகுமார், 18, மாணவன்
25. தொப்பை நாகேந்திரம், 23, -
26. சின்னவன் அந்தோனி, 65, -
27. இராமநாதன், 16, -
28. வேலுப்பிள்ளை புஸ்பராசா, 22, -
29. ஞானசேகரம், 28, தபால்அதிபர்
30. விசுவலிங்கம் சுபாஜினி, 07 மாதம், -
31. கனகம்மா, 55, கடற்தொழில்
32. பழனி மோகநாதன், 27, கடற்தொழில்
33. தர்மலிங்கம் அமிர்தலிங்கம், 18, -
34. பசுபதி நிர்மலாதேவி, 19, மாணவி
35. நவசிவாயம் கந்தையா, 45, ..போ.ச ஓட்டுநர்
36. இராமலிங்கம் பரலோகநாதன், 35, கமம்
37. கார்த்திகேசு, 45, -
38. க.பார்வதிப்பிள்ளை, 40, -
39. சி.நாகேந்திரன், 32, கடற்தொழில்
40. குசலகுமாரி, 28, -
41. சாந்தலிங்கம், - , -
42. ஞா.சரோஜாதேவி, 24, ஆசிரியர்



# பெரியபுல்லுமலை படுகொலை – 20 மே 1980

புல்லுமலைக் கிராமமானது, செங்கலடி-மகாஓயா வீதியில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் புல்லுமலைக் கிராமம் பல இன்னல்களைச் சந்தித்தது. நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய இந்துக் குருக்கள் ஒருவர் கொல்லப்பட்டார். 1980ம் ஆண்டு மே மாதம் இருபதாம் திகதி இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் ஒன்று சேர்ந்து புல்லுமலையிலுள்ள கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து எரியூட்டினர். இச் சம்பவத்தின் போது கேணல் வீரதுங்கவினால் இருபத்தைந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புக்கென அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் கொடுவாமடுவில் வைத்துக் கொலைசெய்யப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு எட்டாம் திகதி அக்கிராமத்திலிருந்த இராணுவத்தினரும், மகாஓயாவிலிருந்து முந்நூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் அக்கிராம மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் போது பதினெட்டுப் பொதுமக்கள் நிரலில் நிறுத்தி வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முத்தையா உட்பட ஐம்பத்தொரு பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற்போயினர். பலர் குடும்பங்களாகக் கொல்லப்பட்டனர்.

நாகலிங்கம் இராஜரட்ணம் என்பவரின் எட்டு மாதக் குழந்தை, நான்கு சிறுவர்கள், அவரின் மனைவி என்பவர்கள் உயிரிழந்தனர். சிறுவர்கள் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு உயிரிழந்தனர். பீற்றர் லக்ஸ்மி என்பவரின் வீட்டில் ஒரு குழந்தை தவிர அனைவருமே கொல்லப்பட்டனர். கந்தசாமி என்பவரும் அவரது மனைவியான ஒரு சிங்களவரும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர். இங்கு தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் தனிப்பட்ட முறையில் தெரிந்த இருவரை மட்டும் தப்பியோடும்படி விட்டுவிட்டனர். அவ்வாறு தப்பியவர்கள் செங்கலடியை வந்தடைந்தனர். 1986.11.10 அன்று மூன்று மாத குழந்தை, பெண்கள், இருபத்து மூன்று ஆண்கள் என இராணுவத்தினரின் நடவடிக்கையால் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரழந்த ஆறு பெண்களில் இருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். கைது செய்து காணாமற் போனோரில் இருபத்துநான்கு பேர் அடங்குகின்றனர். இத்தாக்குதலை நடாத்திய இராணுவத்தினரை அடையாளம் காண்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அடையாள அணி வகுப்பு பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# தோணிதட்டாமடு படுகொலை – 27 மே 1987

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தோணி தட்டாமடு என்னும் கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தின் எல்லைக் கிராமங்களாகச் சிங்களக் கிராமங்கள் அமைந்துள்ளது. இயற்கை வளம் மிகுந்த இக்கிராம மக்கள் தமக்கான தனித்துவமான கலை, கலாச்சார, முறைகளையும் பாதுகாத்து சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். குறிப்பாக அயல் சிங்கள கிராமத்திலேயே தமது அத்தியாவசிய தேவைப பொருட்களைக் கொள்வனவு செய்து வந்தார்கள்.

25.05.1987 அங்கு வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோணிதட்டாமடு மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் அச்சமடைந்த மக்கள் வீடுகளிற்குள் பதுங்கிக் கொண்டனர்.

பின்னர் 27.05.1987 அன்று இரவு இரண்டு மணியளவில் இக்கிராமத்தை சுற்றிவளைத்து உள் நுழைந்த இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று சுட்டும் வெட்டியும் மக்களைப் படுகொலை செய்தனர். இச்சம்பவத்தில் பதின் மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் செல்வீச்சு – 29 மே 1987

யாழ் மாவட்டத்தில் கரவெட்டிப் பிரதேசத்தில் அல்வாய்க் கிராமம் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் இருநூற்றைம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்தது. விவசாயக் குடம்பத்தை சேர்ந்த வள்ளிநாச்சியார் என்பவர் இந்தியாவிலிருந்து தருவித்த கருங் கற்சிலையைத் தனக்குச் சொந்தமான வேவிலந்தை என்ற காணியில் வைத்து வழி பட்டு வந்தார். ஆரம்பகாலத்தில் அச்சிலையை வழிபட்டு வந்த மக்கள் காலப்போக்கில் பெரிய ஆலயமாகக் கட்டினார்கள். வீதியின் முன்பாக பெரு விருட்ச மரங்கள் காணப்படுவதோடு, வடமராட்சிப் பகுதியில் இந்துக்களின் பிரசித்தமான ஆலயங்களில் இதுவும் ஒன்றாகவுள்ளது.

1987 மே இருபத்தாறாம் நாள் சிறீலங்கா இராணுவத்தினர் வடமராட்சிப் பகுதி மீது கூட்டுப்படைத் தளபதி சிறில் ரணதுங்க மற்றும் இராணுவ அதிகாரிகளான லலித் கொத்தலாவல, கொப்பேகடுவ போன்றோர் தலைமையில் ஒப்பிரேசன் லிபரேசன் என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். பலாலி இராணுவத் தளத்திலிருந்து எறிகணை வீச்சு, கடற்தாக்குதல், ஆகாய தாக்குதல் என மும்முனைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை உலங்கு வானூர்தி மூலம் துண்டுப்பிரசுரங்களைப் போட்டதுடன், பலாலியிலிருந்து ஒலிபரப்புச் செய்யப்பட்ட வானொலிச் சேவை மூலமும் மக்களைப் பாதுகாப்பாக ஆலயங்களில் இருக்கும்படி இராணுவத்தினர் அறிவித்தார்கள்.

29.05.1987 அன்று இராணுவத்தின் இந்த அறிவிப்புகளைச் செவிமடுத்த மக்கள் அச்சமடைந்து, கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு முத்துமாரியம்மன் கோயிலில் பாதுகாப்புக்காகத் தஞ்சமடைந்தனர். இதில் அல்வாய்க் கிராமத்தை சேர்ந்தவர்கள் மட்டுமன்றி இன்பருட்டி, திக்கம், வதிரி, நெல்லியடி, தம்பசிட்டி, புலோலி, கரவெட்டி ஆகிய இடங்களிலிருந்தும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இவ் அம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர். ஆலயம் பெரிய ஆலயமாகவும், விசாலாமான வீதிகள், பெரிய மர நிழல்கள் கொண்டிருந்தமையாலும் அத்தனை மக்களும் அங்கு தங்கக் கூடியதாக இருந்தது.

29.05.1987 அன்றையதினம் மாலை 7 மணிக்கு அம்மன் கோயில் உள்மண்டபம் மக்களால் நிறைந்திருந்தது. இரவு 9.00 மணியளவில் வெளிவீதி எங்கும் ஒரே மக்கள் கூட்டம். இரவு 11.00மணியளவில் இராணுவத்தினரால் வீசப்பட்ட எறிகணை ஆலயத்தின் முன்னுள்ள வேப்பமரத்தில் வீழ்ந்து வெடித்தது. இதில் சிலருக்குக் காயம் ஏற்பட்டது. அடுத்த எறிகணை உள்மண்டபத்தில் கொடிக் கம்பத்தின் அருகில் வீழ்ந்து வெடித்ததில் அங்கிருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து வந்த எறிகணை வசந்த மண்டபத்தில் வீழ்ந்ததினால் அவ்விடத்திலிருந்த இளைஞர்கள் உயிரிழந்தார்கள். இவ்வாறு மூன்று எறிகணைகள் ஆலயத்தில் வீழ்ந்து வெடித்ததால், ஆலயத்தில் ஒரே அவலக்குரல் எழுந்தது.

அச்சமடைந்ததால் பாதுகாப்பைத் தேடிய மக்கள் நான்கு திசைகளிலும் சிதறி ஓடினார்கள். ஆலயம் இரத்த வெள்ளமானது. இதில் யார் யார் உயிரிழந்தார்கள் என்று அடையாளம் காண முடியாதளவிற்கு உடல்கள் சிதைந்திருந்தன. இராணுவத்தின் அறிவுறுத்தலின்படி பாதுகாப்பைத் தேடி ஆலயத்தில் தஞ்சமடைந்த பொதுமக்களில் நாற்பது பேர் வரை எறிகணை வீச்சில் உயிரிழந்தார்கள். இருபத்திரண்டு பேர் வரை காயமடைந் தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இரத்தினம் மாணிக்கம் வீட்டுப்பணி 65
02. நாகமுத்து சோதிலிங்கம் கடற்தொழில் 63
03. நற்குணம் சந்திரசேகரம் மாணவன் 08
04. க.சட்டநாதன் கமம் 54
05. கந்தர் மார்க்கண்டு தொழிலாளி 67
06. கதிர்காமு கிட்ணபிள்ளை வியாபாரம் 61
07. கதிர்காமத்தம்பி யோகானந்தன் மாணவன் 12
08. கதிர்காமத்தம்பி செல்வானந்தன் மாணவன் 14
09. கதிரித்தம்பி வள்ளிப்பிள்ளை 77
10. குமாரன் நல்லதம்பி தொழிலாளி 60
11. கணேஸ் அம்பிகாபதி 48
12. கணேசபதி சதாகரன் கமம் 16



13. கணபதிப்பிள்ளை சின்னத்துரை கமம் 60
14. கணபதிப்பிள்ளை சிவகாமி 69
15. பிறேமானந்தராசா தொழிலாளி 27
16. பஞ்சாட்சரம் தர்மகுலராசா கமம் 28
17. துரைசிங்கம் கலாவதி 26
18. தம்பிஜயா றமணன் மாணவன் 18
19. தங்கமயில் சுஜாதா மாணவி 16
20. தவராசசிங்கம் கமலேஸ்வரி 38
21. தவராசசிங்கம் அனுபாமா மாணவி 06
22. தணிகாசலம் தர்மேந்திரம் மாணவன் 08
23. மார்க்கண்டு நகுலேஸ்வரன் தொழிலாளி -34
24. மார்க்கண்டு செல்லம்மா கைப்பணி 58
25. மாசிலாமணி சுதன் குழந்தை 01
26. மாணிக்கம் உசாராணி குழந்தை 03
27. மாணிக்கம் நாகேந்திரராஜா மாணவன் - 13
28. மாணிக்கம் மல்லிகாதேவி வீட்டுப்பணி 41
29. யோகராசா ரதி 2.5
30. செல்லையா நாகம்மா வீட்டுப்பணி 50
31. சி.மாணிக்கம் தொழிலாளி 57
32. சிவனடி இராமநாதன் வைத்திய ஊழியர் - 22
33. சிவலிங்கம் அன்னம்மா வீட்டுப்பணி 65
34. சண்முகம் பூலோகநாதன் மாணவன் 16
35. வ.மாரிமுத்து தொழிலாளி 54
36. விசுவலிங்கம் இராசகோபால் விவசாயம் 30
37. ரவீந்திரன் செல்லமணி வீட்டுப்பணி 30

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இ.குணசேகரன் மாணவன் 12
02. நகுலன் மாணவன் 06
03. கு.இராசலிங்கம் கடற்தொழில் 51
04. க.குணரட்னம் வீ.பணி 32
05. கந்தையா கலைமதி மாணவி 06
06. குலநாயகம் விஜயசோதி வீட்டுப்பணி 35
07. தம்பிஜயா புவனேஸ்வரி வீட்டுப்பணி 46
08. ம.வேல்மணி தொழிலாளி 32
09. மாணிக்கம் யோகராணி வீட்டு வேலை 17
10. மாணிக்கம் சுவேந்திரராஜா மாணவன் - 05
11. ஆழ்வாப்பிள்ளை இராஜமலர் மாணவி 09
12. ஆழ்வாப்பிள்ளை சரச்சந்திரன் மாணவன் -13
13. ஜெனார்த்தனன் மாணவன் 07
14. வே.இந்திரராணி வீ.பணி 30
15. வேலுப்பிள்ளை தம்பிஜயா குருதி பரிசோதகர் 46
16. சு.கந்தசாமி தபாலதிபர் 54
17. ச.கண்ணதாசன் மாணவன் 08
18. சு.செல்வதி வீ.பணி 24
19. சு.செல்வராசா மாணவன் 06
20. ச.சண்முகதாசன் மாணவன் 10
21. சி.வசந்தாதேவி வீ.பணி 38
22. விக்கினேஸ்வரன் இந்திராணி வீட்டுவேலை 21

# வற்றாப்பளைப் படுகொலை – 18 மே 1992

வடகிழக்கு மாகாணத்திலேயே சைவ மக்கள் மத்தியில் புகழ்பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் ஓரத்தில் அமைந்துள்ளது. ஆண்டு தோறும் வைகாசியில் வருகின்ற பூரணை தினத்தன்று பொங்கல் நிகழ்வு சிறப்புற நடைபெறுவதும், அதில் சிறீலங்காவின் பல பாகங்களிலிருந்தும் இலட்சக் கணக்கான பக்தர்கள் வந்து பொங்கலைச் சிறப்பிப்பதும் வழக்கமாக இருந்த காலத்தில் 1990ஆம் ஆண்டிலிருந்து இராணுவ அச்சுறுத்தல் காரணமாக குறிப்பிட்ட ஒரு தொகைப் பக்தர்களைக் கொண்டே வருடாந்தப் பொங்கல் நிகழ்வு நடைபெறலாயிற்று.

வழமைபோல 18.05.1992 அன்று வற்றாபபளைப் பொங்கல்தினம். சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர் உச்சிக்காலப் பூசை நடை பெற்றுக் கொண்டிருந்த பி.ப 12:45 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் பத்துப் பொதுமக்கள் அவ் விடத்திலேயே உடல் சிதைக்கப்பட்டு உயிரிழந்ததுடன், ஏனைய ஐந்து பேர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார்கள் அறுபது பேர் வரை காயமடைந்தார்கள்.

இத்தாக்குதலில் கணவரையிழந்த யோகேஸ்வரி சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கையில்,
“வற்றாப்பளை அம்மன் ஆலயப் பொங்கற் திருவிழா நேரத்தில் காவடிகளை வைத்து வாடகைக்கு வழங்கி வந்தோம். வழமை போல் அன்றும் கணவரும் மகனும் காவடி எடுக்கும் இடத்திலும் நானும் மற்றப்பிள்ளைகளும் கோயிலுக்கு உட்புறத்திலும் நின்றிருந்தோம். அந்த வேளைதான் சிறீலங்கா இராணுவம் முல்லைத்தீவு முகாமிலிருந்து எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டது. ஓடிச் சென்று பார்க்கும்போது உடல் முழுதும் காயங்களுடன் மகனைக் கிடத்தி யிருந்தார்கள். மகனுடன் அழுதுகொண்டிருக்கும் போது தகப்பனைத் துாக்கிக்கொண்டு வந்தார்கள். தகப்பன் இறந்துவிட்டதால் அழுது புலம்பத்தான் முடிந்தது. அப்படியே நானும் மயக்கமுற்று விழுந்துவிட்டேன். கணவர் இறக்கும்போது மூன்று மாதக் கர்ப்பிணியாகவும் மூன்று பிள்ளைகளின் தாயாகவும் இருந்தேன். எல்லோரும் சின்னப் பிள்ளைகள். சரியாகக் கஸ்ரப்பட்டுத் தான் பிள்ளைகளை வளர்த்தேன். தகப்பனின் காவடித் தொழிலையும் விடாமல் கூலி வேலை செய்து சீவித்து வருகின்றோம். பிள்ளைகளும் வளர வளர செலவுகளும் அதிகரித்துக்கொண்டே போகின்றது. தற்போதுகூட சரியான கஸ்ரத்தின் மத்தியிற் சீவிக்கின்றோம்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. நவரத்தினசாமி யுவராசினி மாணவி –
02. நவரத்தினசாமி சிவசேகரம் – –
03. நவரட்ணம் இந்துஜா மாணவர் 12
04. நவரட்ணம் சிவனேசம் வீட்டுப்பணி 32
05. நவரட்ணம் ராஜிதா மாணவர் 10
06. குழந்தைவேலு ஜெகதீஸ்வரன் தொழிலாளி –



07. குழந்தைவடிவேல் ஜெகதீஸ்வரன் விவசாயம் 24
08. கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் மாணவர் 17
09. தம்பிராசா சிறீஸ்கந்தராசா விவசாயம் 33
10. மரியபிரகாசம் அந்தோனி தனியார் தொழில் 35
11. யோகராசா வதனி வீட்டுப்பணி 19
12. சதாசிவம் நவரட்ணம் கடற்தொழில் 36
13. சிறிஸ்கந்தராசா மாணவர் 09
14. சண்முகலிங்கம் - 42

காயமடைந்த்தவர்க்களின் விபரம் (இல பெயர் தொழில் வயது)

01. இந்துஜா மாணவி 06
02. ஈஸ்வரன் - 21
03. கனகேஸ்வரன் - 20
04. கார்த்திகேசு நித்தியராசா - 18
05. குமாரசாமி கணேசசுந்தரம் - 16
06. கணேசலிங்கம் புனிதா குழந்தை 03
07. முருகையா - 24
08. நேசம் - 32
09. வெற்றிவேலு மதிவதனம் - 13
10. றெஜித் - 27
11. சாந்தினிதேவி - 16
12. சண்முகலிங்கம் சந்திரசேகர் - 16
13. வடிவேலு - 40
14. விஜயரட்ணம் மாணவன் 07

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# புல்லுமலை படுகொலை – 1986 ... 1990

புல்லுமலைக் கிராமமானது, செங்கலடி-மகாஓயா வீதியில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் புல்லுமலைக் கிராமம் பல இன்னல்களைச் சந்தித்தது. நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய இந்துக் குருக்கள் ஒருவர் கொல்லப்பட்டார்.

20.05.1980அன்று இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் ஒன்று சேர்ந்து புல்லுமலையிலுள்ள கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து எரியூட்டினர். இச் சம்பவத்தின் போது கேணல் வீரதுங்கவினால் இருபத்தைந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புக்கென அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் கொடுவாமடுவில் வைத்துக் கொலை செய்யப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு எட்டாம் திகதி அக்கிராமத்திலிருந்த இராணுவத்தினரும், மகாஓயாவிலிருந்து வந்த முந்நூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் அக்கிராம மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் போது பதினெட்டுப் பொதுமக்கள் நிரலில் நிறுத்தி வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முத்தையா உட்பட ஐம்பத்தொரு பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற்போயினர். பலர் குடும்பங்களாகக் கொல்லப்பட்டனர்.

நாகலிங்கம் இராஜரட்ணம் என்பவரின் எட்டு மாதக் குழந்தை, நான்கு சிறுவர்கள், அவரின் மனைவி என்பவர்கள் உயிரிழந்தனர். சிறுவர்கள் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு உயிரிழந்தனர். பீற்றர் லக்ஸ்மி என்பவரின் வீட்டில் ஒரு குழந்தை தவிர அனைவருமே கொல்லப்பட்டனர். கந்தசாமி என்பவரும் அவரது மனைவியான ஒரு சிங்களவரும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர். இங்கு தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் தனிப்பட்ட முறையில் தெரிந்த இருவரை மட்டும் தப்பியோடும்படி விட்டுவிட்டனர்.

அவ்வாறு தப்பியவர்கள் செங்கலடியை வந்தடைந்தனர். 10.11.1986 அன்று மூன்று மாத குழந்தை, பெண்கள், இருபத்து மூன்று ஆண்கள் என இராணுவத்தினரின் நடவடிக்கையால் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்த ஆறு பெண்களில் இருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். கைது செய்து காணாமற்போனோரில் இருபத்துநான்கு பேர் அடங்குகின்றனர். இத்தாக்குதலை நடாத்திய இராணுவத்தினரை அடையாளம் காண்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அடையாள அணி வகுப்பு பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# தெல்லிப்பளை ஆலயப் படுகொலை – 30 மே 1992

யாழ்ப்பாணத்தில் வலிகாமத்தின் வடக்குப் பகுதியிலுள்ள தெல்லிப்பளைப் பிரதேசத்தில் துர்க்காபுரம் எனும் கிராமம் அமைந்துள்ளது. இங்கு வரலாற்றுப் புகழ்மிக்க பல ஆண்டுகள் பழமைவாய்ந்த தெல்லிப்பளைத் துர்க்கையம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

பலாலி இராணுவத்தள விரிவாக்கத்திற்காக பலாலி முகாமை அண்மித்த பகுதிகள் மீது எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல் நடத்தியவாறு சிறீலங்கா இராணுவத்தினர் முன்னேறிப் படைமுகாமை விரிவாக்கினார்கள். இவ்விராணுவ நடவடிக்கைக்கு அஞ்சிய வசாவிளான், குரும்பசிட்டி, தையிட்டி, மயிலிட்டிப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்தார்கள். இவர்களில் பல குடும்பங்கள் அகதிகளாக தெல்லிப்பளை துர்க்கை யம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்ததுடன், ஆலயத்தில் வெள்ளைக்கொடியையும் பறக்கவிட்டனர்.

30.05.1992 நண்பகல் 12 மணியளவில் விமானப்படையின் இரண்டு “அவ்ரோ” விமானங்கள் மக்கள் தங்கியிருந்த ஆலயம் மீது ஐந்திற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியது. அதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட மொத்தம் ஐவர் உயிரிழந்தனர். பத்திற்கும் அதிகமானோர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள். ஆலயத்தின் கோபுரம், பொங்கல் மண்டபம், வசந்த மண்டபம், ஆலய சுற்றாடலிலுள்ள வீடுகளெனப் பல கட்டடங்கள் பலத்த சேதத்திற்குள்ளானது. மீண்டும் இராணுவத்தினர் 1993ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஆலய வருடாந்த மகோட்சவ காலப்பகுதியில் சப்பறத் திருவிழா அன்று, பக்தர்கள் கூடியிருந்த வேளை காலை 10.00 மணியளவில் ஆலயப் பகுதிநோக்கி பலாலியிலிருந்து எறிகணை வீச்சினை நடத்தினர். அதேநேரம் விமானப் படை விமானத்தாக்குதலை நடாத்தியது.

இத்தாக்குதல்களில் ஒரு பக்தரும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் தங்கியிருந்த யுவதி, அருகிலுள்ள வீடுகளில் தஞ்சம் புகுந்த ஆசிரியர்களென ஐந்து பேர் உயிரிழந்தார்கள். ஐந்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆலயப்பகுதி மீண்டும் பலத்த சேதத்திற்கு உள்ளானது. அன்றையதினம் பலாலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சினால் ஆலய அன்னதான மண்டபத்தில் சமையலில் ஈடுபட்டவர்களில் ஒருவர் உயிரிழந்ததுடன், மூன்று பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசதுரை மனோகரன் சுருட்டு வேலை - 28
02. ஜயம்பிள்ளை மகேந்திரன் கூலி 31
03. கந்தையா இளையதம்பி ஓய்வூதியர் 65
04. பத்மநாதன் மயூரன் மாணவன் 22
05. வைத்தியலிங்கம் வசீகரா வர்ணம் பூசுபவர் 23
06. செல்லத்துரை செல்வகாந்தராசா - 32
07. வேலாயுதம் நந்தகுமார் மாணவன் 11
08. வேலாயுதம் வினோதகுமார் குழந்தை 1
09. சுப்பிரமணியம் கனகராணி விற்பனையாளர் 38
10. சின்னக்குட்டி காசிப்பிள்ளை கமம் 71

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள்

# தம்பிராய் சந்தை குண்டுவீச்சு – 17 மே 1996

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கே இருபது கி.மீ. தூரத்தில் பூநகரி அமைந்துள்ளது. பூநகரிப் பிரதேசத்திற் காணப்படுகினற் வயலும் வயல் சார்ந்த ஒரு சிறிய கிராமம் தம்பிராய் கிராமம் ஆகும். இங்குள்ளவர்களின் பிரதானதொழில் விவசாயமாகும்.

1996ஆம் ஆண்டு ஏ -9 பிரதான வீதியை மையமாகக் கொண்ட இராணுவ நடவடிக்கை நடைபெற்ற காலப்பகுதியாகும். அக்காலப் பகுதியில் 1996 மே பதினேழாம் திகதி காலை பூநகரி தம்பிராய்ப்பகுதி மக்கள் மீது முற்பகல் பத்து மணியளவில் பூநகரி வான் பரபப்பினுள் வந்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு “கிபீர்” விமானங்கள் பல தடவைகள் வானில் வட்டமிட்டன. இதனால் தம்பிராய்ச் சந்தையில் நின்ற மக்கள் அச்சத்தினால் அங்கு மிங்கும் ஓடினார்கள், இவர்களில் சிலர் ஒரு பனங்கூடலினுள் பாதுகாப்பு தேடி ஒழிந்து கொண்டார்கள். கிபீர் விமானங்கள் வீசிய குண்டுகள் பனங்கூடலினுள்ளும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் விழுந்து வெடித்ததால், ஐந்து பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகியதுடன், ஒன்பது பேர் காயமடைந்தார்கள். மேலும் படுகாயமடைந்தவர்களில் இரண்டு பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட தம்ப்பிராயைச் சேர்ந்த சூசைப்பிள்ளை பிரான்சிஸ்சின் மனைவியான றீட்டம்ம்மா சம்பவத்தைப் பற்றி குறிப்பிடுகையில்,

“1996ஆம் ஆண்டு மே மாதம் பதினேழாம் திகதி வெள்ளிக்கிழமை என்னுடைய நான்கு பிள்ளைகளில் மூவர்பாடசாலைக்குச் சென்ற நிலையில் கடைசிப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு எமது தோட்டத்திற்குப் போனேன். என்னுடைய கணவர் பொருட்கள் வாங்குவதற்காக தம்பிராய்ச் சந்திக்குப் போயிருந்தார். அந்தவேளை வானில் வந்த குண்டுவீச்சு விமானங்கள் தம்பிராய் சந்தியிற் குண்டுகளைப் போட்டன. உடனே கணவர் மற்றும் பிள்ளைகளுக்கு ஏதாவது நடந்திருக்குமோ என்று அஞ்சினேன். அயலவர்கள் வந்து தேற்றிய போதும் எனது பிள்ளையையும் கூட்டிக் கொண்டு சம்பவ இடத்திற்குப் போய்ப் பார்த்த வேளை எனது கணவரின் உடல் முழுதும் குண்டுச் சன்னங்கள் துளைத்த நிலையில் சடலமாக இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. அதைப் பார்த்த நான் என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் மயக்கமடைந்து விழுந்து விட்டேன். பின்னர் என்னையும் எனது கணவரையும் என்னுடைய அண்ணா வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள். அதன் பின்னர் கணவரை அடக்கம் செய்தோம். இந்தக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் எனது கணவர் உட்பட ஐந்து பேர் அவ்விடத்திலேயே கொல்லப் பட்டார்கள் என்பதுடன், மற்றும் ஒன்பது பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் இருவர் பின்னர் இறந்து விட்டனர். பாதிக்கப் பட்ட அனைவரும் எங்களைப் போன்று வறுமையான குடம்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைப்பிள்ளை பிரான்சிஸ் சீவற்தொழில் -
02. இரத்தினம் பாலச்சந்திரன் கமம் 29
03. கந்தையா தேவராசா கமம் -
04. தங்கவேலு ரவிச்சந்திரன் சீவல் 34
05. அப்புத்துரை சௌந்தராஜன் சீவல் 35
06. சின்னத்துரை கேதீஸ்வரன் கமம் 29
07. வீரகத்தி அலிஸ்ரின் கடற்தொழில் 28

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. துரைசாமி. தொழிலாளி 75
02. பொன்னம்பலம் - -
03. செல்லையா பூரணம் வியாபாரி 60
04. சந்திரபாலு ஈஸ்வரன் முகாமையாளர் 24

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பூநகரியில் சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கி எறிகணைத் தாக்குதலில் மாணவர் படுகொலை 16 மே 2007

பூநகரியில் (பூநகரி) செவ்வாய்க்கிழமை நண்பகல் சிறீலங்கா இராணுவம் (எஸ்.எல்.ஏ) பீரங்கி எறிகணைகளை வீசியதில் 17 வயது சிறுவன் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார் மற்றும் அவனது தந்தை காயமடைந்தார்.

கிளி. பூநகரி ஸ்ரீ வித்தியாலயத்தில் கல்வி கற்கும் கனகரட்ணம் மோகன்ராஜ் என்ற மாணவனின் சடலமே செவ்வாய்க்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது.

பூநகரி நான்காம் மைல் பகுதியில் உள்ள சிவிலியன் குடியேற்றத்தின் மீது சிறீலங்கா இராணுவத்தினர் எறிகணைகள் வீசிய போது திரு. மோகன்ராஜ் மதிய உணவு இடை வேளைக்காக வீட்டுக்குச் சென்றிருந்தார்.





# திருமுறிகண்டி கிளைமோர்த்தாக்குதல் 23 மே 2008

கிளிநொச்சி இரணைமடு பாரதிபுரம், மலையாளபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் 23.05.2008 அன்று ஹைஎஸ் வாகனம் ஒன்றில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உறவினர் ஒருவரைப் பார்வையிட்டுவிட்டு தமது வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். வாகனத்தில் பல சிறவர்களும் பயணித்துக் கொண்டிருந்தனர். அவ்வேளை பிற்பகல் 2மணியளவில் திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் நோக்கிச் செல்லும் வழியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அவர்களின் வாகனம் மீது சிறீ லங்கா ஆழ ஊடுருவும் அணியினர் கிளை மோர்த்தாக்குதலினை மேற்கொண்டனர்.

இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 05பேர் உட்பட 15 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் நால்வர் சிறுவர்கள். படுகாயமடைந்த மூன்று பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்திசயாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் மேலும் ஒரு சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார். இச்சம் பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான குடும்பநிலமையைப் பார்த்தால் மிகவும் பரிதாப நிலைமையை உணரமுடியும்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பெரியசாமி விஜயரட்ணம், 40
02. விஜயரட்ணம் லோகநந்தா, 39
03. விஜயரட்ணம் சிவகலா, 16
04. விஜயரட்ணம் தனு, 09
05. விஜயரட்ணம் விதுசன், 07
06. பன்னீர்ச்செல்வம் அழகுராணி, 42
07. கணேசன் தனராஜ், 34
08. சந்திரசேகரன் கீர்த்திகா, 10
09. சாமிக்கண்ணு கறுப்பையா, 40
10. கறுப்பையா அன்னலட்சுமி, 40
11. அழகன் சுப்பிரமணியம், 40
12. சுப்பிரமணியம் சரஸ்வதி, 40
13. செல்வராசா கலாதேவி, 34
14. சுப்பிரமணியம் தனலட்சுமி, 54
15. சந்திரசேகரம் கார்த்திகா, 10
16. இராஜேந்திரம் கலாவள்ளி, 29

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



























# வடமராட்சி கிழக்கில் சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சில் இருவர் படுகொலை 23.05.2008

கிளிநொச்சியிலிருந்து வடகிழக்கே 21 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சுண்டிக்குளம் கல்பாடு என்ற இடத்தில் உள்ள சிவிலியன் குடியிருப்பு மீது சிறீலங்கா விமானப்படையினர் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் தாக்குதல் நடத்தியதில் 14 வயது சிறுமியும் 3 வயது குழந்தையும் உயிரிழந்தனர். தாக்குதலில் ஒரு பெண் காயமடைந்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள்.

03 வயதான ஆர்.விஜித் மற்றும் 14 வயதான பி.கயல்விழி ஆகிய இருவருமே விமானப் படையின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

ரவிச்சந்திரன் மகாலட்சுமி (29) என்பவர் படுகாயமடைந்தார்.



# பல்லாயிரம் மக்கள் மருந்தின்றி இறப்பு – 16 மே 2009

2,000 முதல் 3,000 வரையிலான எண்ணிக் கையில் இறந்தவர்களின் உடல்கள் பொது மக்கள் நெரிசல் மிகுந்த பகுதிகளில் எல்லா இடங்களிலும் கிடக்கின்றன, மேலும் பொது மக்கள் அனைவரும் இறந்த உடல்களின் கடுமையான துர்நாற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த தன்னார்வ மருத்துவர் கூறினார்.



"சிறீலங்கா இராணுவம் இலக்கு வைக்கப்பட்ட தாக்குதல்களால் அனைத்து மருத்துவ வசதிகளையும் அழித்துவிட்டது, மேலும் சிறீலங்கா இராணுவம் ஆனது மனிதாபிமானமற்ற மற்றும் கண்மூடித்தனமான தாக்குதல்களை பொதுமக்கள் மீதான மரணம் அல்லது சரணடைதல் ஆகிய இரண்டே வழிகளை மட்டுமே வழங்கி வருகிறது" என்று அவர் மேலும் கூறினார்.

தன்னார்வ மருத்துவரே சனிக்கிழமை காலை 100 க்கும் மேற்பட்ட இறப்புகளைக் கண்டார். அனைத்து அரசு மருத்துவர்களும் உயர் அதிகாரிகளும் ஷெல் தாக்குதலில் இருந்து தப்பி ஓடிவிட்டனர்.

"காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க தொடர்ந்து பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களில் இருந்து எங்களுக்கு இடை நிறுத்தம் தேவை. பலத்த காயம் அடைந்தவர்களை மருத்துவ கவனிப்பின்றி இறக்க அனுமதிக்கப்படும் வெளிப்புற மருத்துவக் குழுவின் தீவிர தேவை உள்ளது," என்று தன்னார்வ மருத்துவர் தமிழ்நெட் மூலம் தெரிவித்தார். செயற்கைக்கோள் தொலைபேசி.

"அனைத்திற்கும் மேலாக, காயமடைந்தவர்களுக்கும் எஞ்சியிருக்கும் பொதுமக்களுக்கும் அவசரமாக உணவு மற்றும் தண்ணீர் தேவை. பதுங்கு குழிகளுக்குள் உணவு இல்லாமல் மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள்."

இதேவேளை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளர்களான சிரேஷ்ட வைத்தியர்களான டி.சத்தியமூர்த்தி மற்றும் எஸ்.வரதராஜா மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் கே.பார்த்தீபன் ஆகியோர் சிறீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.







**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**





# 25, 000 மேல் காயம் பட்ட பொது மக்கள் சிகிச்சை இன்றி உயிரிழப்பு – 17.05.2009

சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலில் காயமடைந்த சுமார் 25,000 பொதுமக்கள் தற்போது மருத்துவ சிகிச்சை பெறாமல் உயிரிழந்து வருவதாக விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஞாயிறு நண்பகல் தெரிவித்தார். வட்டுவாகல் அல்லது இரட்டை வாய்க்கால் ஊடாக காயமடைந்தவர்களை வெளியேற்றுமாறு திரு.பத்மநாதன் ஊடாக ஐ.சி.ஆர்.சி யிடம் புலிகள் பலமுறை கோரிக்கை விடுத்தும், அதற்கு ஐ.சி. 2 சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்குள், எல்லா இடங்களிலும் சடலங்கள் உள்ளன, மீதமுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் கொழும்பின் படைகளின் ஒவ்வொரு வகையான ஆயுதங்களையும் பயன்படுத்துவதற்கு மத்தியில் பதுங்கு குழிகளில் உள்ளனர். SLA ஆனது மக்களைத் தப்பியோட அனுமதிக்கவில்லை, ஆனால் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த விரும்புகிறது, சூசை கூறினார்.

என்ன நடக்கிறது என்று ஐசி கவலைப் படவில்லை. 25,000 பேரைத் தவிர இன்னும் பல ஆயிரக்கணக்கானோர் இப்போது காயமடைந்து கொல்லப்படுகிறார்கள். குறைந்த பட்சம் இப்போது செயல்பட்டால் அவர்களைக் காப்பாற்ற முடியும். மீட்புக்கான அறிகுறிகள் இருப்பதால் நாங்கள் தொடர்ந்து பாதுகாத்து வருகிறோம், என்றார்.

இதற்கிடையில், வன்னியில் இருந்து வரும் சமீபத்திய தகவல்கள், பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் SLA யால் பிடிக்கப்பட்டதாகவும், ஆனால் முதலில் அவர்கள் மீது எதேச்சையாக துப்பாக்கிச் சூடு நடத்தியதன் பின்னரே, பலரின் மரணம் மற்றும் காயம் ஏற்பட்டது.

## 2009ல் தமிழ் மக்களின் தலையில் சிங்கள அரசால் போடப்பட்ட அழிவாயுதங்களின் தடயங்கள் தமிழீழ மண்ணில் இவைகள். உலகம் இன்னும் மவுனமாக ஏன் இருக்கிறது ? தமிழர்கள் என்றபடியாலா?










**வெடியகற்றும் பணியில் ஈடுபட்டவர்களால் எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் .**
**(இலங்கை இராணுவம் போரழில் பயன்படுத்திய தடைசெய்யப்பட்ட குண்டுகள் )**



**1.RBK – 500 V X 2.5RT** கொத்துக் குண்டு முல்லைத்தீவு.சாலை எனுமிடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது

Remnants of what appears to be an RBK-500 AO-2-5RT cluster bomb uncovered near Chalai,Sri Lanka. Photograph- Source



2.சுண்டிக்குளம் அருகில் காணப்படும் ஒரு வெடிக்காத ஏஓ 2.5RT கொத்து குண்டு

An image of what appears to be an unexploded AO-2.5RT cluster submunition found near Chundikulam.



3.சுண்டிக்குளத்தில் காணப்பட்ட இதே கிளஸ்டர் குண்டு ஜோர்ஜியா . சூடான் மற்றும் சிரியாவில் பயன்படுததபட்டதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

An image of what appears to be an unexploded AO-2.5RT cluster submunition found near Chundikulam.



**4. xU VX 2.5**RTகுண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் குழிதோண்டும் போது காணப்பட்டது.

An image of what appears to be an unexploded AO-2.5RT cluster submunition found near Chundikulam.








# மே 18

# 146,679

# ஈழத்தமிழர் படுகொலை

## சுவடுகள்...!



































# மே 18 – முள்ளிவாய்க்கால் சுவடுகள்...!

# 146,679 ஈழத்தமிழர் படுகொலை














Figure Two: Likely Craters in CZ, May 6, 2009



This image shows apparent impact craters in the CZ on May 6, 2009 (Lat: 9.32 N Long: 80.77 E).






















Figure 6-16. Six-mortar star formation.
























NO FIRE ZONE
THE KILLING FIELDS OF SRI LANKA

# முள்ளிவாய்க்கால்

## வலி சுமந்த பதிவுகள்...






# பிரிகேடியர் பால்ராஜ்

பாலசேகரம் கந்தையா

கொக்குத்தொடுவாய் - முல்லைத்தீவு

(27.11.1965-20.05.2008)

மாரடைப்புக் காரணமாக 20.05.2008 அன்று சாவடைந்தார்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்




# தமிழின அழிப்பின் நினைவாக மே 18 அன்று ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’ உண்போம்!









நீண்ட இனவழிப்புப் போரின் இறுதி கட்டத்தில் எம் தமிழ்மக்கள் குறுகிய நிலப்பரப்பில் முடக்கப்பட்டார்கள். செல்மழையும், துப்பாக்கிச்சூடும், விமானக்குண்டுத் தாக்குதல்களும் கொத்துக்கொத்தாய் கொண்டிருக்க உணவும் மருந்தும் ஆயுதமாக்கப்பட்ட நிலையில் உண்பதற்கு எதுவுமின்றி நாட்கணக்காக பட்டினி கிடந்து பதுங்குகுழி மக்களாக அவலப்பட்டார்கள். இந்நிலையில் அவர்களின் உயிர்காத்தது போராளிகள் வழங்கிய கஞ்சிதான்.

மாத்தளன், வலைஞன் மடம், முள்ளிவாய்க்கால் என அவலப் பயணம் நகர்ந்த போது பணக்காரன் ஏழை, படித்தவன் படிக்காதவன் என்ற எந்த வேறுபாடுமின்றி அவர்களின் உயிர்காத்த இடங்கள் தான் கஞ்சிக் கொட்டில்கள். ஆரம்பத்தில் பச்சையரிசி, சிறதளவு பால், சீனி என்பன சேர்த்து தயாரிக்கப்பட்ட இக்கஞ்சி நாளடைவில் வெறும் அரிசியும் உப்பும் கலந்த உப்புக்கஞ்சியாயிற்று.

இவ்வாறு இலட்சக்கணக்கான மக்களின் உயிர்காத்த இந்த கஞ்சியை “முள்ளிவாய்க்கால் கஞ்சி” என்ற பெயருடன் அந்த மாபெரும் அவலத்தின் நினைவை வருடாந்தம் உயிர்ப்பிக்கும் உணவாக்கி எமது சந்ததிக்கு கடத்த உலகத்தமிழர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

எவ்வாறு யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டபோது உண்ட பயண உணவை வருடாந்தம் உண்டு தம் நினைவுகளைத் தக்கவைத்து சீயோனுக்கு திரும்பினார்களோ அதுபோல் எம்மினத்தின் வீரமும் அவலமும் நிறைந்த ஒரு வரலாற்றுக்கட்டத்தை எம்மினத்தின் தேசிய இருப்பை தக்கவைக்கும் நினைவாக உயிர்ப்புடன் பேண வருடாந்தம் தமிழினவழிப்பு நினைவு நாளாகிய மே 18 இல் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை” உணர்வுமிகு உணவாக்குவோம்.

ஆகவே உலகெங்கும் வாழ் தமிழ் உறவுகளே!

- அன்றைய நாளில் எமது வீடுகளில் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை” ஒரு நேர உணவாக்குவோம். அதை உண்ணும் போது எமது தேசத்தின் வரலாற்றை எமது பிள்ளைகளுக்கு விளக்கி நினைவுகளை அடுத்த சந்ததிக்கு கடத்துவோம்!

- ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கஞ்சிக்கொட்டில் அமைத்து “முள்ளிவாய்க்கால் கஞ்சியை” அனைவருக்கும் வழங்கி உணர்வுகளைப்பகிர்ந்து கொள்வோம்!

நினைவுகளின் நீட்சியே தமிழினவழிப்பின் சாட்சி, இச்சாட்சியே எம்மக்களுக்கான மீட்சியின் வழியென உணர்ந்து உணர்வுபூர்வமாக இந்த நினைவேந்தலை முன்னெடுப்போம்.

இனவழிப்பின் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம் மே 18 இல் முள்ளிவாய்க்கால் கஞ்சி உண்போம்!

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்


JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Free! ESTIMATES
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com

# தொல்லியல் சுவடுகள்...



# கந்தரோடை

## சுடமண் நாணயக் குற்றிகள் காட்டும் திரிசூலக் குறியீட்டு மரபும் பண்பாடும்

### அறிமுகம்

1995 ஆம் ஆண்டு இக்கட்டுரையாசிரியரினால் வழுக்கையாற்றுப் (பெருவழுதியாறு) பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வுகளின் போதும், குறிப்பாக கந்தரோடைக் கிராமத்தில் உச்சாப்பனை என்றழைக்கப்படும் மையத்தில் மேற்கொண்ட அகழ்வுகளின் போதும், பல்வேறு எடையிலும். வடிவமைப்பிலும் உருவாக்கப்பட்ட சுடு மண் நாணயக் குற்றிகள் (Teracotta Coins) கிடைக்கப்பெற்றிருந்தன. சாதாரணமாக அங்குள்ள மண்மேடுகளின் விளிம்பு ஓரங்களில் மழைக்காலங்களில் இத்தகைய சுடுமண் நாணயக்குற்றிகள் கிடைத்து வருவதும் வழமையாகும். இருப்பினும் இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொண்ட நாணயக்குற்றிகள் பரீட்சார்த்த அகழ்வாய்வுக்கிடங்கொன்றின் மண்படைகளில் இருந்தே எமக்கு கிடைக்கப்பெற்றமையால், அவை கால நிர்ணயவடிப் படையிலும், பொருளியல் சமூக வரலாற்று அடிப்படையிலும் முக்கியத்துவம் கொண்டவையாக விளங்கும் என்பதில் சந்தேகம் எழமுடியாது. அக்குழியினுள் 8” ஆழத்தில் காணப்பட்ட மட்கலமொன்றினுள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த சுடுமண் நாணயங்களிலேயே அவற்றின் முகப்பில் (Obverse) திரிசூல வடிவம் பொறிக்கப் பட்டிருந்தமையைக் காண்கின்றோம். இவ் வரைபுகள் யாவும் சூளையில் இட்டுச் சுட்டு, மீட்டபின் வரையப்பட்டவையாகவே காணப்படுகின்றன.



### சுடுமண் நாணயங்களின் தன்மை

பெரும்பாலான நாணயங்கள் வட்ட வடிவினவாகவே காணப்படுகின்றன. நீள்சதுரவடிவில் அமைந்த நாணய குற்றிகளும் காணப்படுகின்றன. இவை கறுப்பு சிவப்பு வகையைச் சேர்ந்த வகையாகவும், தனிக்கறுப்பு வர்ணத்தில் உருவாக்கப்பட்டவையாகவும், தனிச் சிவப்பு வர்ணமுடையவையாகவும் காணப்படுகின்றன. வட்ட வடிவில் காணப்படும் நாணயக் குற்றிகள் சில முதலில் களிமண்தட்டுக்களாகச் செய்யப்பட்டு வடிவமைக்கப்பட்டதன் பின்னர், சூளைகளில் இடப்பட்டுச் சுட்டபின் மீட்டெடுக்கப்பட்டவையாக உள்ளன. இரண்டாவது வகை நாணயங்கள் சூளைகளில் பலதரப்பட்ட பானை வகைகள் இடப்பட்டு, மீட்டெடுக்கும் போது உடைந்த துண்டுகளை வடிவமாக்கிய வகையில் வரைபுகளுடன் நாணயப் பரிமாற்றத்திற்குள் விடப்பட்டவையாகும். ஆனால் இவ் விருவகை நாணயங்களின் முகப்பு (Obverse Graffitty marks) யாவும் சூடுகாட்டியதன் பின்னர் ஏற்பட்ட வரைபுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வகை நாணயங்களில் மிகப்பெரியது 5.5 சென்றிமீற்றர் விட்டத்தினையும், மிகச்சிறியது 2.5 சென்றிமீற்றர் விட்டத்தினையும் கொண்டுள்ளன. இவற்றின் தடிப்பு சராசரியாக 0.5 சென்றிமீற்றர் ஆக இருப்பதும் நோக்கத்தக்கது நிறையைப் பொறுத்தமட்டில் 170 grams அதிகமாகவும் 90g குறைந்த பட்சமாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

### சுடுமண் நாணயம் பற்றிய இலக்கியச் செய்திகள்

சங்க கால இலக்கியங்களில் பரவலாக சுடுமண் நாணயங்கள் பற்றியும், காசு பற்றியும் செய்திகள் வருகின்றன. எட்டுத்தொகையில் வரும் குறுந்தொகைப்பாடல்களில் (148) காசு பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளமை நோக்கத்தக்கது

“.....செல்வச் சிறா அர் சீறடிப்பொலிந்த தவளை வா அய பொலஞ்செய் கிண்கிணிக்காசின் அன்ன.....” என்பது

அச்செய்தியாகும். கிண்கிணிக்காசு என்ற குறிப்பு இங்கு ஒலிமெழுப்பக்கூடிய பொன்காசினையே குறிப்பிட்டு நிற்பதாகக் கொள்ள முடிந்தாலும், காசு என்ற வழக்கு சங்ககாலத்தில் இருந்தது என்பதனை குறுந்தொகைப்பாடல் உறுதிப்படுத்தி நிற்கின்றது. மேலும் தவளை வா - அய என்ற தொடர் சுடுமண் சூளை யைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். பொலஞ்செய் என்பது (பானம்- தட்டை பொலம் > பொல்லம் > பள்ளம் > பாளம்) பொலம் என்று தமிழ்ப் பிராமி வரிவடிவத்தில் பொறிக்கப்பட்ட நாணயம் ஒன்று நாகர்கோவிலிலிருந்து ப.புஸ்பரணம் என்ற தொல்லியல் ஆய்வாளரது கையிற்கு கிடைத்துள்ளமையும், அவர் அந்நாணயத் தொடர் தரும் பொருளை பொன் எனக் குறிப்பிட்டிருப்பதனையும் அவரது ஆய்வு நூல் ஒன்றிலிருந்து அறிகின்றோம். பொலஞ்செய் என்ற தொடரை போளம்செய் என எடுத்துக்கொண்டால் பாளம் செய் என்று பொருள் கொண்டு (தாம்பாளம் தட்டையான அகன்ற பாத்திரம்) அதனை களிமண் தகடு அல்லது கடுமண்காக எனக் கொள்ள முடியும்.

முல்லை நில மக்களே முதன்முதலாக நாணயப் பரிவர்த்தனையைத் தெரிந்திருந்தார்கள் என்பதற்கு அகப்புறச்சான்றுகள் கிடைத்துள்ளன. முல்லை நிலம் மருதநிலத்துடன் மருங்கி வருவதும் அந்நிலை தோன்றவதற்கு ஒரு காரணமாகும். முல்லைநில மக்களே அரசவாக்கம், வாணிபவிருத்தி, செல்வச் சேகரிப்பு, மேலாண்மை போன்ற விடயங்களில் முன்னோடிகளாக விளங்கியமையால் நகரங்களின் தோற்றத்தினையும் அங்கு காணமுடிந்தது. அப்பின்னணியிலேயே நாணயங்களின் பரிவர்த்தனையும் அம்மக்களினாலேயே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். யாழ்ப்பாணக்குடாநாட்டில் கந்தரோடை, வல்லிபுரம், நாகர்கோவில் ஆகியன முல்லை நிலமக்களின் ஆய்குடித் தோன்றல்களுக்குரிய நகரக் குடியிருப்புக்களாக இருந்து வந்துள்ளமையை அம்மையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஏராளமான நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன. அவ் வாறான ஒரு நிலையில் கந்தரோடையானது தனித்துவமானதும், விசேட கவனத்திற்குரியதுமாகும் என்பது அம்மையத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 09 சுடுமண் நாணயங்களிலிருந்தும் உறுதிப்படுத்தக்கூடியதாகவுள்ளது. இந்நாணயங்கள் யாவும் கீழ்மண்படைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டமையின் அடிப்படையிலே. அந்நாணயக் குற்றிகள் மீது வரையப்பட்டிருந்த முச்சூலக்குறிகள் உள்ளூர் வாணிப - சமய - மக்கள் ஒன்றுகூடல் மையங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையை உணர்த்துக்கின்றன எனலாம்.



சேது நாணயம்
சங்கம்புலவு (கந்தரோடை)
பிற்பக்கம்

### முச்சூலக்குறி

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் முச்சூலக் குறிகள் பொறிக்கப்பட்ட வேறும் தொல்பொருட்கள் பல மீட்டெடுக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் ரகுபதி “கோவும் மடப்பறையும்“ என்ற தனது ஆய்வுக் கட்டுரையொன்றில் அம்முக்கியத்துவத்தினை நன்கு ஆராய்ந்துள்ளார். முச்சூலக் குறியீடு உள்ளூர் கலாசார



சேது நாணயம் – சங்கம்புலவு (கந்தரோடை) 14ஆம் நூற்றாண்டு

மொன்றின் குறிகாட்டியாக யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் இருந்து வருவதனை தொல்லியலாளரும் பண்பாட்டு மானிடவியலாளரும் நன்கு அவதானித்துள்ளனர். சூலக்குறியீடு இடப்பட்ட பொருட்கள் கடல் கடந்த, வெளிநாட்டுப் பாவனைக்காக எடுத்துச் செல்லப்பட்டிருக்காதவொரு மரபின் கருத்துருவமாக வெளிப்படுத்தப்பட்டு வந்தமையை இங்கு காண்கின்றோம். கிராமங்களின் எல்லையை வகுப்பதற்கும் குறிப்பதற்கும் பயனபடுத்தப்பட்ட அதே குறியீடு “கோ” வைக் குறிப்பதற்கும் ஆனைக் கோட்டை முத்திரையில் உள்ளது போன்று அரசமரபிலும் பயன்படுத்தப்பட்டிருந்தமையைக் காண்கின்றோம். அதே முச்சூலக் குறியீடு வரிவடிவில் வரும் ஒலியனாக மாற்றமடையும்போது “ழ” கரத்தினுடைய தோற்றத்திற்கும் வித்திட்டு நின்ற முறைமையை கந்தரோடையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நாற்சூலம் பொறிக்கப்பட்டிருந்த மட்பாண்டங்களில் இருந்து துலக்கமாகின்றது.

இவ்வாறு வரையப்பட்டிருந்த மட்பாண்ட ஓடுகள் சிவப்புக்கறுப்பு இனத்தில் எமக்குக் கிடைத்துள்ளன. இங்கு சூலக்குறியீடு பிராந்திய மொழியொன்றின் வரிவடிவத்தை தாங்கி நின்றமையைக் காண்கின்றோம். கந்தரோடையில் கி.முற்பட்ட சகாப்தத்தில் வரையப்பட்டுக் கிடைத்த அதே நாற் சூலக் குறியீடு போன்ற இன்னோரு பிரதி எமக்கு தற்காலத்தில் (கி.பி 17 ஆம் நூ) காரைக்காடு சிவன்கோவிலில் உள்ள பைரவர் தேவஸ்தானத்தில் வைக்கப்பட்டுள்ள குறியீட்டுடன் நெருங்கிய ஒற்றுமை கொண்டுள்ளமையை இக்கட்டுரையாசிரியர் ஆராய்ந்துள்ளார். எனவே பாதுகாப்பு என்ற செயற்பாட்டு வடிவத்தின் குறியீடாகவும் இச்சூலக்குறியீடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தமையை உணர்கின்றோம். வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்குக் கூட முச்சூலக்குறியீட்டினை குறிசுடும் முறையில் பொறிக்கும் வழக்கம் யாழ்ப்பாணத்தில் காணப்படுவதனை இன்றும் காணமுடிகிறது. இக்கருத்துருவமானது பைரவர் என்ற தெய்வத்தின் வாகனம் நாய் என்ற முறையில் அல்லாமல், வீட்டின் காவல் சக்தி நாய் என்பதனை உணர்த்துவதற்காகவே முச்சூலக் குறியீடு பொறிக்கும் மரபு பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். பிற்காலங்களில் அம்மரபு குலக்குறிகளாகவும் மாற்றமடைய வேண்டிய சூழல் உருவாகியிருந்தது. அம்மரபு தொழிலை அடிப்படையாகக் கொண்ட தனித்துவமான வகுப்பினருக்குரிய சின்னமாக அதாவது ஆதித்திராவிடர் என்று குறிப்பிடப்படும் முழவு ஒலிப்போர் வகுப்பினரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவதனை யாழ்ப்பாணக் குடா நாட்டில் இற்றைவரை காண்கின்றோம். பேராசிரியர் ரகுபதியும் அக்கருத்தினை நன்கு வலியிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

முச்சூலக் குறியீட்டினது இன்னொரு பரிமாணத்தினை சடங்குகளிலிருந்தும் கண்டு கொள்ள முனைவது மானுடவியல் நோக்கில் முக்கியத்துவமானது. ஈமப்படையல்களின் போதும், சடங்குகளின் போதும் முச்சூலக் குறியீடு பெருமளவுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வழக்கம் யாழ்ப்பாணத்தில் இன்றும் காண்கின்றோம். காடாற்றல், அஸ்திகரைத்தல், தானியக் களம் அமைத்தல், காய்வெட்டுதல் (பேயோட்டுதல்) கழிப்புக் கழித்தல், பஞ்சாயுதம் அணிதல் போன்ற சடங்குகளில் முச்சூலக்குறியீடு வகிக்கும் பங்கும். பொருளும் தனித்துவமானதே.

அஸ்தி கரைத்துவிட்டும், கல்போட்டுவிட்டும் (அந்தியஸ்ட்டி) கரையேறும் பிதிர் கரும உரித்தாளியை எதிர்கொள்வது முதலில் முச்சூலக்குறியே. இங்கு விதேசியத்திலிருந்து சுதேசியத்தையும், அதன் பின் பாதுகாப்பினையும் (கையிற்



பாண்டியர் நாணயங்கள் பெருவழுதி நாணயம் (முகப்பு) கந்தரோடை

கத்தியுடன் செல்லும் முறை) குறிக்க முச்சூலக்குறி பயன்படுத்தப்பட்டது. அதற்காக சுங்க வரிப்பணத்தினை செலுத்தி விட்டே அப் பிதிர்கரும உரித்தாளி தீர்த்தக்கரையிலிருந்து முச்சூலக்குறியீட்டு வரைபினைக் கடந்து செல்ல (சுதேசியத்திற்குள் செல்ல) அனுமதிக்கப்பட்டு வரும் முறையை யாழ்ப்பாணக் குடாநாட்டில் இற்றைவரை காண்கின்றோம். எனவே சடங்கிலும் (பஞ்சாயுதம், தாலி போன்ற) அணிகலன்களிலும் இம்

## கந்தரோடை அகழ்வாய்வில் கிடைத்த நாணயங்கள் சில



ரோம நாணயங்கள் உச்சாப்பனை, கந்தரோடை அகழ்வாய்வில் கிடைத்தவை (கி.மு.1 – கி.பி.2)

முச்சூலக் குறியீடு தனது மிகப் பொறுப்பான பங்கினை வகிப்பதும் நோக்கத்தக்கது.

### முடிவாக

கந்தரோடையிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட சுடுமண் நாணயக் குற்றிகளில் காணப்படும் முச்சூலக்குறியீட்டு வரைபுகளினூடாக மீட்டெடுக்கப்படக் கூடிய எமது பண்பாட்டு பரிமாணத்தில் சில கருத்துக்களையே இச்சிறிய ஆய்வுக்கட்டுரையில் முன்வைக்கமுடிந்தது. உண்மையில் நாணயம் என்ற அலகு பொருளியல் வாழ்வின் பிரதான ஊடகமாக, பண்டமாற்று முறையிலிருந்து பணப் பெறுமதிக்கு பண்டங்களை உட்படுத்தும் மரபு தோற்றம் பெற்றபோது தொழிற்படவாரம்பித்தது. பின்னர் காலப் போக்கில் அவை அரசியல், பண்பாட்டுப் பெறுமானங்களையும் அளவீடு செய்ய உதவும் அலகாகவும் மாற்றமடைந்து கொண்ட தன்மையையும் காண்கின்றோம். கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் லிடியா (Lydia) வில் சிம்மத்தலை பொறித்த வெள்ளி நாணயக்கட்டிகளின் வெளியீடே உலகின் முதலாவது உத்தியோகபூர்வ நாணயக் குற்றிகளாகும். அதன் பின்னர்தான் உலோக நாணயங்கள் பரவலான உபயோகத்திற்குள்ளாக்கப்பட்டன. அதற்கு முன்னர் உள்ள காலகட்டங்களில் சங்கு, சிப்பி, சோகி, கடல்முத்து, குண்டுமணி போன்றவற்றுடன் சுடுமண் நாணயக் குற்றிகளும் பொருளியல் அலகாக உபயோகிக்கப்பட்டன. யாழ்ப்பாணக்குடாநாட்டில் கந்தரோடையும் அவ்வாறான மிக நீண்டகால பொருளியல் வாழ்வின் களமாக விளங்கி வந்திருந்தமையை இச்சுடுமண் நாணயக்குற்றிகள் எடுத்துக் காட்டுவது சிறந்தவொரு தகவலாகும். மேலும் இச்சுடுமண் நாணயங்களைப்பற்றி ஆராய்வதன்மூலமே எமது பொருண்மியப் பண்பாட்டின் தொன்மையான இருப்பினை இனங்கண்டு கொள்ள வாய்ப்பு ஏற்படும் என நம்புவோமாக.

- செல்லையா கிருஷ்ணராஜா
எரிமலை மே-ஜூன் 2003



ரோமத்தங்க நாணயம்
கந்தரோடை



பெருவழுதி நாணயம் – (பாண்டிய வம்சம்)
கந்தரோடை



நாகர் நாணயம் – உச்சாப்பனை, கந்தரோடை
முகப்பில் வாளும் மயிலும், நாகவம்ச வெளியீடு

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு.
விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும்.
அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203

# உக்ரேன் – காஸா – காஷ்மீர்: முடிவில்லாத போரும், முறிவடையும் யுத்த நிறுத்தங்களும்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

08.05.2025

அமெரிக்கா அதிபராக டிரம்ப் பதவியேற்ற பிறகு முதல் 24 மணி நேரத்துக்குள் உக்ரேன் போரை நிறுத்தி விடுவேன் என்ற பேச்சு தற்போது வெறும் வாய்ச்சவாடலாகவே மாறியுள்ளது.

தற்போது டிரம்ப் அதிபராக பதவியேற்று நான்கு மாதங்களுக்கும் மேலாகிவிட்டது. உக்ரேனிய போர் இந்த அளவுக்கு கடுமையான மற்றும் சிக்கலான மோதலாக இருக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை டிரம்ப் தற்போது உணரத் தொடங்கியிருக்கலாம்.



இதேவேளை ரஷ்ய அதிபர் உடனடியான போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு அவசரப்பட விரும்பவில்லை. நீண்ட கால தீர்வைப் பற்றி பேசுவதற்கு முன்பு இடைக்கால போர் நிறுத்தத்தை கோரும் அமெரிக்காவின் இரண்டு கட்ட திட்டத்தை தான் உறுதியாக எதிர்ப்பதாக புட்டின் வெளிப்படுத்தி இருந்தார் .

அண்மையில் குறுகியகால மூன்று நாள் போர் நிறுத்தத்தை ரஷ்யா அறிவித்தது. ஆனால் எந்தவொரு சமரச பேச்சுவார்த்தையும், போரின் மூலக் காரணங்கள் என்று கருதும் விஷயங்களை முதலில் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் புட்டின் மிக உறுதியாக உள்ளார்.



நேட்டோ விரிவாக்கம் மற்றும் உக்ரேன் மேற்குலகு சார்பு கொண்ட நாடாக இருப்பது ஆகியவை ஒரு வகையில் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்துவதாக ரஷ்ய அதிபர் வெளிப்பட கூறியுள்ளார்.

எந்தவொரு சமாதான உடன்பாடும் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு முன்பு, ரஷ்யா முன்வைக்கும் முக்கியமான கேள்விகளுக்கும் நிபந்தனைகளுக்கும் பதிலளிக்க வேண்டுமென்றும் புட்டின் வலியுறுத்தி வருகிறார்.

## டிரம்ப் ஜெலன்ஸ்கி கனிமவள ஒப்பந்தம்:

உடனடியாக போரை நிறுத்த கோரும் அமெரிக்கா, போர் நிறுத்தத்தின் மூலம் கிடைக்கும் பொருளாதார நன்மைகளில் தான், டிரம்ப் அரசு அதிகமாக கவனம் செலுத்துகிறது. யுத்த நிறுத்தம் மூலம் அமெரிக்க நிறுவனங்களுக்கு உக்ரேனின் முக்கியமான கனிம வளங்களை பெற வாய்ப்பு அளிக்கும் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க டிரம்ப் திட்டமிட்டுள்ளார்.

பல மாதங்கள் நீடித்த பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு, உக்ரேனின் கனிம மற்றும் எரிசக்தி இருப்புக்களை விற்பனை செய்வதன் மூலம் எதிர்காலத்தில் கிடைக்கும் லாபத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பான ஒப்பந்தத்தில் உக்ரேனும் அமெரிக்காவும் இணைந்து செயல்பட அண்மையில் கையொப்பம் இட்டுள்ளன.

உக்ரேனின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பில் அமெரிக்கா தொடர்ந்து முதலீடு செய்வதற்கான பொருளாதார ஊக்கத்தை வழங்கும் எனக்கூறி இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உக்ரேனுக்கு ஏற்கனவே தங்கள் நாடு செய்துள்ள உதவியின் அளவு தொடர்பான அமெரிக்காவின் பொருளாதார நலன்களை நிவர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உக்ரேனில் கிராஃபைட், டைட்டானியம், லித்தியம் என பல்வேறு முக்கியமான கனிமங்கள் பெருமளவில் இருப்பதாக கூறப்படுகிறது. இந்தக் கனிமங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, இராணுவ தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு உள்பட பல முக்கியமான துறைகளுக்கு பயன்படும் என்பதால் இந்த கனிமங்களுக்கு சர்வதேச அளவில் தேவை அதிக அளவில் உள்ளது.

போரினால் சிதைந்திருக்கும் உக்ரேனின் பொருளாதாரத்தை உத்வேகத்துடன் மேம்படுத்துவதற்காக முதலீட்டு நிதியை உருவாக்குவது தொடர்பாகவும் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனாலும் அமெரிக்கா மற்றும் உக்ரேன் இடையிலான இந்த ஒப்பந்தம் தொடர்பாக ரஷ்யா இதுவரை பதிலளிக்கவில்லை.

## காஸாவில் போர் நிறுத்த தோல்வி:





இவ்வருட ஜனவரி 16இல் காஸாவில் போர் நிறுத்தம் குறித்து இஸ்ரேல்- ஹமாஸ் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால் காஸாவில் கடந்த 15 மாத காலமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போரானது முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

2023-ஆம் ஆண்டு அக்டோபர் 7இல் தொடங்கிய காஸா போரில் இது வரை 50,000 க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது.

இந்த போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என அமெரிக்கா, எகிப்து, கத்தார் ஆகிய நாடுகள் நீண்டகாலமாக முயற்சித்து வந்தன. இந்நிலையில் காஸா போர் நிறுத்தம் மற்றும் பிணைய கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் – ஹமாஸ் ஜனவரியில் ஒப்புதல் அளித்தன.

அவ்வேளையில் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப், இரண்டு வாரங்களுக்குள் பிணைய கைதிகளை விடுவிக்க வில்லை என்றால், ஹமாஸ் அமைப்பினர் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரிக்கை கொடுத்து இருந்தார். இந்த நிலையில் தான் இஸ்ரேல்–ஹமாஸ் இடையே காஸா போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

முதற்கட்ட போர் நிறுத்த நடவடிக்கையாக, காஸாவில் இருந்து இஸ்ரேல் படைகள் வெளியேறும் என்றும், ஹமாஸ் படைகள் பிடியில் எஞ்சியுள்ள பிணைய கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. அதன் பிறகு இஸ்ரேலின் பிடியில் சிக்கியுள்ள பாலஸ்தீன மக்களும், நிலங்களும் விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனாலும் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவு தரும் மற்ற நாடுகள் மீதும் தொடர்ந்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வந்தது. லெபனான் நாட்டில் ஹிஸ்புல்லாக்கள் மீதும் மற்றும் ஏமன் நாட்டின் ஹவுத்திகள் மீதும் தாக்குதலை இஸ்ரேல் தொடர்ந்து நடாத்தியது.

மார்ச் மாத இறுதியில் இருதரப்பும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்குதல்களை தீவிரப்படுத்தின.

சுமார் 15 மாத காலமாக நீடித்த இந்த போர் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது போல நடக்கவில்லை. காஸாவில் தொடர்ந்து தீவிரமான போர் நடைபெற்று வருகிறது.

## இந்தியா பாகிஸ்தான் மோதல்:





காஷ்மீர் விவகாரத்திற்காக இந்தியா, பாகிஸ்தான் இடையே மோதல் அதிகரித்து வருவதுடன், பதற்றம் தணிய அமைதியை ஏற்படுத்த உலக நாடுகள் வலியுறுத்து வருகின்றன. இந்நிலை யில் அமெரிக்க அரசும் அமைதியை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறது.

பாகிஸ்தானுக்கு எதிராக மேற்கொண்ட தாக்குதலுக்கு இந்தியா "ஆபரேஷன் சிந்தூர்" என்று பெயரிட்டுள்ளது. இரு தரப்பிலும் பதற்ற மான சூழல் நிலவி வருகின்ற நிலையில், உலகத் தலைவர்கள் இரு நாடுகளும் அமைதிக்கான தீர்வுகளை நோக்கி நகர வேண்டும் என்று கோரிக்கை வைத்து வரு கின்றனர்.



இந்நிலையில் அமெரிக்க அதிபர், இந்தியா - பாகிஸ்தான் விவ காரம் தொடர்பாக இரு நாட்டு தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நீண்ட கால அமைதி மற்றும் பிராந்திய நிலைத்தன்மையை நிலைநாட்டுவதற்கான தீர்வை நோக்கி இரு நாடுகளும் முன்னேறிச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம் என்று அமெரிக்க செய்தித் தொடர்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தியாவின் தாக்குதல்களுக்குப் பிறகு கட்டுப்பாட்டைக் கடைபிடிக்க பாகிஸ்தானை வலியுறுத்தும் வகையிலான கோரிக்கையை அமெரிக்கா முன்வைத்துள்ளது. ஆனாலும் இந்தியா அமெரிக்க இடையிலான உறவுகள் சமீப ஆண்டுகளில் வலுவடைந்து உள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் சர்வதேச அளவில் தனிமைப் படுத்தப்பட்டு இருப்பதும் தெளிவாகிறது. அமெரிக்க இதுவரை பாகிஸ்தான் அரசுக்கே உதவி செய்து வந்தது. தற்போது இந்த மாற்றம் வரலாற்றில் ஒரு போதும் இல்லாத அளவுக்கு இந்திய அரசுக்கு பெரும் பலத்தை கொடுத்துள்ளது.

இந்த மோதல் விரைவாக முடிவுக்கு வந்து, அமைதியான தீர்வுக்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்று ரஷ்யாவும் தெரிவித்துள்ளது. ஆனால் காஷ்மீர் விவகாரத்தில் எந்த ஒரு தீர்வும் எட்டப்படாத நிலையில் போர் தீவிரமடைய வாய்ப்புள்ள தாக கூறப்படுகிறது






# “முதல்வர் ஸ்டாலினிடம் வேண்டி விரும்பிக் கோட்டுக் கொள்கிறேன்”

## உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்

07.05.2025

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன். அகவை 93-ஐ எட்டினாலும் இன்னமும் தமிழர் நலனுக்காக சிந்தித்து செயலாற்றிக் கொண்டிருப்பவர். நிகழ்ச்சி ஒன்றுக்காக திருப்பூர் வந்திருந்த அவரிடம், இலங்கையை சீனா ஆக் கிரமித்து வரும் பிரச்சினை, எல்லையில் இந்தியாவுக்கு ஏற் பட்டிருக்கும் அச்சுறுத்தல்கள், உலகத் தமிழர்களின் இன்றைய நிலை உள்ளிட்டவை குறித்து பேசினோம்.

### இன்றைய சூழலில் எத்தனை நாடுகளில் தமிழர்கள் வாழ் கிறார்கள்?

இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், மொரிஷியஸ், தென் னாப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகளில் தமிழர்கள் அதிகமாக வாழ் கிறார்கள். ஆங்கிலேயர்களுக்கு அடுத்தபடியாக உலகம் முழு வதும் தமிழர்கள் தான் அதிகமான நாடுகளில் வாழ்கிறார்கள். இந்நாடுகளை கைப்பற்றிய ஆங்கிலேயர்கள், ரப்பர், தேயிலை, காபி போன்ற பணப்பயிர்களை விளைவிக்க கிராமப்புற உழைப்பாளிகளையும், பட்டியலின மக்களையும் இங்கிருந்து கப்பல், கப்பலாக ஏற்றி இந்த நாடுகளில் குடியமர்த்தினர். அப் படித்தான் இன்றைக்கு உலகம் முழுவதும் 70-க்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

### தமிழர்களின் உழைப்பால் தான் ஆங்கிலேயர்கள் தங்களை செல்வந்தர்கள் ஆக்கிக் கொண் டார்களா?

பர்மாவின் ஐராவதி சமவெளிப் பகுதியில் நெல் விளைவிக்க இங்கிருந்து 3 இலட்சம் தமிழர்களை கொண்டு சென்றார்கள். அதில் சுமார் 2 இலட்சம் பேர் காடுகளை திருத்தும்பணியில் ஈடுபட்டபோது, கொடிய மிருகங்கள் மற்றும் தொற்று நோய்கள் தாக்கி உயிரிழந்தனர். மலேசியாவில் ரப்பர், தேயிலை தோட் டங்களுக்காக 5 இலட்சம் தமிழர்கள் கொண்டு செல்லப்பட் டார்கள். தென்னாப்பிரிக்காவின் கரும்பு தோட்டங்களுக்கு தமிழர்கள் கூட்டம், கூட்டமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆகவே, நிச்சயமாக தமிழர்களின் அளவற்ற உழைப்பால்தான், ஆங்கிலேயர்கள் செல்வந்தர்களாக மாறினார்கள்.

ஐந்தாறு தலைமுறைக்கு முன்பு இங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்கள் இன்றைக்கு அந்த நாடுகளில் உழைப்பாலும், கல்வியாலும் உயர்வு பெற்று அங்கே மக்களவை உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும், உயர் அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள். சிங்கப்பூரில் 60 சதவீதத்துக்கு மேல் சீனர்களும், 25 சதவீதத்துக்கு மேல் மலேசியர்களும் வாழ்கின்றனர்.

ஆனால், 10 சதவீதம் மட்டுமே இருக்கும் தமிழர்கள் 2 முறை அந்த நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்திருக்கிறார்கள். இப்போதும் அங்கு ஐந்தாறு தமிழர்கள் அமைச்சர்களாகவும், பலர் மக்களவை உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களின் உயர்வுக்கு இந்தியாவோ, தமிழ்நாடோ காரணம் அல்ல. ஒரு காலத்தில் அடிமைகளாக வைக்கப்பட்டு இருந்தவர்கள் இப்போது தங்களது சொந்த முயற்சியில் அந்தநாட்டை ஆட்சி செய்யும் அளவுக்கு உயர்ந்திருக்கிறார்கள்.

### தமிழர்களாக அவர்கள் இழந்தவை எவை?

வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு தாய்த்தமிழர்களுடனான உறவு முற்றிலும் அறுந்துபோய்விட்டது. இதனால், நம்முடைய மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, பழக்கவழக்கங்களை இழந்த நிலையில் அவர்கள் வாழ்கிறார்கள். தென்னாப்பிரிக் காவில் தமிழர்களின் வீட்டுக்குள்ளும் ஆங்கிலம். வீட்டுக்கு வெளியிலும் ஆங்கிலம். இந்தநிலை மாற தாய்த்தமிழர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியம். தமிழக அரசு அமைத்துள்ள உலகத்தமிழ்ச்சங்கம், தமிழராய்ச்சி நிறுவனம் போன்றவை மூலம், வெளிநாடு வாழ்தமிழர்களுக்கு இவற்றையெல்லாம் கற் றுத்தர ஆசிரியர்கள் அனுப்பப்பட வேண்டும்.

அடிக்கடி தமிழர்கள் வாழும் நாடுகளுக்கு இங்கிருந்து கலை ஞர்கள் தூதுக்குழுக்களாக அனுப்பப்பட வேண்டும். பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தில் பிரிட்டிஷ் கினியா நாடு உள்ளது. அங்கு முதல் பிரதமராக செட்டி ஜெகன் என்பவர் பதவியேற்றார். அவர் தனது மூதாதையர்கள் தமிழர்கள் என்பதை அறிந்து, இங்கு வந்து காரைக்குடி பகுதியில் பூர்விகத்தை தேடிப் பார்த்தார். அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. வெளிநாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஆனால், வள்ளலார் பாடலை ஆங்கிலத்தில் எழுதி வைத்துத்தான் பாடுகிறார்கள்.

### போருக்கு பின் இலங்கை எப்படி இருக்கிறது?

போருக்கு பின்பு ஒட்டுமொத்தமாக இலங்கையின் பொருளா தாரம் சீர்குலைந்துள்ளது. உணவுப்பொருட்களின் விலை சாமானிய மக்கள் வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்துவிட் டதால் சிங்கள மக்களே கொதித்தெழுந்து போராடும் நிலைக்கு வந்துவிட்டனர்.

### இலங்கையை சீனா முழுமையாக ஆக்கிரமித்து விட்டதாகச் சொல்வது உண்மையா?

ஆம். சீனா அனைத்து வகையிலும் ஒரு வல்லரசு. பொருளாதார ரீதியிலும் சீனா வலிமையாக உள்ளது. இலங்கை ஒரு சிறிய நாடு. இலங்கையுடன் நட்புறவு கொண்டால், அந்த நாட்டின் சந் தையை கைப்பற்றலாம் என சீனா கணக்குப் போட்டது. அத னால் இலங்கைக்கு சீனா அள்ளி அள்ளித் தருகிறது. இலங்கை யின் அம்பன் தோட்டா பகுதியில் சீனா பெரிய கடற்படை தளம் அமைத்துள்ளது. இந்துமகா சமுத்திர கடல் மார்க்கம், வணிகத் துக்கு மிகவும் முக்கியமானது. வணிக போக்குவரத்து அதிகம் நடப்பது இந்து மகாசமுத்திரத்தில் தான். இந்த வணிகப் போக்கு வரத்து நடக்கும் முக்கிய இடத்தில் தான் சீனா தனது கடற்படை தளத்தை அமைத்துள்ளது.

### இந்த விவகாரத்தில் இந்திரா, ராஜீவ் காலங்களில் இந்தியா எடுத்த இராஜதந்திர நடவடிக்கைகள் என்ன?

திரிகோணமலையில் அமெரிக்கா கடற்படை தளம் அமைக்க ஜெயவர்த்தனே பேச்சுவார்த்தை நடத்தினார். இந்திராகாந்தி, இந்து மகா சமுத்திர கடலோர நாடுகளின் மாநாட்டை டெல்லி யில் கூட்டினார். அதில், அமெரிக்கா, சோவியத் என எந்த வல் லரசுக்கும் இராணுவத்தளமோ, கடற்படைத்தளமோ அமைக்க அனுமதி தரக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் ஜெயவர்த்தனேயும் கையெழுத்திட்டதால் அமெரிக்கா பின்வாங்கியது.

அதேசமயம், ஜெயவர்த்தனேயை பழிவாங்கும் நோக்கில் விடு தலைப்புலிகள் உட்பட 2 ஆயிரம் போராளிகளுக்கு இந்திரா காந்தி இந்திய இராணுவத்தில் ரகசிய இராணுவ பயிற்சி அளித்தார். அவர்களுக்கு பயிற்சியுடன் ஆயுதங்களையும் வழங்கி அனுப்பி வைத்தார். சிங்கள இராணுவத்தை இவர்கள் அடிக்க வேண்டும் என இந்திரா காந்தி விரும்பினார். இத னிடையே இந்திராகாந்தி இறந்துவிட்டார். ராஜீவ் காந்தி ஆயு தங்களை திரும்பப்பெற, இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பிவைத்தார். விடுதலைப்புலிகளுக்கு செய்யும் உதவி, நாளை தமிழ்நாட்டுக்கும் ஆபத்தாக வரலாம் என தவறான தகவல் தரப்பட்டதே அதற்குக் காரணம்.

### எல்லையில் நமக்கு அதிகம் தொல்லை கொடுப்பது யார்?

சீனா தான். ராஜபக்ச ஆட்சிக்கு வந்ததும், இந்தியாவின் அழுத் தம் இருக்கும் வரை ஈழத்தமிழர்களை நாம் எதுவும் செய்ய முடியாது என நினைத்து சீனாவுடன் கைகோத்தார். அம்பன் தோட்டா துறைமுகம், கொழும்பு துறைமுகம், ரயில் பாதை மற்றும் சாலைகள் அமைப்பது என பல்லாயிரம் கோடிகளை இலங்கைக்கு தந்தது சீனா. அதனால் தான் இன்றைக்கு அங்கு சீனாவின் கை ஓங்கி இருக்கிறது. இதன் மூலம் இந்தியாவுக்கும் எல்லையோரத்தில் அபாயம் அதிகரித்துள்ளது.

நேரு காலத்தில் இலங்கை நம்முடைய நட்பு நாடு என்று நம் பினார். அதனால் வட இந்தியாவில் உள்ள இராணுவ முக்கியத் துவம் வாய்ந்த அமைப்புகளை தென்னிந்தியாவுக்கு மாற் றினார். தென்னிந்தியாவில் 700-க்கும் மேற்பட்ட இராணுவ தளவாட உற்பத்தி தொழிற்சாலைகள் இருக்கின்றன. இப்போது இலங்கையில் சீனா காலூன்றியிருப்பதன் மூலம், தென்னிந் தியாவில் இருக்கும் நம்முடைய இராணுவ அமைப்புகளுக்கும் பேரபாயம் ஏற்பட்டுள்ளது. ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தை விட இது பேரபாயம் என்பதை டெல்லியில் இருப் பவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

### பிரதமர் மோடியின் சமீபத்திய இலங்கை பயணம்...?

கோடி, கோடியாக அள்ளித்தந்து, இலங்கையை நம்பக்கம் திருப் பிவிடலாம் என மோடி தப்புக்கணக்கு போடுகிறார். ஆனால், இலங்கையால் சீனா உடனான உறவை கைவிடவே முடியாது. அவ்வளவு கடனை சீனா அள்ளித்தந்துள்ளது. இலங்கையின்



உட்கட்டமைப்பில் சீனா வலுவாக காலூன்றி உள்ளது. சீனா வின் உளவுக்கப்பல் இலங்கை எல்லைக்கு அடிக்கடி வந்து செல் கிறது. இந்தியாவை சுற்றி உள்ள அனைத்து நாடுகளிலும் சீனா வின் ஆதிக்கம் உள்ளது. இதை இந்தியா எப்படி எதிர்கொள்ளப் போகிறது என்று தெரியவில்லை.

### தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற் படையின் தாக்குதல் தொடர்கதையாகவே இருக் கிறதே...?

தமிழக மீனவர்களை இந்திய குடிமக்களாகவே இந்திய அரசு கருதவில்லை. அதைத் தெரிந்து கொண்டு இலங்கை கடற்படை யினர் எடுத்த எடுப்பில் சுடுகிறார்கள் சிறைபிடித்துச் செல் கிறார்கள். இதுவரை 800-க்கும் அதிகமானோர் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளனர். அந்நிய நாட்டு இராணுவம் சுட்டுக்கொல்கிறது என்றால், அதற்கு பதில் நடவடிக்கை இந்தியாவிடம் எதுவும் இல்லை.

இப்போது, இராணுவம் சுட்டால் தானே பிரச்சினை என்று சொல்லி கடற்கொள்ளையர்களை வைத்து தாக்குகிறார்கள். கச்சத்தீவை திரும்ப பெற்றாலும் மீனவர் பிரச்சினை தீராது. கச்சத்தீவை திரும்ப பெறுவதற்கான வழியும் இல்லை. ஏனென் றால், சாஸ்திரி - சிறீமாவோ உடன்படிக்கையில் கச்சத்தீவு இலங்கைக்கு சொந்தமானது என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஒப்புக்கொண்ட பிறகு திரும்ப எப்படி கேட்க முடியும்?

### மத்திய, மாநில அரசுகளிடம் உலகத் தமிழர் பேரமைப்பு எதிர் பார்ப்பது என்ன?

உலக நாடுகளில் உள்ள தமிழ் குழந்தைகளுக்கு தமிழ்ச்சங்கம் மூலம் தமிழ் கற்றுத்தர வேண்டும். இதை செய்ய வேண்டியது தாய்த்தமிழ் உறவுகளான நமது கடமை. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இது தொடர்பாக ஒரு திட்டத்தை அறிவித் துள்ளார். அந்த திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற மாநில அரசின் கையில் அதிகாரம் இல்லை. இந்திய அரசு தான் இதனைச் செய்ய வேண்டும்.

உலக தமிழ் குழந்தைகளுக்கு தமிழ் கற்றுத்தர வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் ஒரு நாளைக்கு சுமார் 2-3 மணி நேரத்தை ஒதுக்க வேண்டும். அதன் மூலம் தமிழ் குழந்தை களுக்கு தமிழ் பாடம் சொல்லித்தர வேண்டும். குறைந்தபட்சம் தமிழர்கள் அதிகமாக வாழும் இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், மொரிஷியஸ் போன்ற நாடுகளிலாவது தமிழர்களை இந்தியத் தூதுவர்களாக நியமிக்க தமிழ்நாடு அரசு இந்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

### புலம்பெயர்ந்த இலங்கை தமிழர்களுக்காக தமிழக அரசும் திட்டங்களை தந்து வருகிறதுதானே?

1983-ம் ஆண்டுக்கு பிறகு புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் உல கெங்கும் சுமார் 15 இலட்சம் பேர் வாழ்கிறார்கள். கனடா போன்ற நாடுகளில் 3 ஆண்டுகளில் குடியுரிமை கிடைக்கிறது. இலங்கையில் இருந்து வந்த தமிழர்கள் இந்தியாவில் அரசுப் பள்ளிகளில் படிக்கிறார்கள். பட்டம் பெறுகிறார்கள். ஆனால், அர சாங்க வேலைவாய்ப்பு இல்லை. அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டியது அரசின் கடமை. இதனை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

www.sangathamil.ca

# REWARDING YOUR EVERYDAY

MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.




1-855-856-6875

## Merchant Benefits

- Website Template: Modern design for improved user experience.
- Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
- Convenient Payment Options: EV gift wallet for seamle transactions.
- Comprehensive Analytics: Access full reporting and tracking online.
- Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- Financial Security: Build income for future sale or retirement.
- One-time Registration Fee: $199 to unlock these benefits.

## Member Benefits

- Point Accumulation: Earn 4% to 60% on purchases.
- Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
- Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
- Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
- Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
- Networking Opportunities: Build your own shopping network effortlessly.
- Exclusive Privileges: Gain mining rights worth $60.




WWW.MYEVERYDAYSHOPPING.COM



# அர்த்தமற்ற காத்திருப்பு




கூடு கலைந்து பறவைகள் ஆங்காங்கே திரிந்து இன்னுமொரு இடத்தில் கூடுகட்டும்போது, எழும் இந்த கீய்... காய்... என்ற ஒலிபோல இடம்பெயர்ந்து வந்த மக்கள் கூட்டம் இருப் பிடங்களைத்தேடி அமைத்துக்கொண்டிருந்தது... புதிது புதிதாக வெள்ளைத் தறுப்பாள்களில், சேலைகளில், வீடுகள் முளைத் துக்கொண்டிருந்தன. சிலர் உறவுகளைப்பிரிந்த சோகத்தில் சிந்தனைகளை எங்கோ விட்டிருந்தனர். இலையான்கள் கிசு கிக என்று மொய்ப்பதுபோல சிறுவர் கூட்டம் அங்கும் இங்கும் பசியோடு திரிந்ததை அவர்களின் ஒட்டிய வயிறு காட்டியது. அந்த வெள்ளைத் தறுப்பாள்களினால் ஆனவீடுகளில் அடுப்புகள் மட்டும் புகையவில்லை...

சோவென்று வானுயர வளர்ந்திருந்த புளியமர நிழலில் தஞ்சம் புகுந்த ஒரு குடும்பம் அந்த வெள்ளை மாளிகை ஒன்றினுள்...

அந்தப் புளிய மரக்காற்று மெதுவாக அவர்களை வருடிக்கொடுத் திருக்க வேண்டும். நான்கு பிள்ளைகளைக் கொண்ட ஒரு குடம் பம். பசியினால் சுறுண்டு படுத்திருந்தது. அந்தக் குடும்பத்தில் மூத்தவளாக ஒளிநிலா, புளியமர வேரில் சாய்ந்து கொண்டாள். “ரிவிபல... ரி... வி... ப... ல...” ஆக்கிரமிப்பு யுத்தத்தால் அந்த நிலை... பறவைகள் காலத்திற்குக் காலம் காடுகளைத்தேடி இடம் மாறும். அவை தன் சுதந்திரத்திற்காக, ஆனால், நாம் இருந்த நிம்மதியும் இழந்து, கயவர் கூட்டத்தினால் நாளுக்கு நாள் கூடு கலைந்து ஒவ்வொரு மரங்களைத்தேடி தஞ்சம் அடைகின்றோம் – ஒளிநிலாவின் மனம் ஒவ்வொரு நினைவாக எழுப்பத்தொடங்கியிருந்தது. ஏதும் அறியவாய்ப்பில்லாத இரு தங்கைகளும், நிம்மதியாய் உறங்கிக்கொண்டிருந்தார்கள்.

விடிந்தால் ஓ/எல் பரீட்சை. என்ன செய்வது? படிக்கப் புத்தகம் கூட கொண்டுவரவில்லை. ஆமி வந்திட்டானாம் என்றவுடன் கையில் வைத்திருந்த ஒரு கொப்பியுடன் ஓடிவந்திருந்தான் ஒளிநிலா. அவள் இருள் நிலாவாகி தெருவை வெறித்து அந்த புளியமர அடியில் சாய்ந்து கொண்டாள்.

சாப்பாடு கொடுக்கின்றார்களா? என்று பார்க்கப்போயிருந்த தம்பி சோர்ந்த நடையுடன் வந்து ஒளிதிலாவின் பக்கத்தில் அமர்ந் தான்.

”அக்கா”... என்று தம்பி கூப்பிட, ஒளிநிலாவின் பார்வை அவ னில் நிலைத்துக்கொண்டது. “அக்கா, மூன்று மணிக்குத்தான் சமையல் முடியுமாம். இன்றைக்குச் சோறும் பருப்பும்தான் சாப்பாடாம்...”

ஏதோ பசியின் கொடுமையால் நிறையக் கதைத்துக்கொண்டு போனான் தம்பி. “இடம்பெயர்ந்து ஓடியதில் இருந்து மனிதா பிமானிகள் ஊற்றிய கஞ்சியினால், இன்னும் எம்முயிர் போகாமல் பிடித்துக்கொண்டிருக்கின்றது. சின்னச் சோமாலியா வாக... அந்த வன்னி மாறினால்...?” அவளின் சிந்தனையைக் கலைத்தது தம்பியின் குரல், “அக்கா! அங்க பார்... உனக்குப் படிப்பிச்ச கௌரி ரீச்சர்” எழும்பி தெருவுக்கு ஓடினாள் ஒளிநிலா... கௌரி ரீச்சர் இடம் மாற்றத்தினால் புதுக்குடியிருப்புக்கு முன்பே வந்து குடியமர்ந்தவர்.

ஒளிநிலாவைக் கண்ட கௌரி ரீச்சர்... “என்ன ஒளிநிலா! எல் லோரும் வந்திட்டீங்களா...? இந்த இடத்திலா இருக்கிறீர்கள்...”

ஒளிநிலாவிற்கு மனம் பாறாங்கல்லாய் கனத்தது. வெற்றுப் பார்வை ஒன்றை உதிர்த்துவிட்டு, மெதுவாகத் தலையசைத் தாள். “ஓம்” என்ற குரல் அவளிற்குள்ளேயே அடங்கி வெளியில் வர மறுத்தது. அடுத்து கௌரி ரீச்சர் கேட்டகேள்வி, ஒளி நிலாவை செல்போட்டு நொருக்கியது போல இருந்தது...

“என்ன ஒளிநிலா! நாளைக்குச் சோதினை அல்லவா... இடம் பெயர்ந்த பள்ளிக்குடத்திலையாம். படிக்கின்றாயா?” வறண்ட புன்னகையுடன்...

“ஓம் ரீச்சர்! இந்த உடுப்பும். இன்னும் ஒரு உடுப்பும்தான் கொண்டு வந்தனான். ஒரு பேனாகூட கொண்டுவரவில்லை ரீச்சர். பிறகு என்னவென்று பரீட்சை எழுதுவது... ஓடும்போது நேர அட்டவணை மட்டும் என்கையில் இருந்தது. அதோடு ஓடி வந்தனான். யாழ்ப்பாணத்தில் இருந்து எத்தனைதரம் இடம் பெயர்ந்திட்டம் ரீச்சர். அதுகூட என்னைப் பாதிக்கவில்லை. ஆனால், இந்த இடம்பெயர்வு... என் எதிர்காலத்தையே விழுங் கிவிட்டது” என்றபோது ஒளிநிலாவின் கண்ணில் இருந்து கண்ணீர் நிலத்தைத் தொட்டது.

“அழாதீங்கம்மா, கடவுளுக்கும் கண்ணில்லை. இந்தப் பேனாவை வைச்சிருங்கோ, நாளைக்கு படிச்சதை வைச்சாவது சோதினையை எழுதுங்கோ... போகாமல் மட்டும் விட்டிடாதை யம்மா... நாளைக்கு நாமும் இங்கிருந்து எங்க ஓடுறதோ தெரியாது” என்று ரீச்சர் ஆறுதலுக்கு நாலு வார்த்தை கூறிவிட்டு, “நாள் வாரனம்மா” என்ற வார்த்தையோடு கௌரி ரீச்சரின் சைக்கிள் உயிர்பெற்றுக்கொண்டது.

ஒளிநிலாவின் மனதில் ஆயிரம் மின்னல்கள் ஒன்றாகி மோதியது. திடீர் எனக் கேட்ட வாகனக் கோண் சத்தத்தினால், நினைவுக்கு வந்தான் ஒளிநிலா. காலில் தட்டுப்பட்ட கடதாசிப் பேப்பரை எடுத்துக்கொண்டு அந்த புளியமர அடியில்போய் அமர்ந்தான்.

பொழுது புலர்ந்துகொண்டு இருந்தது.

படித்ததையாவது திரும்ப ஒருக்கால் செய்து பார்ப்போம்! என்று நினைத்தவாறு அந்தப் பேப்பரில் கீறத்தொடங்கினான். திடீர் என மூளையில் தட்டியது. அடக்கடவுளே! ஒரு பேனாதானே இருக்கிறது. மை முடிந்தால் பரீட்சை எழுத முடியாமல் போய் விடும்.

மடியினில் பேனாவைப் போட்ட ஒளிநிலா, விரல்களினால் மண்ணில் கிறுக்கத்தொடங்கினாள். அவமானம் அவளைத் தின்று கொண்டிருந்தது.

“கடவுளே“...

ஐந்து வயதிலும் மண்ணில்தான் கிறுக்கிக்கொண்டேன். அது அறியாத பருவம்.இப்போ... பதினாறு வயதிலும் மண்ணில் தான் எழுதிப்படிக்க... “ம்”... நெடுமூச்சோடு அவளுக்குள் அந்த வார்த்தைகள் வெந்துபோனது. அவளின் மனம் மட்டும், முகாரிராகம் இசைத்துக் கொண்டிருந்தது.

கண்கள் நீரைச்சொட்ட அந்த வேரோடு படுத்துக்கொண்டாள்.

அந்த மரம் அவளிற்கு வருடிக் கொடுத்தது. வெள்ளையன் கொடுத்துப்போன, வெள்ளைக்கூரை அவளைப்பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தது.

"நிலாம்மா… நிலாம்மா…".

என்று செல்லமாக அழைத்தவாறு. அந்த வெள்ளைக் கூரைக் குள் இருந்துவந்து நின்றாள் அம்மா. அவளின் கையில் ஒரு பெரிய சட்டி…

"நிலாம்மா… சாப்பாடு வாங்கிக்கொண்டு வருவமா? எல்லாரும் போனாத்தான் சாப்பாடு தருவாங்கள் இல்லை என்றால், சட்டி கொண்டு போறாளுக்கு மட்டும்தான் தருவார்கள்."

அம்மா கரகரத்தகுரலில் கூறிக்கொண்டபோது, இரு தங்கை களும் சட்டியோடு தயாராக வந்து கொண்டிருந்தார்கள்…

"அம்மா எனக்குப் பசிக்கேல்ல… நீங்கள் போய்வேண்டிச் சாப்பிடுங்கோ"

"அக்கா உனக்கு பசிகேல்ல எண்டா வேண்டிவைச்சு விடியச் சாப்பிடலாம் தானே" என்று இரந்து நின்ற சிறிய தங்கையைப் பார்த்து ஒருவாறு சமாளித்து அனுப்பி வைத்தாள். மனம் தாங் கிக்கொள்ள முடியமல், ஓ… வென்று தனக்குள் குரலெடுத்து விம்மி விம்மி அழுது தீர்த்தாள்.

என்ன அவலவாழ்க்கை ஒரு நேர உணவுக்கே ஆலாய்ப் பறக்கும் நிலை.

கடவுளே! எல்லாவற்றையும் தாங்கிக்கொள்ள எனக்கு உறுதி யான மனதைக்கொடு. நான் பட்டினியால் சாகலாம். என் தங்கைகள் தாங்குவார்களா? நீ கொஞ்சம் கொஞ்சமாய் எம் மையெல்லாம் சாகடிக்கின்றாயே- எல்லோருடைய வாழ்க்கை யிலும் மரணம் வரும். ஆனால், எம்வாழ்க்கையை மரணத்திற் குள் தேடிக்கொண்டு இருக்கின்றோமே…!

ஒளிநிலாவின் மனம் புலம்பிக்கொண்டிருந்தது. அப்படியே அவள் தூங்கியும் விட்டிருந்தாள்.

வானமே கூரையாய் இருந்ததால் நேரத்துடன் விழித்து இருந் தது. எழும்பிக் குந்திக்கொண்ட ஒளிநிலா தன் தங்கைகளைப் பார்த்தாள். போர்வை இல்லாமல் தாங்கள் போட்டிருந்த சட் டைக்குள் குறண்டிப்படுத்திருந்தார்கள். வானத்திற்கும் பொறுக்க முடியாமல், அதில் இருந்து வெளியேறிய கண்ணீர் பூமியை நனைக்கத் தொடங்கியது. தூவானம் எத்தியதால் எழும்பிக் குந்தி தூங்கி வழிந்து கொண்டிருந்த சகோதரனைப் பார்த்த ஒளிநிலாவின் நெஞ்சு கலங்கியது.

நேரம் போய்க்கொண்டிருந்தது. மழை விட்டபாடில்லை. வெள் ளைக்கூரையால் வழிந்த தண்ணீரை ஏந்தி முகம் கழுவினாள் ஒளிநிலா. உடுப்பு மாற்றுவதற்காக கொண்டுவந்திருந்த சாக்கு மூட்டையில் இருந்து சட்டையை இழுத்தெடுத்துக்கொண்டாள்.

உடைமாற்ற மறைவான இடமில்லை!

அவளிற்கு யாழ்ப்பாணத்து வாழ்வை நினைவுபடுத்திப் போனது. எத்தனை வசதியான வீடு…ம்… என்ற பெருமூச் சோடு ஒருவாறு அந்த உடுப்பை மாற்றிக்கொண்டபோது மானம் பறிபோய்க்கொண்டிருந்த உணர்வு அவளை வாட்டியது.

தாயின் குரல்கேட்டுத் திரும்பினாள்…

"எங்க நிலா மழைக்க போகப் போறாய்"

"இன்றைக்கு பரீட்சை அதுதானம்மா"

"அக்கா பள்ளிக்கூடத்தில எல்லாம் இடம்பெயர்ந்த சனங்கள் தான் இருக்கின்றார்கள்." தனக்குத் தெரிந்த செய்தியினை தம்பி உரத்துச்சொல்லிக் கொண்டிருந்தபோது, ஒளிநிலா தெருவை அடைந்திருந்தாள்.

மழை கொட்டிக்கொண்டிருந்தது. ஓட்டமும், நடையுமாக நிலா இரணைப்பாலையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள்.

எந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாலும் வாசகங்கள் தொங்கிக் கொண்டிருந்தது. அவசர போர்க் காலத்திற்கான அறைகூவல் அது.

"ஆ… எவ்வளவு உண்மை!…

அந்தச் சுலோகங்கள் அவளைச் சாட்டையால் அடிப்பதுபோல் உணர்வு. ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு பாடசாலையை அடைந்தாள்.

சுட்டிலக்கத்தைத் தேடிப்பிடித்து தனக்குரிய மேசையில் அமர்ந்து கொள்ளவும், பரீசைத்தாள்கள் கைகளில் கிடைக்கவும், நேரம் சரியாக இருந்தது. அன்று தமிழ்மொழிப் பாடம்… இந்த தமிழ் மொழிக்குத்தான் இந்த அடிமை வாழ்க்கை. எம் தாய்மொழி பறிபோகும் விதம்… எம் மண்ணையே பறிப்பவனுக்கு எம்மொழியைப் பறிப்பது பெரிய பிரச்சினையாக இருக்காது. இதைப் பார்த்துக் கொதித்தவர்கள்தான் எம் வீரமறவர்கள். களப்போரில் நிற்கின்றார்கள். நாம் இங்கு…

ஒளிநிலாவின் மனம் பரீட்சை வினாக்களை விட்டு வெளியில் தாவிக் கொண்டிருந்தது. தமிழன் வரலாறுகள் அடுக்கடுக்காய் வந்து சிந்தனையை சீண்டிவிட்டுக் கொண்டிருந்தன. தமிழன் வரலாறுகள் அடங்கிப்போய்க் கொண்டிருக்கின்றதே… இந்தத் தேசத்தின் தந்தை யாரென்றால்…? டீ. எஸ். சேனநாயக் காவென சிறுபிள்ளையில் இருந்து திணிக்கப்பட்டிருந்ததால், அவன் தமிழனுக்கு இழைத்த கொடுமை என்னென் றறிவார்கள். வேதம் போல் பாடசாலைகளில் ஓதிவிடுவார்கள். அந்த அறிவிலிகளும், உண்மை தெரிந்தும் தெரியாதது போல் தப்பித்துக் கொள்கின்றார்கள். இதற்குப் போரே ஒரு வழி… தமிழன் தார்மீகத்தை நிலை நாட்டுவதற்கு ஒரு தர்மயுத்தம்.. எவ்வளவு உண்மையானது. டக்..டக்.. என்று பக்கத்து மேசை யில் இருந்த அறிமுகமாகாத ஒரு மாணவன் பேப்பருக்காக மேசையைத் தட்டியபோது. நினைவுக்கு வந்தாள். நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. மனதை ஒருவாறு கட்டுப்படுத்திக் கொண்டு தெரிந்த வினாக்களை கடகடவென எழுதிக்கொண் டிருந்தபோது நேரம் சரியாக பரீட்சைத்தாள்கள் பறிபோயின…

"ஓ" என்று அவள் மனம் கத்திக்கொண்டது. ஆனால், வெளியில் சத்தம் வரமறுத்தது. சோதனை… எத்தனையோ சோத னைகள்… வேதனைகள்… இவற்றை மனதில் தாங்கி சோதனை எழுதவேண்டும்.

பட்டினி கிடந்து படிக்கப் பாடசாலை இன்றி, மரங்களின் கீழ் தஞ்சம் அடைந்து, கொட்டும் மழையில் நனைந்து பரீட்சை மண்டபத்தில் அமர்ந்து ஈரத்தால் நனைந்துகொண்டு பேனா பிடித்து சோதினை எழுதவேண்டும். இதுநான் எமக்காக நடாத்தப்பட்ட க. பொ.த. சாதாரண பரீட்சை…!

ஒளிநிலாவின் மனம் வேதனையில் வெந்துகொண்டிருந்தது. கால்கள் மாத்திரம் சோர்ந்த நிலையில் நடையைத் தொடர்ந்தது.

வீடுபோக அவசரமில்லையே! வீட்டிற்குப்போனால் சாப் பாடில்லை. வேலைகள் இல்லை, என்ன அவசரம்.

மெதுவாக நடந்து கொண்டிருந்தாள். சிந்தனைகள் சிறகொடிந்த பறவையாக தத்தளித்துக் கொண்டிருந்தன.

"ஒளிநிலா ஏய்"

குரல் கேட்டுத் திரும்பினாள். இடம்பெயர்ந்து ஓட்டுசுட்டானில் இருந்தபோது சினேகிதியான சாந்திதான்.

சிரிக்க முயன்றாள் ஒளிநிலா முடியவில்லை. நெருங்கி வந்த சாந்தி…

"என்ன ஒளிநிலா ஒருமாதிரி இருக்கின்றாய். பரீட்சை எழுதி னாயா?…"

"ம்" என்ற பெருமூச்சை உதிர்த்தபடி…

"ஓம் எழுதினான்"

பேப்பர் நிறைய என் வேதனைகளை சோதனையில் எழுதி னேன். கண்ணில் இருந்து கட்டநீர் கன்னத்தைத் தொட்டபோது உணர்வு அவளைத்தட்டியது. தெருநிறைய சனங்கள் போய் வந்து கொண்டிருந்தார்கள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"ஏன்!, எங்களுக்குத்தான் இந்த நிலை… நானாவது ஒருமுறை இடம்பெயர்ந்தே இந்தக்கொடுமையைத் தாங்கிக்கொள்ள முடிய வில்லை.

நீ எத்தனையாவது இடப்பெயர்வு, என்னென்றுதான் நீ தாங்கிக் கொள்கின்றாயோ?"… என்று ஒளிநிலாவின் வேதனையில் பங்கெடுத்துக்கொண்டாள் சாந்தி.

மீண்டும், அந்தப் போருக்கான அறைகூவல் வாசகம் கண் ணில்படுகின்றது. "இது சிந்திக்கும் நேரமில்லை. போராடு வோம் வா" கால்கள் அசைய மறுக்கின்றன. இதற்குப்பிறகும் நான் சிந்தித்துக் கொண்டிருக்கின்றேன்… என் சுயநல வாழ்க் கைக்காக என்று மனம் கூறிக்கொண்ட போது. சாந்தியின் பார்வையும் அந்த வாசகத்தைப் படித்துவிட்டு திரும்பியது.

"ஒளிநிலா… போருக்குப் படிப்பா…? படித்திடப் போரா…?" ஒளி நிலா கேள்வியோடு சாந்தியைப் பார்த்தாள். பின் ஒரு முடிவிற்கு வந்தவளாக… "இந்தப் பரீட்சையே என் இறுதிப்பரீட்சை. இந்தப் பரீட்சை முடிவதற்குள், அடுத்த இராணுவ நடவடிக்கை தொடரலாம். இனி இடம்பெயர இடமேயில்லை…" என்று கூறிக் கொண்டு வந்தபோது போராளிகள் இணையும் செயலகம் நெருங்கிவிட்டிருந்தது. சாந்தி கேள்வியோடு ஒளிநிலாவைப் பார்த்தாள்.

"இப்போ வேண்டாம். இன்னும் கொஞ்ச நாள்பார்ப்போம்" என்றாள் சாந்தி, "வீணாக இந்த உடம்பு ஒரு குண்டுக்கோ, நோய்க்கோ அழிந்து போகலாம். இன்று இந்தச் சோதனையில் வெற்றி பெறாமல் விடலாம்… ஆனால்" என்றபோது அவள் விழிகள் தெருவை வெறித்தது.

"சாந்தி இது என்றும் அர்த்தமற்ற காத்திருப்பே…"

"நான் போறன்…" என்ற சொல் காற்றோடுதான் வந்து சாந்தியின் செவிகளில் மோதிக் கொண்டது. ஒளிநிலா போய்க் கொண்டே இருந்தாள்.



# றோகன விஜேவீரவின் இனவாதம்!
# ஜேவிபியின் தமிழர் விரோதம்…!

– நவீனன் –

05.05.2025

சிவப்புப் போர்வையில் தன்னை மறைத்தை வைத்து இருக்கின்ற ஜே.வி.பி ஆனது, பலருக்கும் தெரியாத ஒரு சிங்கள இனவாத அமைப்பு என்பது இப்போது புரிய வரும்.

1960 களின் பிற்பகுதியில் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி என்று அழைக்கப்பட்ட புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து விலகி விஜேவீர, ஜே.வி.பி. இயக்கத்தை 1965 ஆம் ஆண்டு விஜேவீர ஆரம்பித்தார். அவர் கட்சியை விட்டு விலகிச் சென்றதற்கு சில காரணங்கள் இருந்தாலும், அவரது மனதில் இருந்த சிங்கள இனவாதமும் ஒரு காரணமாகும்.






அப்பொழுது கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்த நா.சண்முகதாசன் கட்சியின் முக்கியமானவராக இருந்தார். பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழுகின்ற ஒரு நாட்டில் ஒரு தமிழரான சண்முகதாசனின் தலைமையில் செயல் செயல்பட முடியாது என்பதாகும்.

இதுவே விஜேவீர கட்சியை விட்டு விலகிப் போன பின்னர் கட்சி பற்றி வைத்த விமர்சனங்களில் முக்கியமானதாகும்.

ஜே.வி.பியின் 1971 ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சி நடந்து முடிந்து பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஜே.வி.பி. அந்தக் கிளர்ச்சியின் பின்னணி பற்றித் திரும்பிப் பார்த்தால் தான் பல உண்மைகள் வெளிவரும்.

## 1983 ஜேவிபியின் இனவாதம்:



1983இல் சிறீலங்காவின் தலைநகரில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த தமிழரின் பாரிய தொழில் நிறுவனங்களான மகாராஜா நிறுவனம், சென்ற் அந்தனீஸ் நிறுவனம் போன்ற நூற்றுக் கணக்கான நிறுவனங்கள் இனங்காணப்பட்டுத் தேடித் தேடி எரிக்கப்பட்டன.

இதன் பின்னணியில் அப்போதைய ஆளும் கட்சி மாத்திரமின்றி, ஜேவிபியும் முக்கிய பங்காற்றியது என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

இனவெறி கொண்ட சிங்கள காடையர்கள் கொள்ளையிலும் கொலையிலும் ஈடுபட, ஜேவிபியும் திட்டமிட்டு தமிழரின் தலைநகரப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்துத் தமிழரை துரத்தத் தலைப்பட்டது.

1981இல் யுஎன்பி அரசு தமிழரின் அறிவைச் சீர்குலைக்க நூலகத்தை எரித்து தலையிலே கையை வைத்தது எனலாம். ஆனால் ஜேவிபியோ பொருளாதாரத்தை முடக்கி தமிழரின் மடியிலே கையை வைத்தது என்றே கூறலாம்.

## சமாதானத்தின் எதிரிகள் யார்?

2004 சமாதான பேச்சு வார்த்தை நடந்த காலகட்டத்தில் இலங்கையில் இனவாத பதட்ட நிலைமைகளை உக்கிரப்படுத்துவதன் ஒரு பாகமாக, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) பல்வேறு இனவாத பேரணிகளை நடத்தியது என்பது நினைவிருக்கலாம். சமாதானத்தின் உண்மையான எதிரிகள் யார்? என்ற தலைப்பில் இலங்கை தீவு பூராவும் பல தொடர் விரிவுரைகளை நடத்தி வந்தது.

ஜே.வி.பி சமாதானத்திற்கு சார்பாக பேசியதாக கூறிக் கொண்ட போதிலும் இந்த விரிவுரைகளின் முழு இலக்கும் நாட்டை மீண்டும் யுத்தத்திற்குள் தள்ளுவதாகும் என்பதை மறுக்க முடியாது.

2004 ஏப்ரல் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது சிறுபான்மை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமும் இடைநிறுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதான பேச்சு வார்த்தைகளை மீண்டும் தொடங்க தற்காலிகமாக முயற்சித்தனர்.

ஆயினும், அக்காலத்தில் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளியான ஜே.வி.பி, பேச்சுவார்த்தைகளை எதிர்த்து பிரச்சாரத்தில் ஈடுபட்டது. இந்த பேச்சுவார்த்தைகள், இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான தனது பிரேரணையின் அடிப்படையில் இடம்பெற்றது
.

இலங்கை இராணுவத்தின் வீரம் செறிந்த இராணுவ பிரச்சாரத்தை பற்றி பரிந்து பேசுவதன் மூலம், 2002 யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஆரம்பத்திலேயே எதிர்த்த இராணுவத் தலைவர்களின் பிரிவுகளுடன் நேரடியாக ஜே.வி.பி அணி திரண்டது.

## இந்திய எதிர்ப்பு வாதம் :

1971 கிளர்ச்சிக்கு முன் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் சண்முகதாசன் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு மலையகத் தோட்டங்களில் கூலி வேலை செய்யும் தமிழர்களை வைத்து இலஙகையில் புரட்சி செய்யலாம் என எண்ணுகிறார் என்றும், அது தவறு என றோகன வாதிட்டு வந்தார் .

அவரது இந்த விமர்சனத்தின் அடிப்படையில்தான் ஆரம்ப காலத்தில் அவர் தனது புதிய உறுப்பினர்களுக்கு வைத்த 5 அரசியல் வகுப்புகளில் “இந்திய விஸ்தரிப்பு வாதம்“ என்பதும் ஒன்றாக இருந்து, அந்த இந்திய விஸ்தரிப்புவாதத்தின் கைக்கூலிகள் மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் எனப் பிரச்சாரம் செய்ததுமாகும்.

ஜே.வி.பி.யின் அரசியல் வரலாற்றை சுருக்கமாக பாத்தால், தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முயற்சியையும் ஒரு போதுமே அது ஆதரிக்கவில்லை என்பது தெளிவாகும். சிறுபான்மை இனங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு ஆதரவாக நிற்கும் முற்போக்கு அரசியல் சக்திகளுடன் தன்னை அடையாளம் காட்டிக்கொண்டதில்லை என்பதையும் வரலாற்றச் சான்றுடன் உணர்த்தி உள்ளது.

**விடுதலைப் புலிகளின் மனோதிடத்தையும் உறுதியையும் அழித்து விட சிங்கள இராணுவத்தால் முடியாது. மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும் உன்னத இலட்சியப் பற்றும் எங்களுக்கு உண்டு.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

## 1971 ஆயுதக் கிளர்ச்சி :

ஜே.வி.பி. 1971 ஏப்ரலில் நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட ஆயுதக் கிளர்ச்சியின் பின்னணி என்ன என்ற முக்கியமான ஒரு கேள்வி இன்று வரை தொடர்ந்து இருந்து வருகிறது. முக்கியமாக அன்று ஒரு புரட்சிக்கான சூழல் நாட்டில் இருந்ததா என்ற கேள்வியும் எழுகிறது.

ஜே.வி.பியின் 1971 ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சி நடந்து முடிந்து 54



ஆண்டுகள் சென்று விட்டன. ஆனால் ஜே.வி.பி. கிளர்ச்சிக்கு ஒரு வருடம் முன்னர் தான், அதாவது 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் அவரது சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி என்பனவும் கூட்டாக அமைத்திருந்த "மக்கள் முன்னணி" மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்திருந்தது.

இந்தத் தேர்தலில் ஜே.வி.பி. மக்கள் முன்னணிக்கு ஆதரவாக சில தேர்தல் தொகுதிகளில் பிரச்சார வேலை செய்திருந்தது. மக்கள் செல்வாக்கு மிகுந்த ஒரு முன்னணி ஆட்சிக்கு வந்திருந்த ஒரு சூழலில் ஜே.வி.பி. ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டது தேவையற்ற வேலை என்றும் சில அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

## ஜே. ஆரின் விசுவாசி?

உண்மையில் அன்று ஜே.வி.பியை ஏகாதிபத்திய சக்திகளும், ஐக்கிய தேசியக் கட்சியும் பயன்படுத்தியுள்ளன என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

ஜே.வி.பி. கிளர்ச்சிக்கு ஒரு வாரம் இருக்கையில் அன்றைய ஐ.தே.க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ஜே.ஆர். ஜெயவர்த்தன பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் போது, "நான் இன்று ஒரு இளைஞனாக இருந்தால் ஜே.வி.பியில்தான் இருப்பேன்" என்றும் கூறினார்.

அவரது பேச்சை அன்று ஐ.தே.கவுக்கு ஆதரவாக இருந்த லேக்ஹவுஸ் பத்திரிகைகள் கொட்டை எழுத்துகளில் பிரசுரித்தன. அது மாத்திரமின்றி, ஜே.வி.பி. கிளர்ச்சிக்கு இரண்டு நாட்கள் முன்னதாக, அதாவது 1971 ஏப்ரல் 2 ஆம் திகதி ஜே. ஆரின் அந்தப் பேச்சை லேக்ஹவுஸ் நிறுவனம் வெளியிடும் ஆங்கிலப் பத்திரிகையான "டெயிலி நியூஸ்" திரும்பவும் மறு பிரசுரம் செய்தது. இதன் நோக்கம் என்ன? இது எதற்கான சமிக்ஞை? என்பதை அறியலாம்.

1971 இல் சிறீமாவோ பண்டாரநாயக்க அரசுக்கெதிரான ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களில் கணிசமானோர் இந்த ஐ.தே.க. இளைஞர்களே. அதனால்தான் சிறீமாவோ பண்டாரநாயக்க அரசால் அன்று கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜேவீர உட்பட கிளர்ச்சியில் ஈடுபட்ட அனைவரையும் 1977 இல் ஜே.ஆர். ஆட்சிக்கு வந்ததும் நிபந்தனையின்றி விடுதலை செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



**சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு விலகிச் சென்றதற்கு காரணங்கள் இருந்தாலும், றோகன விஜேவீரவின் மனதில் இருந்த சிங்கள இனவாதமும் ஒரு காரணமாகும்**

உண்மை எனனவென்றால், 1971 ஏப்ரலில் ஆயிரக்கணக்கான அப்பாவி இளைஞர்களைப் பலி கொடுத்து ஜே.வி.பி. செய்த ஆயுதக் கிளர்ச்சியின் பின்னணியில் இருந்தது ஐ.தே.கவும், அதன் ஏகாதிபத்திய எஜமானர்களுமே காரணம் என்பதை பலரும் அறிவார்கள்.

## அனுரவின் இனவாத வரலாறு

தற்போதய ஜனாதிபதி அனுர 1995 ஆம் ஆண்டிலிருந்து சிங்கள அரசியலில் இருந்து வருகிறார். அத்துடன் 2000 ஆண்டு முதல் பாராளுமன்றில் உறுப்பினராக இருக்கிறார்.

2002 ரணில் கொண்டு வந்த சமாதானத்தை சிதைத்ததில் அனுர முக்கிய பங்கு வகித்தார் என்ற குற்றச்சாட்டும் பரவலாக உள்ளது.

மகிந்தவை யுத்தத்திற்குள் தள்ளியது அனுர என்றும் பரவலான குற்றச்சாட்டும் உள்ளது.

இறுதி யுத்தம் நடைபெற்ற வேளையில், இறுதி நொடியில் ஒரு நிமிடம் கூட யுத்த நிறுத்தம் செய்ய விடாது தடுத்தது ஜேவிபியின் அனுர ஆதரவாளர்கள் கூட்டம் என்று பரவலாக நம்பப்படுகிறது. மேலும் 2005 இலங்கை இராணுவத்திற்கு ஜே.வி.பி மூலமாக படைகளை திரட்டிக் கொடுத்தது என்பதை அநுர குமாரவே பகிரங்கமாக அறிவித்தார். அந்த இராணுவம் தான் தமிழர் மீது இனப்படுகொலை புரிந்தது. தமிழ சகோதரிகளை கற்பழித்து படுகொலை செய்ததும் உலகறிந்ததே.

தமிழரின் பூர்வீக தாயகத்தை பிரிப்பதில் முன்னின்றதும் ஜே.வி.பி தான். இணைந்த வடக்கு கிழக்கையும் நீதிமன்றம் சென்று பிரித்தது அனுரவின் கட்சியினர் தான் காரணம் ஆவார்கள்.















# தந்தை செல்வாவின் 48ஆம் ஆண்டு நினைவு

26.04.2025

அறிந்தும் அறியாத உண்மைகள்..!

தந்தை செல்வா இயற்கை எய்திய நாள் 1977 ஏப்ரல்,26.

அவர் இறப்பதற்கு முன் சரியாக 11 மாதங்கள், 12, நாட்கள் முன் அவர் இறுதியாக கூறியது மட்டுமல்ல அவரால் இறுதியாக நிறைவேற்றப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வட்டுக்கோட்டை பிரகடனம்.

1976.8.14, ..!

தந்தை செல்வா (சா.ஜே.வே.செல்வநாயகம்) தலைமையில் வட்டுக்கோட்டை பண்ணாகம் ஊரில் மெய்கண்டான் வித்தியாலய மைதானத்தில் குறித்த மாநாட்டில் தந்தை செல்வாவால் முன்மொழியப்பட்டு, உடுப்பிட்டி மு.சிவசிதம்பரத்தினால் வழிமொழியப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் முக்கிய பகுதிகள் இப்படித்தான் அமைந்தன:

“இலங்கைத் தமிழர்கள் தங்களின் தொன்மைவாய்ந்த மொழியினாலும் மதங்களினாலும் வேறான கலாசாரம், பாரம்பரியம் ஆகியவற்றினாலும் ஐரோப்பிய படையெடுப்பாளர்களின் ஆயுதப்பலத்தினால் அவர்கள் வெற்றி கொள்ளும் வரை பல நூற்றாண்டுகளாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தனிவேறான அரசாகச் சுதந்திரமாக இயங்கிய வரலாற்றின் காரணமாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக தமது சொந்தப் பிரதேசத்தில் தம்மைத்தாமே ஆண்டுகொண்டு தனித்துவமாகத் தொடர்ந்திருக்கும் விருப்பம் காரணமாகவும் சிங்களவர்களிலிருந்து வேறுபட்ட தனித் தேசிய இனமாகவுள்ளனரென, இத்தால் பிரகடனப்படுத்துகின்றது.

1972 இன் குடியரசு அரசியலமைப்பு தமிழ் மக்களைப் புதிய காலனித்துவ எசமானர்களான சிங்களவர்களால் ஆளப்படும் ஓர் அடிமைத் தேசிய இனமாக ஆக்கியுள்ளதென்றும் தமிழ்த் தேசிய இனத்தின் ஆட்சிப்பிரதேசம், மொழி, பிரசாவுரிமை, பொருளாதார வாழ்க்கை, தொழில் மற்றும் கல்வி வாய்ப்புக்கள் ஆகியவற்றை இழக்கச்செய்வதற்கு சிங்களவர்கள் தாம் முறைகேடாகப் பறித்துக் கொண்ட அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றனரென்றும் அதன்மூலம் தமிழ் மக்களின் தேசியத்துக்கான இயற்பண்புகள் யாவும் அழிக்கப்படுகின்றனவென்றும் இம்மாநாடு உலகுக்கு அறிவிக்கின்றது.

தமிழ் ஈழம் என்ற தனிவேறான அரசொன்றைத் தாபிப்பதற்கான அதன் ஈடுபாட்டுக்கடப்பாடு தொடர்பில், வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியே வாழ்கின்றவர்களும் வேலை செய்கின்றவர்களுமான பெரும்பான்மையான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஒரு தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளிப்படுத்திய அதன் ஒவ்வாமைகளைக் கருத்தில் கொள்கின்ற அதேவேளையில், ஒவ்வொரு தேசிய இனத்தினதும் உள்ளியல்பான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறைமை பொருந்திய, சமயச் சார்பற்ற, சமதர்மத் தமிழீழ அரசை மீட்டளித்தலும் மீள உருவாக்குதலும் இந்நாட்டில் தமிழ்த் தேசிய இனம் உள தாயிருத்தலைப் பாதுகாக்கும் பொருட்டுத் தவிர்க்க முடியாததாகி உள்ளதென இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

இம்மாநாடு மேலும் பிரகடனப்படுத்துவதாவது:

(அ) தமிழ் ஈழ அரசு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்பதுடன் இலங்கையின் எந்தப்பகுதியிலும் வசிக்கின்ற தமிழ் பேசுகின்ற மக்களுக்கும் தமிழ் ஈழத்தின் பிரசாவுரிமையை விரும்பித் தெரிகின்ற உலகின் எப்பகுதியிலும் வசிக்கின்ற ஈழ வம்சாவழித் தமிழர்களுக்கும் முழுமையான, சமமான பிரசாவுரிமைகளை உறுதிப்படுத்தவும் வேண்டும். தமிழ் ஈழத்தின் ஏதேனும் சமயத்தைச் சேர்ந்த அல்லது ஆட்சிப்பிரதேசத்தைச் சேர்ந்த சமூகமொன்று வேறு ஏதேனும் பிரிவினரின் மேலாதிக்கத்திற்கு உட்படாதிருத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு தமிழ் ஈழத்தின் அரசியலமைப்பு சனநாயகப் பன்முகப்படுத்தற் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

(ஆ) தமிழ் ஈழ அரசில் சாதி ஒழிக்கப்பட வேண்டுமென்பதுடன், பிறப்பின் அடிப்படையில் பின்பற்றப்படும் பெருங்கேடான பழக்கமான தீண்டாமை அல்லது ஏற்றதாழ்வு முற்றாக ஒழித்துக் கட்டப்படவும் எவ்வகையிலேனும் அதனைக் கடைப்பிடித்தல் சட்டத்தால் தண்டிக்கப்படவும் வேண்டும்.

(இ) தமிழ் ஈழம் அவ்வரசிலுள்ள மக்கள் சார்ந்திருக்கக்கூடிய எல்லாச் சமயங்களுக்கும் சமமான பாதுகாப்பும் உதவியும்



வழங்குகின்ற சமயச்சார்பற்ற ஓர் அரசாக இருக்க வேண்டும்.

(ஈ) தமிழ் அரச மொழியாக இருக்க வேண்டும். எனினும் தமிழ் ஈழத்தில் சிங்களம் பேசுகின்ற சிறுபான்மைகள் அவர்களின் மொழியில் கல்வியையும் அலுவல்களையும் தொடர்வதற்கான உரிமைகள் சிங்கள அரசிலுள்ள தமிழ் பேசும் சிறுபான்மைகள் பாதுகாக்கப்படும் சரி எதிரிடையான அடிப்படையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

(உ) தமிழ் ஈழத்தில் மனிதனால் மனிதன் சுரண்டப்படுதல் தடை செய்யப்படும். உழைப்பின் மகத்துவம் பாதுகாக்கப்படும். சட்டத்தினால் அனுமதிக்கப்படும் எல்லைகளுக்குள் தனியார் துறையின் இருப்புக்கு அனுமதி வழங்கப்படுகின்ற அதே வேளையில், பண்டங்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன அரச உரிமையின் கீழ் அல்லது அரச கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்படும். பொருளாதார அபிவிருத்தி சோசலிசத் திட்டமொன்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும். ஒரு தனிநபரின் அல்லது குடும்பத்தின் செல்வம் தொடர்பில் உச்சவரம்பு விதிக்கப்படும். இவ்வகையில் தமிழ் ஈழம் ஒரு சமதர்ம அரசாக இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்துக்கான செயற்றிட்டமொன்றை மிதமிஞ்சிய தாமதமின்றி வகுத்தமைத்து அதனைத் தொடங்கவேண்டுமென தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயற்குழுவை இம்மாநாடு பணிக்கின்றது.

மேலும் இம்மாநாடு, சுதந்திரத்துக்கான இப்புனிதப்போரில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க முன்வரும்படியும் இறைமையுள்ள தமிழ் ஈழ அரசென்ற இலக்கு எட்டப்படும் வரை அஞ்சாது போரிடும் படியும் பொதுவில் தமிழ்த் தேசிய இனத்துக்கும் குறிப்பாக தமிழ் இளைஞர்களுக்கும் அறைகூவல் விடுக்கின்றது.

இதுதான் தந்தை செல்வா சாவதற்கு முன் முன்மொழியப்பட்ட தீர்மானம்(பிரகடனம்) ஆகம்.

தந்தை செல்வா இறந்து இன்று 26.04.2025, 48ஆம் ஆண்டுகள் கடந்துள்ளது.

வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இன்னும் 18, நாட்களால் 49, வருடங்கள் எட்டுகிறது 14,6,2025, . 1976, மே, 14, ல் வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கான வடக்கு கிழக்கு மக்களின் ஆணையை பெறும் தேர்தலாக 1977, யூலை,21இல் வடகிழக்கில் 23, தொகுதிகளில் தமிழர் விடுதலை கூட்டணி வேட்பாளர்களை போட்டியிட வைத்தது அதில் 18, தொகுதிகளில் ஆணை கிடைத்தது.

மொத்தவாக்குகள் 421,488.

தோல்வியடைந்த 05 தொகுதிகள்:

1. கல்குடா தொகுதி இதில் சம்மந்தமூர்த்தி தோல்வி, இவரை எதிர்த்து ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்ட கே.டவிலியூ, தேவநாயகம் வெற்றிபெற்று நீதி அமைச்சரானார்.

2. மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் செ. இராசதுரை தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் 26,648 வாக்குகளை பெற்று வெற்றிபெற்றார், காசி ஆனந்தன் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி வீடு சின்னத்தில் 22,443 வாக்குகளை பெற்று தெரிவாகவில்லை, இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் இடம் எம். எல். அகமது பரீத் ஐ.தே.கட்சி 25,345 வாக்குகளை பெற்று இரண்டாவது பா.உ, தெரிவானார்.

3. மூதூர் தொகுதி எஷ்.எம். மக்கீன் தோல்வி.

4. கல்முனைத்தொகுதி ஏ.எம்.சம்சுதீன் தோல்வி.

5. சம்மாந்துறை தொகுதி எச்.எல்.எம்.காசீம் தோல்வி.

1977இல் இலங்கை தேர்தல் வரலாற்றில் முதல்தடவையாக தமிழர் விடுதலை கூட்டணி 18, ஆசனங்களுடன் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்கட்சி தலைவரானார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் கவனிக்கவேண்டியது அப்போதைய தந்தை செல்வா இறந்ததற்குப்பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமை இரண்டு தவறுகளை செய்துள்ளது என்பது உண்மை.

1. மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் இரண்டு தமிழர்களை இறக்கி செ.இராசதுரையையை தோற்கடிக்க காசி ஆனந்தனையும் வேட்பாளராக்கியபோதும் செ.இராசதுரையே வெற்றிபெற்றார்.

2. மட்டக்களப்பு இரட்டை தொகுதி தமிழர் ஒருவரும், முஷ்லிம் ஒருவரும் தெரிவாகுவதற்காகுவதே வழமை. அதனை முறியடிக்க இரண்டு தமிழர்களை ஒரே தொகுதியில் ஒரே தமிழ்த் தலைமை வேட்பாளர்களாக நிறுத்தியது மிகத்தவறான முடிவு. ஆனால் தந்தை செல்வா உயிருடன் இருந்திருந்தால் இதனை அனுமதித்திருக்க மாட்டார் என்பதே உண்மை.

-பா.அரியநேத்திரன்-

www.sangathamil.ca

# “நாங்கள் போராடுவோம் சரணடைய மாட்டோம்”

## விடுதலைப்புலிகளின் சமர் ஆய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. யோகி யோகரத்தினம்

மே 2009

போரின் இறுதி நாட்களில் (மே மாதம் 2009) முள்ளிவாய்க்காலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமர் ஆய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு.யோ.செ.யோகி அவர்கள் ஆற்றிய அவரது இறுதி உரையை எழுத்து வடிவில் தரப்பட்டுள்ளது. அவரது உரையின் முழுமையான வடிவம்:

நீண்ட நெடிய எங்களது விடுதலைப் போராட்ட வரலாற்றில் நாங்கள் மிகவும் நெருக்கடியான ஒரு காலகட்டத்திலே நிற்கிறோம். நாங்கள் நம்பிக்கை இழந்து, உளவுரண் உடைந்து எதிரியிடம் சரணடைய வேண்டும் என்பது எதிரியின் விருப்பம் மட்டுமல்ல, இந்த உலகத்தின் விருப்பமும் கூட. நாங்கள் மில்லரை, திலீபனை, அன்னை பூபதியை எல்லாம் ஒரு குறியீடாகத் தான் பார்க்கின்றோம். அந்தக் குறியீடு என்பது நெருக்கடி வர வர நாங்கள் நிமிர்ந்து நின்று போராடுவோம்; எந்த நெருக்கடிக்குள்ளும் நாம் போராடுவோம்; இறுதிவரை போராடுவோம் என்பதை சுட்டி நிற்கின்றது.

ஈற்றில் நாங்கள் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கையோடு தான் நாங்கள் வாழ்ந்திருக்கின்றோம். போராடியிருக்கின்றோம். இன்றும் போராடிக்கொண்டிருக்கின்றோம். இந்த நம்பிக்கையை நாங்கள் இழந்துவிடக் கூடாது.

வடமராட்சியில் “ஒப்பரேசன் லிபரேசன்” இராணுவ நடவடிக்கை நடைபெற்ற போதும், இந்தியப் படை வந்தபோதும் விடுதலைப் போராட்டம் அழிந்துவிட்டது என்றுதான் குறிப்பிட்டார்கள். ‘ஜெயசிக்குறு’ காலத்திலும் இதே கருத்தைத் தான் முன்வைத்தார்கள்.

ஆனால், போராட்டம் எந்த நெருக்கடிகளைச் சந்தித்த போதும் எழுந்தது; வளர்ந்தது; வீறுகொண்டு பெரிய எல்லைகளைத் தொட்டது. இதனை நாம் மறந்துவிடக் கூடாது.

இன்று உலகம் முழுவதிலும் ஒரு திட்டத்தின் அடிப்படையில், போராடுகின்ற அமைப்பைச் செயலிழக்கச் செய்து, பலமிழக்கச் செய்து, பிறகு ஒரு தீர்வை வைக்க முற்பட்டால் அந்தத் தீர்வு நிலைக்கும் என்ற நம்பிக்கையோடு, அந்தக் கோட்பாட்டோடு - எப்போதுமே இப்படியான கோட்பாடுகள் பிழையானவைதான் என்று தெரிந்தும் - செயற்பட்டு வருகின்றன. அவர்களுக்குச் சிங்கள அரசு சில நம்பிக்கைகளைக் கொடுக்கின்றன.

இவர்கள் எல்லாம் திட்டம் போட்டு செயற்படுகின்றனர். இன்னும் சில காலங்களில், ஒரு பத்து நாளிலோ அல்லது 15 நாளிலோ புலிகள் அழிந்துவிடுவார்கள் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். தான் சொன்னதையே சிங்கள அரசு நம்புகின்றது. அதனையே வெளிநாட்டவர்களும் நம்புகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்றது. தான் சொன்னதையே நம்பிக்கொள்வது சிங்கள தேசம்தான்.

அண்மைக் காலமாக நாம் எதிர்த்து ஒரு வலிந்த தாக்குதலைத் தொடங்கிய போது கூட ஆடிப்போய் நிற்கின்றது. பெரிய அளவில் ஒரு வலிந்த தாக்குதலை நடத்தவேண்டுமாக இருந்தால் எங்களோடு எல்லா மக்களும் ஒன்றிணைந்து நிற்க வேண்டும்.

இந்த உலகத் திட்டம் என்பது எங்களைச் செயலிழக்கச் செய்து, பலமிழக்கச் செய்தபின் ஒரு தீர்வை வைப்பது என்பதாகும். ஆனால், அப்படி ஒரு தீர்வு வைக்கப்படாது எங்களுக்குத் தெரியும்; அது நடைமுறைப் படுத்தப்படாது என்பதும் எங்களுக்குத் தெரியும்.

புலிகள் பலமாக இருக்கின்ற ஒரு நிலையில்தான் தமிழர்களுக்காக சிங்கள தேசம் தீர்வு குறித்துப் பேசும். உலகம் பேசும். இல்லையேல் யாரும் இதைப்பற்றிப் பேச இனி மாட்டார்கள். புலிகள் பலமாக இருக்கவேண்டும் என்று சொன்னால் மற்றவர்கள் உதவவேண்டும் என்றில்லை. இன்றைக்கு இருக்கின்ற மக்களில் வலுவுள்ளவர்கள் எல்லோரும் ஒன்றுதிரண்டு நின்றால் போதும். நாங்கள் போராட முடியும் அதிசயிக்கத்தக்க வகையில் வெற்றிகளைச் சாதிக்க கமுடியும்.

எங்களுக்குப் பின்னால் புலம்பெயர் வாழ் தமிழர்கள் எல்லோரும் இருக்கின்றனர். தமிழ்நாட்டில் இருக்கின்ற தமிழர்கள் எல்லோரும் - ஒரு குறிப்பிட்டவர்களைத் தவிர - எங்களோடு தான் நிற்கின்றனர். இவர்கள் எல்லோரும் உலகெங்கும் இருக்கின்ற மக்களின் மனசாட்சியோடு பேசவேண்டும்.

ஆஸ்திரேலியாவில் காட்டுத் தீயால் 160 பேர் இறந்துபோன போது, பி.பி.சி. போன்ற செய்தி நிறுவனங்கள் அதனை முதன்மைச் செய்தியாகச் சொல்லி அழுதன. உலகம் முழுவதும் அழுகின்றன.

இன்று தமிழீழத்தில் மருத்துவமனைகள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. மருத்துவமனைகள் மீது குண்டுகள் போடப்பட்டு, உணவுகள் தடுக்கப்பட்டு, மருந்துப் பொருட்கள் தடுக்கப்பட்டு,



நான்கு இலட்சம் மக்களுக்கு மேல் ஒரு பாதுகாப்பு வலயம் என்று பொய்க்காக ஒன்றை உருவாக்கி, அந்த வலயத்திற்குள்ளே நாளாந்தம் குண்டுகளை வீசி, 50 இலிருந்து 60 இற்கும் அதிகமான மக்கள் கொல்லப்படும் நிலையில், நாளாந்தம் 100 இற்கும் அதிகமான மக்கள் காயப்படும் நிலை காணக் கூடியதாய் இருக்கின்றது.

கிட்டத்தட்ட ஒரு கிழமைக்குள்ளே 500 இற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். பல ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் காயப்பட்டிருக்கின்றார்கள். அதில் பல குழந்தைகளும் அடங்கும். அதனைப்பற்றியெல்லாம் இந்த உலகம் கருத்தில் கொள்ளாமல் கண்மூடி நிற்பதையும் நாங்கள் இங்கு சுட்டிக் காட்டத்தான் வேண்டும்.

இருந்தபோதும் நாங்கள் நம்பிக்கை இழந்துவிடக் கூடாது. உலகத்தின் மனசாட்சி என்பது உலகத்தின் மக்கள்தான். அந்த மக்களோடு பேசுவோம். அந்த மக்களுக்குத் தொடர்ந்து எங்கள் கருத்துக்களைச் சொல்லிவைப்போம். அதன்மூலம் அரசுகளையும் அதன் எண்ணங்களையும் மாற்ற வைப்போம்.

ஒன்றில் நாங்கள் உறுதியாக இருப்போம். இன்றைக்கு உலக நாடுகள் எல்லாமே இந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்தை அழித்துவிடவேண்டும் என நினைக்கின்றன. குறிப்பாக, தேசியத் தலைவரை அழித்துவிட வேண்டுமென நினைக்கின்றன. அவரை அழித்துவிட்டால், இந்தப் போராட்டத்தில் தாங்கள் நினைக்கின்ற எதனையுமே செய்துவிட முடியும் என்றும், எங்களை அழித்து, எங்கள் போராட்டத்தை இல்லாமல் செய்து, தாங்கள் விரும்பியதைச் செய்யமுடியும் என நினைக்கின்றன.

அது நடக்காது என்பதே வெளிச்சம். இந்தப் போராட்டத்தில் நாங்கள் இறுதிவரை போராடுவோம் என்று சொல்லி வைப்போம். தேசியத் தலைவரின் வழிநடத்தலில் நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு உறுதியாக நின்று போராடுவோம் என்று சொல்லி வைப்போம்.

இன்று காலம் குறித்து நிற்கிறது சிங்கள அரசு. அந்த காலம் சரிவராது என எடுத்துக் காட்டுவோம். அவற்றுக்கு எல்லாம் மேலாக இந்த முற்றுகையினை உடைத்து எங்கள் மண்ணை மீட்கின்ற வகையில் ஒரு போராட்டத்தை எங்களால் தொடர முடியும் என்பதை நாங்கள் எடுத்துக் காட்டுவோம்.

கிட்லர் போன்றவர்கள் கூட படையெடுத்த போது இந்த உலகம் அழிந்துவிடும், உலகத்தில் உள்ள எல்லாமே கிட்லரிடம் வீழ்ந்துவிடும் என்ற போதுகூட பலர் தொடர்ந்து போராடினர். அழிவுக்குள் நின்று போராடினர். அந்த அழிவுக்குள்ளும் நம்பிக்கையோடு போராடினர்.

கிட்லரினும் பார்க்க மிகக் கொடிய ஒரு அரக்கனை, காட்டுமிராண்டியை, மக்களைக் கொலை செய்கின்ற ஒரு மனிதனை, அந்த மனிதனோடு சேர்ந்து ஒரு சிங்கள இனத்தை நாங்கள் எதிர்கொண்டு நிற்கின்றோம். அவனுக்குப் பின்னால் மனசாட்சியற்று நிற்கின்றவர்களை நாங்கள் ஏதோ ஒரு வகையில் மீண்டும் அந்த மனசாட்சியை அவர்களுக்குள் ஆழப் புதைத்து எங்கள் குரலை கேட்கச் செய்யவெண்டும்.

அதற்காக நாங்கள் எங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் நாங்கள் தொடர்ந்து போராடுவோம். இந்தப் போராட்டம் ஒரு குறுகிய காலத்துக்குள் அழிந்துவிடும், அழிக்கப்பட்டுவிடும் என்று சிங்கள தேசம் சொல்வதை நம்பிக்கொண்டு ஒரு திட்டத்தை வகுத்து நிற்கின்ற உலகத்தின் திட்டத்தை மாற்றுவோம். எங்கள் வெற்றிகள், நாங்கள் செய்கின்ற சாதனைகள் மீண்டும் இந்த உலகத்தை எங்களை நோக்கி வரவழைக்கும்.

நாங்கள் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. விடுதலைப் போர் என்பது ஒருகாலமும் மக்கள் போராடுகின்ற போது, மக்கள் உணர்வை இழக்காத போராட்டம் தோற்றது கிடையாது. தேசியத் தலைவர் அவர்கள் எங்கள் மீது வளர்த்தது இந்த ஓர்மத்தை தான். நாங்கள் யாருக்கும் நியாயமற்ற முறையில் செய்யப்படுகின்ற அடக்குமுறைகளுக்கு அடிபணிந்து வாழப்போவதில்லை. நாங்கள் போராடுவோம். பணிய மாட்டோம். சரணடைய மாட்டோம்.

இவ்வாறு உரையாற்றியிருந்தார். இது, முள்ளிவாய்க்காலில் இருந்து ஒலித்த அவரது இறுதிக் குரல்.

# வடக்கில் கட்டப்படும் விகாரைகள்!
# தெற்கில் அழிந்த சைவ ஆலயங்கள்!

– நவீனன் –

29.04.2025

ஈழத்தின் தொன்மையான பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றான தொண்டீஸ்வரம் சிவன் கோவில் இருந்த இடமே தெரியாமல் அழிக்கப்பட்டு விட்டது.

தென் இலங்கையில் உள்ள தேவேந்திர முனையில் மாத்தறையில் காணப்பட்டதாகவும் போர்த்துக்கீசர் காலத்தில் அழிவுற்றதாகவும் வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன.

## பஞ்ச ஈஸ்வரங்கள் நிலை:

இலங்கையில் பல சிவன் ஆலயங்கள் இருந்தாலும், அவற்றில் பஞ்ச ஈஸ்வரங்கள் எனப்படும் ஆலயங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றன.

சிலாபம் நகரில் முன்னேஸ்வரம், திருகோணமலையில் திருகோணேஸ்வரம், மன்னாரில் திருகேதீஸ்வரம், கீரிமலையில் நகுலேஸ்வரம், மாத்தறையில் தொண்டீஸ்வரம் என ஐந்து சிவன் ஆலயங்கள் பஞ்ச ஈஸ்வரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இவ்வாறு காணப்படும் பஞ்ச ஈஸ்வரங்களில் மாத்தறை பகுதியிலுள்ள தொண்டீஸ்வரம் ஆலயம் மாத்திரம் அழிவடைந்து, ஆலயம் இருந்தமைக்கான அடையாளங்களே முற்றாக இல்லாது போயுள்ளன.

### தொண்டீஸ்வரம் சிவன் கோவில்:



விஜயன் (?) இலங்கைக்கு வருவதற்கு முதல் இலங்கையில் பஞ்ச ஈஸ்வரங்கள் இருந்தன. தொண்டீஸ்வரம் மாத்தறையில் இருந்தது. இன்றைக்கு அந்த ஆலயம் முற்றாக அழிந்துவிட்டது அல்லது அழிக்கப்பட்டு விட்டது.

பழமையான பஞ்ச ஈஸ்வரங்களில் ஒரு ஆலயமான தொண்டீஸ்வரம் என்கின்ற தொன்மை வாய்ந்த ஆலயத்தை ஏன் இன்னும் கட்டுவதற்கு முயற்சிக்கவில்லை என்பது தெரியவில்லை.

தொண்டீஸ்வரம் சிவன் கோவில் தொண்டீஸ்வரம் ஆலயம் காணாமல் போனதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. மாத்தறை மாவட்டத்தின் தேவேந்திரமுனை (தெவிநுவர) எனும் பகுதியிலேயே இந்த ஆலயம் இருந்ததாக நம்பப்படுகின்றது.

எனினும், இந்த ஆலயம் தொடர்பான எந்தவித தகவல்களும் தற்போது இல்லாது போயுள்ளதுடன், ஆலயம் முழுமையாக அழிவடைந்து காணாமல் போயுள்ளது.

தேவேந்திரமுனை (தெவிநுவர) பகுதியிலுள்ள பௌத்த விகாரையொன்றில் மாத்திரம், பழமை வாய்ந்த சிவலிங்கம் ஒன்று மற்றும் ஆலயம் ஒன்று காணப்பட்டமைக்கான பழமை வாய்ந்த கற்கள் சிலவற்றை அங்கு காண முடிகின்றது.

தேவேந்திரமுனை பகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயத்திற்கு அருகாமையில் ஒத்பிலிம புராண விகாரை வளாகத்தில் இந்த சிவலிங்கம் மற்றும் சில சான்று பொருட்களை காண முடிகின்றது.

இவ்வாறு காணப்படுகின்ற இந்த சான்றுகளே, தொண்டீஸ்வரம் ஆலயத்தின் சான்றுகளாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. எனினும், இதை தவிர தேவேந்திரமுனையின் எந்தவொரு இடத்திலும் வேறு தொண்மை வாய்ந்த சான்றுகளை அடையாளம் காண முடியவில்லை.

## விகாரைகள் புணர் நிர்மானம் :

ஆனால் அழிந்த பல புராதண விகாரைகள் சிறீலங்கா எங்கும் புணர் நிர்மானம் செய்யப்பட்டுள்ளது. விகாரைகள மீள நிர்மாணிக்கும் சிங்கள அரசு அழிந்து போன சைவ ஆலயங்களை ஒரு போதும் புணர் நிர்மானிப்பதே இல்லை எனலாம்.

உதாரணமாக பொலன்னறுவை நகரில் சோழர்களினால் நிர்மாணிக்கப்பட்ட சிவன் ஆலயத்தை மீள நிர்மாணிக்க அரசாங்கம் ஒரு போதும் நடவடிக்கை எடுக்கவில்லை.



ஆனால் தமிழரின் பாரம்பரிய பகுதிகளில் பௌத்த விகாரைகளை தொடர்ந்தும் நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்து வருவதான தகவல்கள் பல வெளியாகியுள்ளன.

தேவேந்திர முனைப்பகுதியில் கோபுரமும் விக்கிரகங்களும் அகற்றப்பட்டு வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் இன்றி தொல்பொருளியல் திணைக்களத்தினால் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது.

அருகாமையில் வசிக்கும் தென் பகுதி சிங்கள மக்களினால் இது இராவணனினால் வழிபட்ட தலமாகவும் கருதப்படுகிறது.

## சிங்கள ஊராக மாறும் தமிழ் நிலம் :

மாதுறை (பெரிய துறைமுகம்) என்ற பண்டைய தமிழ்ப் பெயர் தான் மாத்தறை என அழைக்கப்படுகிறது. இது போல கள்ளுத்துறை என்ற தமிழப்பெயர் களுத்தற என்றானது போல சிங்கள ஊராக களுத்தறை என மாறி இருக்கலாம் என்றும் கூப்படுகிறது.

அதேபோன்று, மாதோட்டம் என்பது மாதொட்ட(பெரிய துறைமுகம்) என்று இருந்திருக்கலாம். இன்று ஹம்பன்தொட்ட என்றிருக்கும் ஊர் பண்டைக் காலத்தில் பிறநாடுகளில் இருந்து ஹம்பன் என்றழைக்கப்பட்ட படகுகளில் வணிகர்கள் இலங்கைக்கு வந்திறங்கிய துறையாக (தொட்ட) இருந்தது என்றும் சொல்லப்படுகிறது.

ஆனாலும் மறுக்க முடியாத ஒரு உண்மை என்னவென்றால் தமிழர்கள் வடக்கு கிழக்கின் எல்லைகளுடன் மட்டுப்படுத்த தங்கள் ஆலய இருப்பை தக்கவைத்தமை என்பதாகும்.



## பழமையான தொண்டீஸ்வரம் காணாமல் போனதா?

இலங்கையில் பழமையான தொண்டீஸ்வரம் சிவன் கோவில் எப்படி காணாமல் போனது என்று எவருக்கும் தெரியவில்லை. இலங்கையிலுள்ள பல சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டு வந்துள்ளதாக தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்திருக் கிறார்கள்.

அநுராதபுரம் மாவட்டத்தில் மாத்திரம் 117 சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

போத்துக்கீசரால் உடைக்கப்பட்ட தொண்டீசுவரம் ஒரு வர லாற்று சிறப்பு மிக்க சிவன் கோயிலாகும். இக்கோயில் போத்துக் கீசர் ஆட்சியின் போது போத்துக்கீசரால் உடைக்கப்பட்டு (Souza d'Arronches) கத்தோலிக்க கிறித்துவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது என்றும் தொல்லியல் தகவல் மூலம் அறியமுடிகிறது.

பஞ்ச ஈஸ்வரங்கள் என்று குறிப்பிடப்படும் ஐந்து சிவாலயங் களில் நகுலேச்சரம், திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், முன்னேசுவரம் ஆகிய நான்கும் பல்வேறு இடர்பாடுகள் மத்தி யில் இன்றும் சிவாலயங்களாகத் திகழ்கின்றன.

அதேவேளை தெற்கிலிருந்த தொண்டீசுவரம் இலங்கையை ஆக்கிரமித்த போத்துக்கீசியரால் சிதைக்கப்பட்டது. இங்கு மேற் கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது ஒரு பெரிய சிவ லிங்கம் ஒன்று ஆய்வாளர்களால் அகழ்ந்து எடுக்கப்பட்டது.

இருப்பினும் இந்த தகவல் வெளியில் வெளிவராமல் சிங்கள






**அநுராதபுரத்தில் 117 சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டன அல்லது வரலாற்றில் இருந்து காணாமல் போயுள்ளன. பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான தொண்டீஸ்வரம் ஆலயம் முற்றாக அழிந்துவிட்டது அல்லது அழிக்கப்பட்டு விட்டது**

அரசால் தடுக்கப்பட்டதாக வரலாற்று ஆய்வாளரான முருகர் குணசிங்கம் அவர்கள் கூறியுள்ளார்.

தற்போது தொண்டீஸ்சரம் கோயில் இருந்த இடத்தில் ஒரு விஷ்ணு கோயில் அங்கிருந்த சிங்களப் பௌத்த துறவிகளால் எழுப்பப்பட்டுள்ளது. தற்போது தெவிநுவர கோயில் என அழைக் கப்படுகிறது.

### தமிழர் தலைநகரில் :

தமிழரின் தலைநகரான திருகோணமலை பன்குளம் என்ற இடத்தில் இருந்த தமிழ் மக்கள் போர்க்காலத்தில் அவ்விடத்தை விட்டு வடக்கிற்கு அகதிகளாக கலைக்கப்பட்டு விட்டார்கள்.




போர்க் காலத்தில் தம்பலகாமம் தம்பலகமுவ ஆக பெயர் மாற் றம் பெற்றது. புல்மோட்டை புல்மூட்ட ஆகியதும் கதிரவெளி என்ற தமிழ் நிலம் கதுரவெல ஆகியதும் சிங்கள பேரினவாத அரசின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் இடம்பெற்றது.

சிங்களவர்களால் அழிக்கப்பட்ட ஆலயங்கள் அனைத்தும் தொல்லியல் ஆவணங்களில் இருந்து நீக்கப்பட்டன. இலங்கை தமிழ்வேந்தன் இரவணனால் தோன்றி வழிபாடு செய்யப்பட்ட அருள்மிகு ஈஸ்வரன் ஆலயங்களும் அழிக்கப்பட்டன.

தற்போது தொண்டீஸ்வரத்தின் நிலமை Devundara vishnu devalaya என்று அழைக்கப்படுகின்றது. கதிர்காமம் போல் கப்புறாளைகளே அங்கு பூசை செய்கின்றனர்.

### 117 சைவ ஆலயங்களை காணவில்லை:

அநுராதபுரம் மாவட்டத்தில் மட்டும் 117 சைவ ஆலயங்கள் அழிக் கப்பட்டன அல்லது வரலாற்றில் இருந்து காணாமல் போயுள்ளன என இந்து தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர்.

அநுராதபுரம் மாவட்டத்திற்கு பக்கத்தில், பொலன்னறுவை மாவட்டத் தில் இன்றும் சிவன் கோவில் இருக் கின்றது.

ப ாரியளவில் சிதிலமடைந்து காணப்படும் அந்தச் சோழர் காலத்து சிவன் கோவிலை சீரமைக்க சிறீ லங்கா அரசாங்கம் முயற்சிக்க வில்லை.

ஆனால், கௌதாரி மலையிலும், நெடுந்தீவிலும் விகா ரைகளை கட்டலாமா, அல்லது தமிழர்கள் வாழும் இடங்களில் எகட் டலாமா என்று ஒவ்வொரு இடமாக அரசாங்கம் ஆராய்ச்சி செய்து வருகிறது.

மேலும், தொண்டீஸ்வரம் சிவன் கோவிலை சீர மைக்க மட்டு மன்றி, ஆவணப்படுத்த கூட சிறீலங்கா அரசாங்கம் தயாராக இல்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

அநுராதபுரம் மாவட்டத் தில் அழிந்த 117 சைவ ஆலயங்களை கட்டு வதற்கு முன்பாக அந்த கோயில்கள் பற்றிய வர லாற்றையும் அரசு மறைத்து வைத்துள்ளது.

### மன்னாரில் ஆலய அழிவு:

மன்னாரில் மாதோட்டம் என்ற நகரம் தமிழ் மன்னனான மகாது வட்டா என்கின்ற மன்ன னால் ஆளப்பட்டது.

திருக்கேதிஸ்வரம் ஆலயம் இந்த மன்ன னால் தான் கட்டப்பட்டது.

மன்னார் துறைமுகம் நோக்கி மூன்று கோட் டைகள் அதாவது காந்த கோட்டை, இரும்பு கோட்டை, வெள்ளி கோட்டை என்பன இந்த மன்னனால் கட்டப்பட்டதுஎன்பதை வரலாற்று சான்றுகள் கூறுகின்றன.

ஈழந்தமிழ் மக்களின் வரலாற்றை ஆராயும் ஆராய்ச் சியாளர்கள், அழிக்கப்பட்ட சிவ ஆலயங்கள் தொடர்பான வர லாறுகள் ஆராயப்பட்டு உண்மை வெளிக்கொண்டு வரப்பட வேண்டும். இலங்கையில் தமிழர் சரித்திர நாகரிகம் மிகத் தொன்மை வாய்ந்தது.

அழிந்து போன ஆலயங்கள் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக் கழகங்களுக்குச் சமர்ப்பிக்க, தமிழ் ஆர்வலர்கள் முன்வரவேண்டும்.



# தீர்க்கப்படாத காஷ்மீர் பிணக்கு: மீண்டும் இந்திய – பாகிஸ்தான் முறுகல்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

24.04.2025

தெற்கு காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த 22.4.25 செவ்வாய்க்கிழமை அன்று நடந்த கொடூர தாக்குதலில் சுமார் 25 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர்.

## பஹல்காமில் கொடூர தாக்குதல்:

சுற்றுலா தலமாக விளங்கும் பஹல்காமில் நடந்த தாக்குதல் பலரையும் அதிர்ச்சி அடைய செய்துள்ளது. அண்மைய ஆண்டுகளில் பொது மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இது மிகப் பெரிய கொடுமை என ஜம்மு காஷ்மீர் மாநில முதல்வர் உமர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.



பஹல்காமின் பைசரன் பள்ளத்தாக்கு காடுகள், தெளிவான நீர் நிறைந்த ஏரிகள், பரந்த புல்வெளிகளுக்கு பெயர்பெற்ற இந்த பகுதிக்கு கால்நடையாகவோ அல்லது குதிரை மூலமாகவோ மட்டுமே செல்ல முடியும். இங்கு சென்ற சுற்றுலாப் பயணிகளை நெருக்கமாக நிறுத்தி துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட இந்த கொடிய தாக்குதலுக்கு பாகிஸ்தானை தளமாகக் கொண்ட அமைப்பான லஷ்கர்-இ-தொய்பாவின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் (TRF) பொறுப்பேற்றுள்ளது.

அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் இந்த தருணத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது ஒரு திட்டமிட்ட தாக்குதலாகவும் கருதப்படுகிறது.

## இந்தியா இராணுவ நடவடிக்கை ?

இந்த தாக்குதலை யார் செய்தார்கள் என்பதை இந்தியா தீர்மானித்த பிறகு, பதிலடி நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஆனாலும் எதிர்வரும் வாரங்களில் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா இராணுவ நடவடிக்கை எடுக்கக் கூடும் என்று பாகிஸ்தான் முன்னணி பத்திரிகையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தியா இராணுவ நடவடிக்கை மே மாதத்தின் கடைசி வாரத்தில் எடுக்க அறுபது சதவீத வாய்ப்பு உள்ளது என்றும் மற்றொரு ஊடகவியலாளர் குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீர் சகோதரர்களின் போராட்டத்தை மறக்க முடியாது என ஒரு வாரத்திற்கு முன்பு பாகிஸ்தான் இராணுவத் தலைவர் ஜெனரல் முனீர் தெரிவித்த கருத்து வெளியானதன் பின்னர் இந்த கோர நிகழ்வு நடந்துள்ளது.

## காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே !

காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே அங்கு வாழும் மக்களின் அடிப்படை உரிமைக் குரலாக இருக்கிறது. காலங்கடந்தும் தீராத பதில் தான் ஒன்று தான். அதுவே காஷ்மீர் இந்தியாவுக்கும் இல்லை, பாகிஸ்தானுக்கும் இல்லை. வரலாற்று உண்மையாக இருவருக்கும் சொந்தமில்லை, காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே யதார்த்தமாகிறது.

வரலாற்று ரீதியில் இந்தியா சுதந்திரம் அடைந்ததும் இந்திய நிலப்பரப்பில் அடங்கி இருந்த சமஸ்தனங்கள் இந்தியாவோடும், பாகிஸ்தான் நிலப்பரப்பில் அமைந்த சமஸ்தானங்கள் பாகிஸ்தானோடும் இணைந்தன.

புவியியல் ரீதியாக இரண்டில் இருந்தும் ஒதுங்கி இருந்த காஷ்மீர் தனி நாடாகவே இருந்து விட்டது. மக்கள் தொகையில் பெரும்பாலானோர் முஸ்லீம்களாகவும் மன்னர் இந்துவாகவும் இருந்தும் கூட எந்தப் பிணக்கும் அங்கு பாரிய அளவில் அக்காலத்தில் ஏற்படவில்லை.

பாகிஸ்தான் பேராசைப்பட்டது போல காஷ்மீர மக்கள் முஸ்லீம்கள் என்பதால் தாங்கள் படையெடுத்துச் சென்றால் நம்மை ஆதரிப்பார்கள் என்று தப்பு கணக்கு போட்டு பாகிஸ்தான் உள்ளே நுழைய நாட்டைக் காக்க மன்னர் ராம்சிங் இந்திய இராணுவத்தின் உதவியை நாடினார்.

## காஷ்மீரின் தொடர் பிணக்கு :




1947 பிரிவினையின் போது பாகிஸ்தான் ஆக்கிரமித்த பகுதியை பாகிஸ்தான் எடுத்துக் கொள்ள, இந்தியப் படைகள் நுழைந்த பிறகு மிஞ்சிய பகுதிகளை இந்தியா இணைத்துக் கொண்டது. அன்று பிடித்தது அந்த நிலப்பரப்பிற்கும் காஷ்மீர் மக்களுக்கும் தீராத வலி.

1940களின் இறுதியில் காஷ்மீரை இந்தியாவோடு இணைத்த போது நேரு அப்போது சில உரிமைகளை அரசியல் சாசனப் பிரிவிலேயே எழுதிக் குடுத்தார். ஆனால் அவைகள் தான் தற்போது நீக்கப்பட்டு இருக்கின்றன.

இந்தியாவும், பாகிஸ்தானும் சுதந்திரம் பெற்றது முதல் தீர்க்கப்படாத பிரச்சினையாக காஷ்மீர் விவகாரம் இருந்து வருகிறது. நிலப்பகுதிகள் ஆக்கிரமிப்பு, அதனைத் தொடர்ந்து போர் அல்லது இராணுவ நடவடிக்கை நடைபெறுவதும் காஷ்மீரில் தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த விவகாரத்துக்காக இந்தியாவும், பாகிஸ்தானும் ஐ.நா.வரை சென்று குரல் எழுப்பிய வரலாறும் தொடர்ந்து நடந்து வந்துள்ளது.

## பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு :

**காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே அங்கு வாழும் மக்களின் அடிப்படை உரிமைக் குரலாக இருக்கிறது. காலங்கடந்தும் தீராத பதில் தான் ஒன்று தான். அதுவே காஷ்மீர் இந்தியாவுக்கும் இல்லை, பாகிஸ்தானுக்கும் இல்லை. வரலாற்று உண்மையாக இருவருக்கும் சொந்தமில்லை, காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே யதார்த்தமாகிறது**

1947-ம் ஆண்டு அக்டோபர் மாதம் பாகிஸ்தான் பழங்குடி மக்களைக் கொண்ட படை காஷ்மீருக்குள் நுழைந்தது. தற்போதைய பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியை வளைத்தது. பாகிஸ்தான் இராணுவம் பின்புலத்தில் இருந்து செயல்பட்டது.

வேறு வழியில்லாத சூழலில் மன்னர் ஹரி சிங், இந்தியாவிடம் இராணுவ உதவி கோரினார். காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க அவர் சம்மதித்தார். அப்போது பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் மன்னர் ஹரி சிங் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

காஷ்மீர் இந்தியாவுடன் இணைய ஒப்புக்கொண்டது. அதன் பாதுகாப்புக்கு இந்தியா முழு பொறுப்பேற்றது. இருப்பினும் பாகிஸ்தான் காஷ்மீரின் குறிப்பிட்ட பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டதால் நேரு, ஐ.நா.விடம் முறையிட்டார்.

இதனைத் தொடர்ந்து ஐ.நா. சபையின் தீர்மானத்தின்படி பாகிஸ்தான் படைகளும் தங்கள் பகுதிக்குள் இருக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தற்போதைய நிலையில் கட்டுப்பாட்டுக் கோடு உருவாக்கப்பட்டது. இன்றவுளவும் அதுவே காஷ்மீரின் பாகிஸ்தானுடனான தார்மீக எல்லையாக இருந்து வருகிறது.

## 1962 இந்தியா – பாக். போர்:

இந்தக் காரணத்தை முன்வைத்தே இரு நாடுகள் இடையே போர்களும் நடந்துள்ளன. 1962ம் ஆண்டு முதல் இந்தியா - பாக். போர் மூன்று தடவைகள் நடந்துள்ளது.

1989-ம் ஆண்டுக்குப் பிறகு காஷ்மீரில் தீவிரவாதம் புதிய வடிவத்தை எடுத்தது. காஷ்மீர் தீவிரவாதமும், அதனைத் தூண்டி விடும் பாகிஸ்தானும் இன்றளவும் இந்தியாவுக்குப் பெரிய தலைவலியாக இருந்து வருவதாக மத்திய அரசு குற்றஞ்சாட்டி வருகிறது.

அரசியல் ரீதியாக காஷ்மீர் பல துண்டுகளாகி விட்டன. தேசிய மாநாட்டுக் கட்சி மட்டுமின்றி மக்கள் ஜனநாயக கட்சியும் காஷ்மீர் பள்ளத்தாக்கு மக்களின் கட்சியாக விளங்குகிறது.




பாஜகவும், காங்கிரஸும் ஜம்மு பகுதியை பிரதிநிதித்துவப்படுத்த மத முரண்பாட்டை பயன்படுத்துவதுடன், அரசியல் மட்டுமின்றி பிரிவினைவாதம், தீவிரவாதம் என பல வடிவங்களைக் கொண்ட சிக்கல் நிறைந்த பிரச்சினையாக காஷ்மீர் உருவெடுத்துள்ளது.




## காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு சொந்தம் !

ஆயினும் காஷ்மீரிகள் பல்லாண்டுகளாக தொடரும் அடக்குமுறைகளின் மத்தியிலும், இன்னமும் தங்கள் சுய அடையாளத்தை இழக்கவில்லை. அவர்களைப் பொறுத்த அளவில் அவர்கள் இந்தியரும் அல்ல! பாக்கிஸ்தானியரும் அல்ல! காஷ்மீரிகள்!! இந்த இரு நாட்டிற்கும் சொந்தமில்லை, காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே உண்மை.

காலங்கடந்தும் தீராத பதில் தான் ஒன்று தான். அதுவே இந்தியாவுக்கா அன்றில் இல்லை பாக்கிஸ்தானுக்கோ இல்லை. வரலாற்று உண்மையாக இருவருக்கும் சொந்தமில்லை, காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே யதார்த்தமாகிறது.



# உலகத்தமிழர் உரிமைக்குரல்
## (Voice of Global Tamil Rights)
### அமைப்பினரால் கனடாவில் நடைபெற்ற
## பிரபாகரன் சாள்ஸ் அன்ரனி நூல் வெளியீட்டின் சில பதிவுகள்

மே 03 2025





















# மகாவம்சம் எவ்வாறு உலக மரபுரிமையானது?

**என். சரவணன்**

உலகிலேயே தொடர்ச்சியாக வரலாற்றைப் பதிவு செய்துவரும் இரு முதன்மை நாடுகளில் இலங்கையும் ஒன்று. முதல் நாடாக சீனாவைக் குறிப்பிடலாம் சுமார் மூவாயிரத்துக்கு அதிகமான ஆண்டுகளாக சீன இவ்வாறு வரலாற்றைப் பதிவு செய்து வருகிறது. இலங்கை 2,500 வருடகாலமாக வரலாற்றைப் பாரம்பரியமாகப் பதிவு செய்துவரும் நாடாக இலங்கை திகழ்கிறது.

அப்படிப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புராதன மகாவம்ச ஓலைச்சுவடிகளை ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ நிறுவனம் ஒரு உலக மரபுரிமையாக 2023ஆம் ஆண்டு அறிவித்தது.

இதற்கான விண்ணப்பம் இலங்கை அரசால் தேசிய நூலக சேவைகள் சபைக்கு ஊடாக சில ஆண்டுகளுக்கு முன்னர் அனுப்பப்பட்டிருந்தது. அதனை பரிசீலித்த யுனெஸ்கோ நிறுவனத்தின் சர்வதேச நடுவர்கள் மகாவம்சத்தை உலக மரபுரிமையாக அங்கீகரித்து பிரகடனப்படுத்தினார்கள்.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான மகாவம்சம் இப்போது அந்த பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பத்திரமாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

கி.பி. 1849ல் குடியேற்ற நாடுகளுக்குப் பொறுப்பு வகித்த எமர்சன் டெனன்ட் (James Emerson Tennent) இலங்கையைப் பற்றிய முக்கிய நூல்களை எழுதியவர். Ceylon An Account of the Island என்கிற நூலில் இலங்கையைப் பற்றி மிக முக்கியமான இரண்டு விஷயங்களை அவர் சுட்டிக் காட்டினார். அவர் “சிங்களவர்கள் தான் உலகில் தங்கள் வரலாற்றை தொடர்ச்சியாக எழுதி வருகிறார்கள்” என்று அந்நூலில் கூறுகிறார். அடுத்ததாக, நீர்ப்பாசன தொழில்நுட்பத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய ஒரு சமூகம் உண்டென்றால் அது சிங்களவர்களாகத் தான் இருக்கும் என்றும் அந்த நூலில் அவர் குறிப்பிடுகிறார்.

இலங்கையின் வரலாற்றை உறுதிப்படுத்தும் பிரதான நூல் மகாவம்சமாகும். மகாவம்சத்தின் முதலாவது பிரதி கி.பி 6 ஆம் நூற்றாண்டுக்கு உரியது. அதுவே இன்று நம்மிடம் உள்ள மிகப் பழமையான வரலாற்றுச் சான்றாகும். மகாவம்சத்தை எழுதுவதற்கு மூலாதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டதாக அதில் சில மூல நூல்கள் குறிப்பிடபடுகிற போதும் அவை அனைத்தும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் மகாவம்சமே நமக்கு கிடைக்கிற பிரதான பழமையான நூலாக கொள்ளப்படுகிறது. “வம்ச” கதைகளை பதிகிற மரபொன்று அனுராதபுர ராஜ்ஜிய காலத்தில் இருந்திருக்கிறது. மகாவம்சம் எழுதப்படுவதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பு தீபவம்சம் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது. இது அனுராதபுர கால பிக்குகளால் எழுதப்பட்ட இலங்கையின் வரலாற்றை உள்ளடக்கிய ஒரு நூலாகும். ஆனால் மகாவம்சம் தரும் விபரங்கள் அளவுக்கு அதில் இல்லை.

மகாவம்சம் எழுதப்படுவதற்கு சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் இன்னுமொரு மகாவம்சம் எழுதப்பட்டிருப்பதாக பல பதிவுகள் உள்ளன. அதை “சிஹல அத்த கதா மகாவம்சய”



என்று அழைக்கப்படுகிறது. ஆனால் அவற்றின் பிரதிகள் எதுவும் இதுவரை கிடைத்ததில்லை. ஆனால், அநுராதபுரம் திக்சந்த பிரிவெனாவில் வசித்து வந்த மகாநாம தேரர் கி.பி ஆறாம் நூற்றாண்டில் மகாவம்சத்தை எழுதியபோது ‘சிஹல அத்த கதா மகாவம்சம்’ பயன்படுத்தப்பட்டதாக மகாவம்ச உரையில் (Tika) குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதிலும் மகாவம்சம் அளவுக்கு விபரங்கள் கிடையாது.

